2013, April 16 - 30

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/News/72/2013


முஸ்லிம் இனப்பிரச்சினை என்று ஒன்று உண்டா?

சரத் பொன்சேகாவின் அரசியல் பயணம்

நில சுவீகரிப்பின் விளைவுகள்

மார்கரட் தட்சரின் மரபு

ராஜீவ் கொலை வழக்கு தூக்குத்தண்டனை கைதிகளின் எதிர்காலம்

இந்தியாவில் பிரதமர் வேட்பாளர் பற்றிய விவாதங்கள்

இரு இசை மேதைகளின் மறைவு

பொஸ்டன் குண்டு வெடிப்புக்கள் உணர்த்தும் உண்மை

ஷாவேசின் சோசலிசம் எதிர்நோக்கும் சோதனை




## அமெரிக்கா அடுத்து என்ன செய்யும்?

| | | |
|---|---|---|
| INDIA...............IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 100.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# New City Motors

## Link Lanka

இலவசம்

**லிங்க்**

டெக்சி மீற்றர் உடன்
FM ரேடியோ
மீட்டர் டெக்சி Board, Sticker
USB பென் இணைக்கும் வசதி
MP3 பாடல் கேட்கும் வசதி
Remote Control
மூலம் இயக்கக் கூடிய விசேட வசதி










தவணைக் கொடுப்பனவு முறையிலும் Link Meterஐ கொள்வனவு செய்யலாம். (வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மாத்திரம்)


# New City Motors

## LINK LANKA Technologies

Office : 0112 690 744
Hotline : 0724 990 990
0723 333 933
Galle : 0114 345 960 - 4
0114 345 962

Branches
# 181, Araamiya Place, Dematagoda, Colombo - 09
#121/7c, Ragama Road, Kadawatha
#420/2, Matara Road, Magalla, Galle
Ambalangoda.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமகாலம்
2013, ஏப்ரில் 16-30



**40**
தமிழக சட்டசபை
தீர்மானம் நிறைவேற்றுமா?
எம்.காசிநாதன்



**50**



இரு இசை மேதைகளின் மறைவு
மயூரா

**28** கல்வித்துறையில் இராணுவ மயமாதல் வெளிப்படும் விதம்
அ.மார்க்ஸ்

**35** தனியார் நில சுவீகரிப்பின் விளைவான பிரச்சினைகள்
கிஷாலி பின்ரோ ஜெயவர்தன

**25** இலங்கையில் அமெரிக்காவின் ஈடுபாடுகள்
சாந்தி சச்சிதானந்தம்



பரிசோதனைக் குழாய் குழந்தையின் தந்தை மறைவு
டாக்டர் எம்.கே. முருகானந்தன்



**32**
வடகொரியாவை சர்வதேச நீதிமன்றத்தில் ஐ.நா. நிறுத்த வேண்டும்?
ஜியோவ்றி றொபேர்ட்சன்

**45** டில்லி டயறி
பிரதமர் வேட்பாளர்கள் பற்றிய விவாதங்கள்
எம்.பி.வித்தியாதரன்

**37** மார்கரட் தட்சரின் மரபு
கொலின் ரொட்ஹன்ரர்

**55** பேராசிரியர் சுச்சரித்த கம்லத் மறைவு
பேராசிரியர் எம்.ஏ.நுஃமான்

**37** கவிதை எழுதிச் செல்லும் கூர்ப்பின் கை
மு.பொ.

**15** இலங்கைப் பிரச்சினையில் அமெரிக்காவின் நிலைப்பாடு
என்.சத்தியமூர்த்தி



**19**
முஸ்லிம் இனப்பிரச்சினை என்று ஒன்று உண்டா?
இஸெத் ஹுசெய்ன்

**22** பொன்சேகாவின் அரசியல் பயணம்
குசல் பெரேரா

**25** சோபித தேரோவின் அரசியலமைப்பு சீர்திருத்த யோசனைகள்
குமார் டேவிட்



**64**
கடைசிப் பக்கம்
கலாநிதி சந்திரிகா சுப்பிரமணியன்

*Samakalam focuses on issues that affect the lives of people of Sri Lanka, the neighbourhood and the world*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரிடமிருந்து...

# ஜனாதிபதியின் வரப்பிரசாதம்

இலங்கையில் இதுகாலவரையில் பதவியில் இருந்திருக்கக்கூடிய அரசாங்கத்தலைவர்களில் எவருக்குமே கிடைத்திராத ஒரு பெரிய வரப்பிரசாதம் இன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கிட்டியிருக்கிறது. அரசியல் வீரியமற்ற எதிரணியே அந்த வரப் பிரசாதமாகும். போரில் கிடைத்த வெற்றியை சிங்கள மக்கள் மத்தியில் 'சந்தைப்படுத்தி' அடையக்கூடியதாக இருக்கும் 'அரசியல் ஆதாயம்' மாத்திரமே ஜனாதிபதி ராஜபக்ஷவின் அரசாங்கத்தை தொடர்ந்தும் செல்வாக்குடன் வைத்திருக்கிறது என்பதிற் சந்தேகமில்லை. போர் வெற்றிக்களிப்பின் விளைவான இனவாத உணர்வலைகளுக்குள் ஏனைய பிரச்சினைகள் சகலதையும் மூழ்கடிக்கக்கூடியதாக இருக்கிறது.

இந்த அரசாங்கத்தின் கொள்கைகளும் செயற்பாடுகளுமே முற்றிலும் மக்கள் விரோதமானவையாகும். மக்களின் கவனத்தைத் தொடர்ந்தும் இனவாத உணர்வலைகளுக்குள் அமிழ்த்திவைத்திருப்பதற்காக புதியபாணியிலான இனவாத இயக்கங்களும் வளர்த்தெடுக்கப்பட்டு வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

பொருளாதார நெருக்கடியின் விளைவான வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் மக்கள் திணறிக் கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்தும் அவர்கள் மீது பொருளாதாரச் சுமைகள் ஏற்றப்பட்டவண்ணமேயிருக்கின்றன. அவர்களுக்கு எந்தவித நிவாரணத்தையும் கொடுக்க வேண்டிய அவசியம் குறித்து அரசாங்கத்துக்கு நெருக்குதல்களைக் கொடுப்பதற்கு எந்தவிதமான உருப்படியான போராட்டத்தையும் நடத்தக்கூடிய திராணியற்றவையாக எதிரணிக்கட்சிகள் இருக்கின்ற பரிதாபநிலை.

மக்களை அணிதிரட்டி ஜனநாயகரீதியான அரசியல் மற்றும் தொழிற்சங்கப் போராட்டங்களை நடத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது. ஆனால், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியோ அல்லது இலங்கையின் மூன்றாவது அரசியல் சக்தி என்று கூறிக்கொள்வதில் சில வருடங்களுக்கு முன்னர் பெருமை கண்டவர்களான ஜனதா விமுத்தி பெரமுண (ஜே.வி.பி.)யினரும் எதுவும் செய்ய இயலாத நிலையில் இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. போராட்டங்களை நடத்தப் போவதாக அறிவிப்புக்களை அவர்கள் வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்களே தவிர காரியத்தில் இறங்கும் அறிகுறியைக் காணவில்லை.

அண்மையில் அறிவிக்கப்பட்ட முன்னென்றுமில்லாத வகையிலான மின்கட்டண அதிகரிப்பு ஏற்கெனவே கூரையைப்பிரித்துக்கொண்டு வானளாவ உயர்ந்து சென்றுவிட்ட வாழ்க்கைச்செலவை எங்கே கொண்டு போகுமோ என்று தெரியவில்லை. மக்கள் விழிபிதுங்கி நிற்கிறார்கள். எதிரணிக் கட்சிகளோ போராட்டங்களுக்கு 'சுபநேரம்' பார்த்துக்கொண்டு நிற்கின்றன போலத்தெரிகிறது. ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













### விருந்தினர்கள் எங்கே?

சமகாலத்தின் முதல் இதழில் இருந்து தொடர்ச்சியாக வெளி வந்த விருந்தினர் பக்கத்தை அண்மைய சில இதழ்களில் காண முடியவில்லை. பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த பிரமுகர் கள், அறிஞர்கள், அறிவு ஜீவிகள், மதத் தலைவர்கள், சட்ட வல்லுனர்கள் என்று பல திறத்தினரும் இன்று நாடு எதிர்நோக் குகிற எரியும் பிரச்சினைகள் குறித்து சிந்தனையைத் தூண்டுகிற வகையிலான கருத்துகளை விருந்தினர் பக்கத்தில் வெளியிட்டு வந்தனர். மிகவும் பயனுறுதியுடையதாக விளங்கிய அந்தப் பக்கத்தை மீண்டும் பிரசுரிக்குமாறு ஆசிரியரிடம் கேட்டுக் கொள்கிறோம்.

**எம்.சரவணபவன், மஹியாவ, கண்டி.**

### கூட்டு ஒப்பந்தத்தின் சாதக - பாதகங்கள்

மார்ச் 16-30 சமகாலம் இதழில் கூட்டு ஒப்பந்தமும் பெருந் தோட்டத் தொழிலாளர்களின் வேதனமும் என்ற தலைப்பில் பேராதனை பல்கலைக்கழக விரிவுரையாளர் இரா.ரமேஷ் எழு திய பெருவாரியான புள்ளிவிபரங்களுடன் கூடிய கட்டுரை பல விடயங்களை வெளிச்சம் போட்டுக் காட்டியிருந்தது.

தற்போது மலையக தோட்டத் தொழிலாளர்களின் வேதனம் தொடர்பில் பிரதான தொழிற்சங்கங்களுக்கும் முதலாளிமார் சம்மேளனத்துக்கும் இடையே புதிய கூட்டு ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்டுள்ளது.

கைச்சாத்திட்ட தொழிற்சங்கங்களின் தலை வர்கள் அந்த ஒப்பந்தத்தைத் தங்கள் சாதனை போன்று வர்ணிக்கிறார்கள். மாற்றுத் தொழிற் சங்கத் தலைவர்கள் தோட்டத் தொழிலாளர்க ளுக்குத் துரோகம் இழைக்கப்பட்டுவிட்ட தாக குற்றஞ்சாட்டுகிறார்கள்.

புதிய ஒப்பந்தத்தின் சாதக-பாதகங்கள் குறித்து இரா.ரமேஷ் அவர்களிடமிருந்து விபரமான கட்டுரையொன்று வந்தால் நிலைவரங்களை புரிந்துகொள்ள உதவியி ருக்கும். அடுத்த இதழில் அவரின் கட்டு ரையைப் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கு மாறு சமகாலம் ஆசிரியரிடம் வேண்டிக் கொள்கிறேன்.

**சதா.வசீகரன், தலவாக்கொல்லை.**

### கருத்துக்களை கருத்தால் எதிர்கொள்ள வேண்டும்

'சமகாலம்' பெப்ரவரி 16 - 28 இதழின் 'கடைசிப் பக்கம்' பகுதியில், எழுத்தாளர் க.சட்டநாதனின் கருத்துகளைப் படித்தேன். நமது கலை இலக்கியவாதிகள் பலரைப் போலவே அவரும், பாராட்டுகளை மட்டும் தான் விமர்சனம் என்று கருதுவதாய்த் தெரி கிறது. பட்டியலில் அவர் குறிப்பிட்டுள்ளவர் கள் அவரது கதைகளைப் பாராட்டியவர்களே. அவருடன் மாறுபடுபவர்களை முதலில் ''ஒரு சில விமர்சகர்கள்'' எனக் குறிப்பிட் டாலும், அவரது இலக்கு குறிப்பான ஒரு வரே என்பது, ''இதில் வேடிக்கை என்ன வென்றால் முன்னர் நல்ல எழுத்தாகவும் எழுத்தாளனாகவும் இனங்காணப்பட்டவர் கள் ஏதோ ஒரு காரணம் பற்றி, குறித்த அந்த விமர்சகருடன் முரண்பட்டுவிட்டால் அல்

### டாக்டரின் அருமையான சேவை

டாக்டர் எம்.கே. முருகானந்தனின் அறி வியல் களரி கட்டுரைகள் மிகவும் பயனு டைய புதிய அறிவியல் தகவல்களை அறிந்து கொள்வதற்கு வாய்ப்பைத் தரு கின்றன. இவைபோன்ற கட்டுரைகள் தமி ழில் வெளிவருவதற்கு உதவுகிற சமகாலத் திற்கு எனது பாராட்டுகள்.

**எஸ்.வசந்தாதேவி, வெள்ளவத்தை**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

லது முரண்பட்டுவிட்டதாக அவர் நினைத்துக்கொண்டால், சடுதியாக அப்படைப் பாளிகள் ஓரங்கட்டப்படுவதுடன், விமர்சகனது சின்னத்தனமான தாக்குதலுக்கு இலக்காகிவிடுகிறார்கள் என்ற குறிப்பின் மூலம் தெரிந்துவிடுகிறது. அந்த 'ஒருவரின்' கருத்தைக் கூறி, அதற்குரிய தனது கருத்துகளையும் கூறியிருந்தால் பொருத்தமாயிருந்திருக்கும்.

அந்த ஒருவர் பின்வருமாறுதான் கூறியிருப்பாரென ஒரு வாசகனாக நினைக்கிறேன் :

''....உங்களின் பிந்தியகாலக் கதைகள் பல, அனுபவ வெளிப்பாடாக அமையாது , 'தயாரிப்புகளாக' உள்ளன; 'அந்த மரணமும் அவர்களும்' கதை போலி யதார்த்தக் கதையாக உள்ளது; 'மனமடிப்புகளில்' கதை சிறுகதையாகவன்றி கட்டுரைக் குறிப்புகளாக உள்ளது; பல பாத்திரங்களின் - குறிப்பாகச் சிறுவர் பாத்திரங்களின் பேச்சுமொழி இயல்பற்றுள்ளது; பதின்மூன்று பதினான்கு வயதினரதும் - ஏ.எல். படிக்கும் மாணவர்களதும் பாலியல் 'செயல்களை' விபரிக்கும் கதைகளில், செயற்கையான அம்சங்கள் உள்ளன...''

சட்டநாதன் போன்ற மூத்த எழுத்தாளர் மாற்றுக் கருத்துகளைக் கருத்தால் எதிர்கொள்ளவேண்டும். வெறுமனே ''சின்னத்தனமான தாக்குதல்கள்'' என்று அவற்றைக் கொச்சைப்படுத்திப் 'பாதுகாப்பு'த் தேடக்கூடாது!

**அ.யேசுராசா, குருநகர், யாழ்ப்பாணம்.**

## இராணுவமயமாதலின் பரிமாணங்கள்

இலங்கையில் குறிப்பாக வடக்கு, கிழக்கில் தீவிரப்படுத்தப்பட்டிருக்கிற இராணுவ மயமாதலின் பாதக விளைவுகள் குறித்து தமிழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் அ.மார்க்ஸ் மிகவும் ஆராய்ந்து ஒரு விபரமான கட்டுரையை சமகாலத்திற்கு தந்திருக்கிறார். கடந்த இதழில் வெளியான 'இராணுவ மயமாக்கலின் பரிமாணங்கள்' என்ற தலைப்பிலான அந்தக் கட்டுரை போன்று தமிழ்ப்பகுதிகளில் இடம்பெறுகின்ற பாரதூரமான விடயங்கள் பற்றிய விபரமான தகவல்கள் அடங்கிய கட்டுரைகளை சமகாலம் தொடர்ந்து வெளியிட வேண்டும். பேராசிரியர் மார்க்ஸின் படைப்புகள் அடிக்கடி வெளிவருவதற்கு சமகாலம் வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருமென்று நம்புகிறேன்.

தமிழகத்திலிருந்து வெளியிடப்படுகின்ற வெற்று ஆரவாரத்தனமான பெருவாரியான கருத்துகளுக்கு மத்தியில் மார்க்ஸ் போன்ற அறிவு ஜீவிகளின் கருத்துகள் எமது பிரச்சினைகள் குறித்து அங்கு நிதானமாகச் சிந்திக்கிறவர்களை அடையாளம் காட்டுகின்றன.

**எம்.வசீகரன், கோப்பாய்.**




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 01 இதழ் 20
**2013, ஏப்ரில் 16 - 30**


A Fortnigtly Tamil News Magazine

**எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
**தொலைபேசி : +94 11 7322700**
ஈ-மெயில்: samakalam@expressnewspapers.lk

**ஆசிரியர்**
வீரகத்தி தனபாலசிங்கம்

**உதவி ஆசிரியர்**
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

**ஒப்பு நோக்கல்**
என்.லெப்ரின் ராஜ்



மண்ணின் பிணைப்பிலிருந்து விடுபடுவது ஒரு போதுமே மரத்துக்கு விடுதலையாகி விடாது
- ரவீந்திரநாத் தாகூர்

வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
**சமகாலம்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாக்குமூலம்....

ஜனதா விமுக்தி பெரமுனையை புதிய உச்சங்களுக்கு எடுத்துச் செல்லக்கூடிய ஆற்றலைக் கொண்ட இளைய தலைமுறையினரிடம் பொறுப்புகளை கையளிப்பதன் மூலம் நாட்டில் முன்னுதாரணமொன்றை வகுக்கப்போகிறோம். சக்கரநாற்காலியில் இருந்து கொண்டு கட்சியை வழிநடத்த நான் விரும்பவில்லை. எங்களது வாழ்வு என்றென்றைக்கும் நீடிக்கப் போவதில்லை என்ற யதார்த்தத்தை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். எமது வாழ்க்கைதான் நீடிக்காது. ஆனால், வர்க்கப் போராட்டம் சந்ததிக்குச் சந்ததி நகர்ந்து கொண்டேயிருக்கும்.

கம்யூனிஸ்ட் சர்வதேசியம் என்று அழைக்கப்படுகிற உலக கம்யூனிஸ்ட் ஒன்றியத்தில் ஜனதா விமுக்திப் பெரமுனை (ஜே.வி.பி) உறுப்புரிமை பெறுவதற்கு ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சியின் சிபாரிசு தேவைப்படுகிறது. அந்தச் சிபாரிசை செய்வதற்கு கம்யூனிஸ்ட் கட்சி மறுத்துவருவதால், எம்மால் அந்த கம்யூனிஸ்ட் சர்வதேசியத்தில் இணைய முடியாமல் உள்ளது. நாம் அதில் இணைவதற்கு கம்யூனிஸ்ட் கட்சி அனுமதிக்க வேண்டும்.

*சோமவன்ச அமரசிங்க*





குருநாகலில் விவசாயிகள் மத்தியில் உரையாற்றும் போது செல்போன் இல்லாதவர்கள் கையை உயர்த்துங்கள் என்று கேட்டேன். ஒருவர் கூட கையுயர்த்தவில்லை. இலங்கையர்கள் மத்தியில் சுமார் 2 கோடி செல்போன்கள் பயன்பாட்டில் இருக்கின்றன என்று பெருமையாகக் கூறிக்கொள்பவர்கள் இந்த நிலைவரத்தின் அபத்தத்தைத் விளங்கிக் கொள்ளத் தவறுகிறார்கள். புழக்கத்தில் உள்ள செல்போன்களின் எண்ணிக்கை நாட்டு சனத்தொகைக்குச் சமமானது. அதிகப் பெரும்பான்மையான மக்கள் ஒருவேளை அல்லது இருவேளை தான் சாப்பிடுகிறார்கள். ஆனால், அவர்களிடம் செல்போன் இருக்கிறது.

*சிரேஷ்ட அமைச்சர்*
*டியூ.குணசேகர*

வடமாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் பதவிக்கான வேட்பாளராகப் போட்டியிடுமாறு என்னைப் பலர் கேட்டார்கள். ஆனால், நான் அவர்களுக்கு எந்த உறுதிமொழியையும் வழங்கவில்லை. வடமாகாண சபைத் தேர்தலை நடத்துவதாக 2009ஆம் ஆண்டிலிருந்து அளித்து வந்த உறுதிமொழியை அரசாங்கம் இன்னமும் நிறைவேற்றாதிருக்கும் நிலையில், எதிர்வரும் செப்டெம்பரில் அத்தேர்தலை அரசாங்கம் நடத்தும் என்று இவர்கள் எவ்வாறு நிச்சயமாக நம்பமுடியும்.

*நீதியரசர்*
*சி.வி.விக்னேஸ்வரன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தள சர்வதேச விமான நிலையத்தில் இருந்து ஒரு விமானம் புறப்படுவதற்கு மூன்று விமானிகள் தேவைப்படுகிறது என்று எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் கூறியிருக்கிறார். பறவைகளைக் கலைக்க ஒரு விமானி, யானைகளை விரட்ட இன்னொரு விமானி, விமானத்தை ஓட்ட மூன்றாவது விமானி. அரசாங்கத்தின் மீதுள்ள காழ்ப்பினாலேயே இவ்வாறெல்லாம் கூறுகிறார்கள்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ





அமெரிக்காவில் விரிவான ஆய்வொன்றைச் செய்த மருத்துவ நிபுணர்கள் குழுவொன்று ஜனாதிபதி பராக் ஒபாமாவின் முதலாவது நான்கு வருட பதவிக்காலத்தில் அவரது மனஆரோக்கியத்திலும் உடலாரோக்கியத்திலும் ஏற்பட்ட பாதிப்புகள் அவரது உண்மையான வயதிலும் பார்க்க 10 வருடங்கள் கூடுதலான முதுமையை ஏற்படுத்தியிருப்பதாகக் கண்டு பிடித்திருக்கிறது. அதேபோன்றே சுகாதார அமைச்சராக பதவி வகித்த கடந்த சில வருடங்களில் நானும் விரைவாக முதுமையடைந்துகொண்டு வந்திருக்கிறேன்.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன

அமைச்சர்கள் தங்களின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் எவ்வளவு மின்சக்தியைப் பாவித்தாலும் மாதாந்தம் வெறுமனே 2000 ரூபாவையே கட்டணமாகச் செலுத்துகிறார்கள். எனக்கு இது நன்றாகத் தெரியும். நான் அமைச்சராக இருந்த போது மின் கட்டணமாக 2000 ரூபாவையே செலுத்தினேன். இரவு கார்ப்பந்தயங்களையும் கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளையும் நடத்துகிறவர்களும் அமைச்சர்களும் தாங்கள் பயன்படுத்துகிற முழு மின்சாரத்துக்குமான கட்டணங்களைச் செலுத்த வேண்டும்.

ஐ.தே.க.எம்.பி., மங்கள சமரவீர



**செய்திச்சரம்**

# கூரையைப் பிரித்துக்கொண்டு வானளாவ உயரும் வாழ்க்கைச்செலவு

வாழ்க்கைச் செலவு கூரையைப் பிரித்துக் கொண்டு வானளாவ உயர்ந்து கொண்டே போகிறது. மக்களுக்கு குறைந்தபட்ச நிவாரணத்தைக் கூட தருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய திராணி அரசாங்கத்திடமில்லை.

அண்மையில் மின் கட்டணங்கள் நவீன இலங்கையின் வரலாற்றில் முன்னென்றுமில்லாத வகையில் அதிகரிக்கப்பட்டது. மக்களின் மாதாந்த மின் கட்டணம் 60 சதவீதத்தால் அதிகரிக்கப் போகின்றது. மின்சார சபையை முறையாக நிருவகிக்கத் தெரியாத அரசாங்கம் இழைக்கின்ற தவறுகளுக்காக சாதாரண மக்கள் விலையைச் செலுத்த வேண்டியிருக்கிறது.

மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு சாதாரண மக்களுக்கு அறிவுரை கூறும் அரசாங்கத் தலைவர்களும் அமைச்சர்களும் தங்களது ஆடம்பரங்களைக் குறைப்பதற்கு தயாராயில்லை.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிப்பதற்கான வாராந்த செய்தியாளர் மகாநாட்டில் ஏப்ரில் 18 ஆம் திகதி உரையாற்றிய தகவல், ஊடகத் துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல, குறுகிய காலப் பயன்களுக்காக அல்லது வாக்குகளைப் பெறுவ



தற்காக அத்தியாவசிய சேவைகளுக்கும் பாவனைப் பொருட்களுக்கும் அரசாங்கத்தினால் தொடர்ந்து மானியங்களை வழங்கிக் கொண்டிருக்க முடியாது என்று குறிப்பிட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

அமைச்சரின் இக்கூற்றை பொருளா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரத்தை நிருவகிப்பதில் இருக்கின்ற தனது இயலாமையை அரசாங்கம் ஒப்புக்கொள்வதன் அர்த்தமாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் எம்.பி.யான பொருளாதார நிபுணர் ஹர்ஷா டி சில்வா குறிப்பிட்டிருக்கிறார்.

நவதாராளவாத ராஜபக்ஷ ஆட்சியின் உண்மையான பொருளாதாரச் சிந்தனையை அமைச்சர் ரம்புக்வெல பகிரங்கமாகக் கூறியிருக்கிறார். மக்களின் நலன்களில் தாங்கள் அக்கறை கொண்டவர்களாக இருப்பதாகக்



காட்டிக்கொள்ள அரசாங்கத் தலைவர்கள் தங்களைச் சுற்றிப் போட்டிருந்த போர்வை இப்போது அகற்றப்பட்டுவிட்டது. வறிய மக்களுக்கான மானியங்களை அகற்றுவதற்கு முன்னதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் கோடீஸ்வர அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் தாங்கள் அனுபவிக்கின்ற வரப்பிரசாதங்களைத் துறக்க வேண்டும் என்று ஹர்ஷா டி சில்வா தெரிவித்தார்.

அநாவசியமான திட்டங்களைக் கைவிடுவதுடன், அரசியல்வாதிகளுக்கான வரப்பிரசாதங்களையும் குறைத்து அரசாங்கம் முன் மாதிரியாகச் செயற்பட்டுக் காட்ட வேண்டுமென்று ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரும் சிரேஷ்ட அமைச்சருமான டியூ குணசேகர வலியுறுத்திக் கேட்டிருக்கிறார். ■

செய்திச்சரம்

# சோதனைகளை எதிர்நோக்கும் 21ஆம் நூற்றாண்டுச் சோசலிசம்




ஹியூகோ ஷாவேஸின் 21ஆம் நூற்றாண்டுச் சோசலிசம் அவர் மறை ந்து சில வாரங்களுக்குள்ளாகவே கடுமையான சோதனைக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஷாவேஸின் 'அரசியல் வாரிசான' நிக்கலஸ் மடுறோ ஏப்ரில் 14 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றிருக்கின்ற போதிலும், வெனிசூலா பூராகவும் அரசாங்கத்துக்கு எதிராகவும் ஆதரவாகவும் ஏட்டிக்குப் போட்டியாக ஆர்ப்பாட்டங்கள் மூண்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. ஷாவேஸின் மறைவையடுத்து மக்கள் மத்தியில் தோன்றிய உணர்வலைகள் காரணமாக மடுறோ தேர்தலில் இலகுவாக வெற்றியைப் பெறக் கூடியதாக இருக்குமென்றே எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளரான ஹென்றிக் கப்ரைல்ஸ் ரடோன்ஸ்கியை சுமார் 3 இலட்சம் வாக்குகள் வித்தியாசத்திலேயே மடுறோ தோற்கடித்தார். வெனிசூலா ஐக்கிய சோசலிசக் கட்சியின் வேட்பாளராக நின்ற மடுறோவுக்கு 50.60 சதவீத வாக்குகளும் கப்ரைல்ஸுக்கு



நிக்கலஸ் மடுறோவும் மனைவியும்

49.07 சதவீதவாக்குகளும் கிடைத்தன.

ஷாவேஸ் புற்றுநோய்க்குச் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த நிலையிலும் கூட, கடந்த வருடம் அக்டோபரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் இதே கப்ரைல்ஸை 11 சதவீதவாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்துப் பெரு வெற்றிபெற்றிருந்தார். அது ஷாவேஸ் கண்ட நான்காவது ஜனாதிபதித் தேர்தல் வெற்றி என்பது குறிப்பிடத்தக்கது.

மடுறோவின் வெற்றியை உடனடியாகவே நிராகரித்த கப்ரைல்ஸ் வாக்குகளை மீண்டும் எண்ணவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். அக் கோரிக்கைக்கு முதலில் இணங்கிய மடுறோ வன்முறைகள் மூண்டதையடுத்து மீண்டும் வாக்கு எண்ணிக்கையை நடத்துவதற்கு மறுப்புத் தெரிவித்தார். எதிரணி மீது தாக்குதலைத் தீவிரப்படுத்தியிருக்கும் புதிய ஜனாதிபதி கடுமையான நடவடிக்கையில் இறங்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று குறிப்பிட்டிருந்தார்.

முன்னாள் பஸ் சாரதியும் தொழிற்சங்கத் தலைவருமான 50 வயதான மடுறோ சத்யசாயி பாபாவின் ஒரு தீவிரபக்தர். இவர் எவ்வாறு தற்போது வெனிசூலாவில் தோன்றியிருக்கும் நிலைவரத்தைக் கையாளப் போகிறார் என்பதை முழு உலகமும் நோக்கிக் கொண்டிருக்கிறது.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதையடுத்த நாட்களில் மூண்ட வன்முறைகளில் குறைந்தது பத்துப்பேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லப்பட்டதுடன், பலர் காயமடைந்ததாக செய்திகள் தெரிவித்தன. மடுரோவின் ஆதரவாளர்கள் வெற்றியைக் கொண்டாடுகின்ற அதேவேளை, எதிரணியினர் தேர்தல் முடிவுகளை ஆட்சேபித்து ஆர்ப்பாட்டங்களில் இறங்கியிருந்தார்கள். வீதிகளுக்கு குறுக்கே ரயர்களைப் போட்டு எரித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆயுதப் படைகளுடன் மோதினார்கள்.

ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு தனது நாட்டில் உள்ள அமெரிக்கத் தூதரகம் நிதியுதவி செய்கிறது என்பதற்கான சான்றுகள் தன்னிடம் இருப்பதாகக் கூறிய ஜனாதிபதி மடுரோ அமெரிக்காவுடன் நல்லுறவுகளுக்கு வாய்ப்பேயில்லை. ஏனென்றால் அவர்கள் எப்போதுமே சதிசெய்கிறார்கள் என்று கடுமையாகச் சாடியிருந்தார்.

இதனிடையே வெனிசூலா அரசாங்கம் நாட்டுக்குள் ஊடுருவிய கொலம்பிய சீர்குலைவுவாதிகள் குழுவொன்றைக் கைது செய்திருக்கிறது. இடதுசாரி அரசாங்கங்களின் ஆதிக்கத்தில் உள்ள தென்அமெரிக்கக் கண்டத்தில் கொலம்பியாவில் மாத்திரமே அமெரிக்க சார்பான அரசாங்கம் ஒன்று பதவியில் இருக்கிறது.

தேர்தல் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக நடத்தப்பட்ட



எதிரணி வேட்பாளர்
ஹென்றிக் கப்ரைல்ஸ்

போதிலும், உள்நாட்டில் வலுவான சமூக நலன்புரிக் கொள்கைகளையும் வெளியுறவு விவகாரங்களைப் பொறுத்தவரை, லத்தீன் அமெரிக்கப் பிராந்தியத்தில் அமெரிக்க விரோத அமைப்பொன்றை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட கொள்கையையும் உள்ளடக்கிய 'ஷாவிஸ்மோ' (ஷாவேஸின் கொள்கை) மீதான ஒரு சர்வஜன வாக்கெடுப்பாகவும் வெளியுலகினால் நோக்கப்பட்டது.

கடந்த அக்டோபர் ஜனாதிபதித் தேர்தலில் வெனிசூலாவின் ஒரு கோடியே 90 இலட்சம் வாக்காளர்களில் 80 சதவீதமானோர் வாக்களித்திருந்தனர். ஆனால், ஏப்ரில் 14 தேர்தலில் 78.71 சதவீதவாக்காளர்களே பங்கேற்றனர். வெறுமனே 3 இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் எதிரணி வேட்பாளரை ஷாவேஸின் வாரிசு மடுரோ தோற்கடித்திருப்பதால், 'ஷாவிஸ்மோ' குறித்து வெனிசூலா மக்கள் மத்தியில் எத்தகைய உணர்வு மாற்றம் ஏற்பட ஆரம்பித்திருக்கிறது என்ற கேள்வி எழுகிறது என்று அரசியல் அவதானிகள் கூறுகிறார்கள்.

வாக்குகளை மீண்டும் எண்ண வேண்டுமென்ற எதிரணியின் கோரிக்கையை ஆதரித்திருக்கும் அமெரிக்கா புதிய ஜனாதிபதியாக மடுரோவை அங்கீகரிப்பதா, இல்லையா என்று இன்னமும் தீர்மானிக்கவில்லை என்று கூறியிருக்கிறது.

தேர்தல் முடிவு குறித்து வெனிசூலா எதிரணியினர் ஆர்ப்பாட்டங்களில் இறங்கியிருக்கின்ற போதிலும், தேர்தல் முறை கேடானதல்ல என்று சுயாதீனமான நிபுணர்கள் அபிப்பிராயம் வெளியிட்டிருக்கிறார்கள். மடுரோ ஏப்ரில் 20இல் ஜனாதிபதியினால் பதவிப்பிரமாணம் செய்திருக்கிறார்.

அத்துடன், தென்னமெரிக்காவின் இடதுசாரி அரசாங்கங்கள் மடுரோவுக்கான தங்கள் ஒருமைப்பாட்டை உறுதியாக வெளிக்காட்டியிருக்கின்றன. ■

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# முஷாரப்பின் எதிர்பார்ப்புகள் தவிடுபொடி

சில வருட கால சுய அஞ்ஞாத வாசத்தின் பின்னர் பொதுத் தேர்தலில் போட்டியிடும் நோக்கத்துடன் அண்மையில் நாடு திரும்பிய பாகிஸ்தானின் முன்னாள் இராணுவ ஆட்சியாளர் பெர்வேஸ் முஷாரப்பின் எதிர்பார்ப்புகள் எல்லாம் தவிடுபொடியாகிவிட்டன.

இஸ்லாமாபாத்தின் பயங்கரவாத தடுப்பு நீதிமன்றம் ஏப்ரல் 20ஆம் திகதி அவரை இரு வாரகால விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டது. 2007ஆம் ஆண்டு அவசரகால நிலையை பிரகடனப்படுத்திய பிறகு நீதிபதிகளை சட்டவிரோதமாக தடுப்புக்காவலில் வைத்ததாக முஷாரப் மீது வழக்கு தொடரப்பட்டிருக்கிறது.

வெறுமனே ஐந்து நிமிட நேரமே நடைபெற்ற விசாரணையின் பின்னர் நீதிபதி கௌசார் அப்பாஸ் ஷைடி மே 4ஆம் திகதி வரை முஷாரப்பை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார். அன்றைய தினம் அவர் மீண்டும் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படுவார். பாகிஸ்தான் தலிபான்களிடமிருந்து கொலை அச்சுறுத்தலை முஷாரப் எதிர்நோக்குவதால் இஸ்லாமாபாத்தின் புறநகர்ப் பகுதியில் உள்ள அவரது பண்ணை வீட்டை பாதுகாப்புக் காரணங்களுக்காக அதி



காரிகள் ஒரு தடுப்பு காவல் நிலையமாக பிரகடனப்படுத்தி அவரை அங்கே காவலில் வைத்திருக்கிறார்கள். அவரை யாரும் அங்கே சென்று சந்திக்க முடியாது என்று கடுமையான தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொஸ்டன் மரதன் குண்டுத்தாக்குதல் உணர்த்தும் உண்மைகள்



பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட 9/11 தாக்குதல்களுக்குப் பிறகு அமெரிக்கா தன்னை ஊடுருவ முடியாத ஒரு பாதுகாப்புக் கோட்டையாக மாற்றியிருக்கிறது என்று ஒரு எண்ணம் (அல்லது மாயை என்றும் கூறலாம்) உலகில் நிலவுகிறது. வாஷிங்டன் இதை உத்தியோகபூர்வமாக ஒரு போதுமே கூறிக் கொண்டதில்லை.

அமெரிக்காவின் பாதுகாப்புக் கேடயத்தில் இருக்கக்கூடிய வெடிப்புகளின் ஊடாக பயங்கரவாதிகள் நழுவி உள்ளே வரக்கூடிய சாத்தியக் கூறுகளை பூச்சியமட்டத்துக்கு ஒருபோதுமே கொண்டுவர முடியாது என்று தாயகப் பாதுகாப்பு அதிகாரிகளும் (Homeland Security Officials) நிபுணர்களும் திரும்பத் திரு ம்ப எச்சரிக்கை செய்துவந்திருக்கிறார்கள். பயங்கரவாதத்தைப் பொறுத்தவரை, படுமோசமானது இனிமேல் தங்கள் மண்ணில் நடக்க வாய்ப்பில்லை என்ற நினைப்பிலேயே அமெரிக்கர்கள் இருந்துவந்திருக்கின்றனர் என்பதிலும் சந்தேகமில்லை. அமெரிக்காவின் கொள்கைகள் மூலமாக இதைப் புரிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது.



குண்டுத்தாக்குதல் சந்தேக நபர்களான செச்னிய சகோதரர்கள் ரெமர்லான் (துப்பாக்கிச்சமரில் பலி), சொகார் சர்னேவ் (ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில்)

ஒசாமா பின் லேடனின் மரணத்துக்குப் பிறகு ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கப் படைகளை வாபஸ் பெறுவதை ஜனாதிபதி பராக் ஒபாமா துரிதப்படுத்தியிருக்கிறார். விளைவுகளைப் பற்றி யோசிக்காமல் அவர் இவ்வாறு செயற்படுகிறார் என்று அவர் மீது குற்றச்சாட்டுகளும் தெரிவிக்கப்பட்டன.

9/11க்குப் பிறகு கோடிக்கணக்கான டொலர்கள் செலவு செய்யப்பட்ட போதிலும் கூட, 'பயங்கரவாதிகள்' ஊடுருவக்கூடிய ஓட்டைகளை முற்றுமுழுதாக அமெரிக்காவினால் அடைக்கமுடியவில்லை என்பதே உண்மையாகும்.

ஏப்ரில் 15 ஆம் திகதி மசாசூசெட்ஸ் மாநிலத்தின் பொஸ்டன் நகரில் மரதன் ஓட்டப்போட்டியின் முடிவில் இடம்பெற்ற இரு குண்டு வெடிப்புகள் இந்த உண்மையை பிரகாசமாக உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கின்றன. 9/11க்குப் பிறகு அமெரிக்க மண்ணில் இடம்பெற்றிருக்கக்கூடிய மோசமான குண்டுத்தாக்குதல்கள் இவையாகும். உலகப் புகழ்பெற்ற இந்த பொஸ்டன் மரதன் நிகழ்வில் 8 வயதுச் சிறுவன் உட்பட மூவர் கொல்லப்படவும் 176 பேர் காயமடையவும் காரணமான இந்தத் தாக்குதல்கள் அமெரிக்கர்கள் மத்தியில் நடுக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

இக்குண்டு வெடிப்புகளுக்குப் பொறுப்பானவர்கள் என்று சந்தேகிக்கப்படும் இரு செச்னிய சகோதரர்களில் ஒருவர் மூன்று நாட்கள் கழித்து பொலிஸாருடனான துப்பாக்கிச் சமரில் கொல்லப்பட்டான். மற்றையவன் வாட்டர் ரவுணில் வீடொன்றுக்குப் பின்னால் படகிற்குள் மறைந்திருந்த போது பொலிஸாரினால் பிடிக்கப்பட்டான்.

இதையடுத்து பொஸ்டன் எங்கும் மக்கள் வீதிகளில் இறங்கி கொண்டாட்டங்களில் ஈடுபட்டதைப் பார்க்கும் போது குண்டுத்தாக்குதல்கள் எந்தளவு பீதியையும் பதற்றத்தையும் அவர்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்தது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

அமெரிக்க மண்ணில் பயங்கரவாதத்தை வெற்றிகரமாக முற்றுமுழுதாக 'தொற்றுநீக்கிவிட்டதாக' கூறுவதை இனிமேலாவது வாஷிங்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று சர்வதேச அரசியல் அவதானிகளும் பயங்கரவாதத்தடுப்பு விவகார நிபுணர்களும் கூறுகிறார்கள்.


விரிவானதும் ஆழமானதுமான பயங்கரவாத தடுப்புத் தந்திரோபாயத் திட்டங்களை அமெரிக்கா வகுத்திருக் கிறது என்பதிற் சந்தேகமில்லை. ஆனால், 'பயங்கரவாதம்' என்பது அதன் நாட்கள் முடிந்துவிட்ட ஒரு அச்சுறுத்தல் என்று நினைத்து விட மு டியாது என்பதை அமெரிக்கா ஏற்றுக் கொள்ள வேண்டும். அமெரிக்கா அதன் உள்நாட்டு மற்றும் வெளிநாட் டுக் கொள்கைகளை காலத்துக்குத் தக் கவாறு மாற்றியமைத்துக் கொள்வதற் கும் பயங்கரவாதம் என்பதற்கு எதிரான போர் முடிவடைந்திருக்கக் கூடும். ஆனால், அதனுடனான சண் டைகள் தொடருகின்றன என்பதை ஏற்றுக்கொள்வதற்குமான சந்தர்ப்பம் இதுவாகும்.

9/11க்குப் பிறகு அமெரிக்காவில் கொண்டுவரப்பட்ட தேசபக்த சட்டத் (Us Patriotic Act) தின் கீழ் பெருவா ரியான குடியியல் உரிமைகள் இடைநி றுத்தப்பட்டிருந்தன. இஸ்லாமியர் பற் றிய பீதியும் வெறுப்பும்தலைவிரித் தாடியது. மிகவும் அண்மையில் மாத் திரமே சிறுபான்மை இனங்களைப் பாதுகாப்பதற்கும் பேச்சுச்சுதந்தி ரத்தை உறுதிப்படுத்தவும் அவசிய மான வலுவான சட்டங்கள் இயற்றப் பட்டன.

பொஸ்டன் மரதன் குண்டுத் தாக்கு தல்களையடுத்து 'தாக்குதல் நடத்திய வர்கள் நீதியின் முழுப் பாரத்தையும் உணருவார்கள்' என்று ஒபாமா கூறி யிருந்தார். அவரின் இந்தக் கூற்று மீண்டும் குடியியல் உரிமைகள் இடை நிறுத்தப்படுவதற்கும் இஸ்லாமிய விரோத உணர்வுகள் வலுப்பெறுவ தற்கும் வழிவகுப்பதாக அமையக் கூடாது என்பதே மனித உரிமைகள் ஆர்வலர்களின் எதிர்பார்ப்பாக இருக் கிறது. ■








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையில் அமெரிக்காவின் தொடர்ச்சியான ஈடுபாடுகள்

சர்வதேச சமூகத்தின் தயவில் நம்பிக்கை கொண்டதாக தமிழ்ச் சமூகம் மாறிவிட்டது. இதனால் கொழும்பில் வெளிநாட்டு நிருபர்கள் சங்கத்தினர் மத்தியில் அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் சிசன் நிகழ்த்திய உரை தமிழர் அரசியலில் முக்கியத்துவம் பெறுவதில் ஆச்சரியமெதுவுமில்லை

உள்நாட்டு அரசியல்

அது ஜனாதிபதி ஒபாமாவுக்கு முற்பட்ட புஷ் காலம். நியூ யோர்க்கிலுள்ள ஐ.நா சபையில் கோள வெப்பமாதல் பிரச்சினையை ஒட்டிய விவாதங்கள் நடந்து கொண்டிருந்தன. காபனீரொட்சைட் வெளியிடுதலைக் குறைக்கும் நடவடிக்கைகளைக் கொண்ட க்யோட்டோ ஒப்பந்தத்துக்கு ஆதரவாக அரசுசாரா நிறுவனங்கள் யாவையும் பிரசாரம் செய்து கொண்டிருக்க, அமெரிக்காவோ தனது தலைமைக்குக் கீழ் பல நாடுகளைத் திரட்டிக் கொண்டு இதனை முழுமையாக எதிர்த்தது. சிறிய தீவுகளுக்கும் உலகத்திற்கும் எதிர்காலத்தில் ஏற்படப் போகும் அழிவுகளைப் பற்றி அக்கறை கொள்ளாமலிருக்கிறார்களே யென்ற ஆதங்கத்தில் எம்மில் சிலர் ஐ.நா. பிரதிநிதிகள் உள்ளே நுழையும் வழியில் பதாகைகள் தூக்கி எமது எதிர்ப்பினைக் காட்ட முடிவு செய்தோம். ஒரு ஐந்தாறு பதாகைகளை எழுதிக்கொண்டிருந்திருப்போம். அப்போது நான் ஏதோ வேலையாக அறைக்கு வெளியே சற்றே சென்றேறன். அந்த நேரம் பார்த்து திமுதிமுவென்று நுழைந்தது ஐ.நா (அமெரிக்க) காவல்த்துறை. பதாகைகளையும் அதை எழுதிக்கொண்டிருந்த ஆட்களையும் கேட்ட கேள்வியின்றி அள்ளிக்கொண்டு போனார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டு ஓரிரவு தடுத்து வைக்கப்பட்டது மட்டுமன்றி, ஐ.நா.வுக்குள் நுழைவதற்கான அனுமதி அட்டைகளும் அவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டன.

இந்த அனுபவத்தின் காரணமாக, பின்னாளில் நடந்த வோல் ஸ்ட்ரீட் ஆக்கிரமிப்பு மக்கள் போராட்டமானது அமெரிக்க கிளர்ச்சிக் காவல் துறையினரால் (Riot Police) நசுக்கப்பட்ட படங்களை செய்திகளில் பார்த்தபோது அந்த அனுபவம் உண்மையில் எப்படியிருந்திருக்கும் என்பதை என்னால் கற்பனை செய்யக்கூடியதாயிருந்தது. ஒபாமா நிர்வாகத்தின் கீழும் இந்த நிலைமை முன்னேறவில்லை. மாறாக இன்று, அமெரிக்க நாட்டின் நலன்களை அச்சுறுத்துபவர் என்று கணிக்கப்படும் எந்த அமெரிக்கப் பிரஜையையும் அவர் எந்த நாட்டில் வசிப்பவராயினும் சரி, ஒருவித சட்ட நடவடிக்கைகளுமின்றி ஜனாதிபதி ஒபாமாவின் தீர்மானத்தின் பேரில் கொலை செய்யப்படலாம் என்கின்ற கொள்கை அங்கு அமுலாக்கப்பட்



சாந்தி சச்சிதானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**போர்க் குற்றங்களை விசாரிப்பதை விடவும் இலங்கை அரசின் மீது அழுத்தங்களை பிரயோகிப்பதே அமெரிக்காவின் நோக்கம். அதற்கான மேடையாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை பிரயோகிக்கப்படுகிறது. இங்கு மெல்ல மெல்ல இராணுவ அதிகாரங்களை குவித்துக்கொண்டிருக்கும் சிங்கள அரசு அல்ல. சீனா தான் அமெரிக்காவுக்கு பிரச்சினையாக இருக்கிறது**

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.

டுக் கொண்டிருக்கின்றது.

இவ்வாறு அதிர்ச்சி தரும் முறையில் அமெரிக்காவின் ஜனநாயகம் குறித்த நிலைமை மோசமாகிக் கொண்டு போவதையே நாம் அவதானிக்கின்றோம். இதனால்தானோ என்னவோ வெளிநாட்டுச் செய்தியாளர்களின் சங்கத்துக்கான தனது உரையில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் சிசன், "இலங்கைக்கும் அமெரிக்காவிற்கும் இடையில் பலமான உறவு இருக்கின்றது, அது வரலாறு பூர்வமாக இரு நாடுகளும் பகிர்ந்து கொள்ளும் ஜனநாயக விழுமியங்களின் அடிப்படையில் கட்டப்பட்டுள்ளது" எனக் கூறினார். இரு நாடுகளினதும் ஜனநாயக விழுமியங்களையொட்டிய உறவு பற்றி இதனிலும் விடத் தெளிவாக அவர் விளக்கியிருக்க முடியாது.

இன்றைய ஈழத்தமிழர் அரசியலில் சர்வதேச சமூகத்தின் செல்வாக்கு, குறிப்பாக அமெரிக்க அரசாங்கத்தின் செல்வாக்கு ஓங்கியிருப்பது கண்கூடு. ஐ.நா. மனித உரிமைகள் சபையிலேயோ அல்லது வாஷிங்டனின் பின் அலுவலகங்களிலோதான் தமிழ்த் தேசியத்திற்கான தீர்வு இருக்கின்றது என்று அவர்கள் தீவிரமாக நம்புகின்றனர். இதனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உள்நாட்டிலும் புலம்பெயர் தமிழர்கள் மத்தியிலும் சந்திப்புகளில் தாம் மேற்கு நாடுகளுடன் மேற்கொள்ளும் பிரசார நடவடிக்கைகளைப் பற்றிக் கணக்குக் காட்ட வேண்டியவர்களாகத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இந்த அழுத்தங்களினால்தான் அவர்கள் ஜெனீவாவிற்கும் இந்தத் தடவை செல்ல வேண்டியதாயிற்று. இம்முறை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் ஜெனீவா சென்றதன் காரணமாக எதிர்வரும் வட மாகாணசபைத் தேர்தலில் அவருக்கும் வெற்றி பெறுகின்ற வாய்ப்பு இருக்கின்றதாக யாழ்ப்பாணத்தில் பேசிக்கொள்கின்றார்கள். அந்த அளவுக்கு சர்வதேச சமூகத்தின் தயவில் நம்பிக்கை கொண்டதாக எமது தமிழ்ச் சமூகம் மாறிவிட்டது. இந்தப் பின்புலத்தில் கொழும்பில் வெளிநாட்டு நிருபர்கள் சங்கத்தின் கூட்டத்தில் அமெரிக்கத் தூதுவர் சிசனின் உரை தமிழர் அரசியலில் முக்கியத்துவம் பெற்றிருப்பதில் ஆச்சரியமெதுவுமில்லை. இலங்கையில் ஊடகங்களுக்கெதிரான தாக்குதலினையும், சிறுபான்மை மதக்குழுவினர்களுக்கெதிரான தாக்குதல்களையும், நீதித்துறை பாரபட்சமாக நடப்பதையும் அவர் ஒருசேர கண்டித்திருக்கின்றார். கற்ற பாடங்கள் ஆணைக்குழு போர்க் குற்றங்கள் பற்றிக் கூறாவிட்டாலும் கூட அது பரிந்துரைத்த ஏனைய பல பெறுமதியான விடயங்கள் இதுவரை செயற்படுத்தப்படவில்லை என கடிந்திருக்கிறார். அமெரிக்கா ஏன் இரண்டாவது தடவையாக மனித உரிமைகள் சபையில் பிரேரணையினை சமர்ப்பித்தது என்பதை விலாவாரியாக விளக்கிய அவர், இந்தப் பிரேரணை குறித்தும் இலங்கை அரசாங்கம் தகுந்த நடவடிக்கைகளை எடுக்காவிட்டால், மனித உரிமைகள் பேரவைக்குள்ளும் 'அதற்கு அப்பாலும்'' மாற்று நடவடிக்கைகளை அமெரிக்கா நாடும் என எச்சரிக்கை செய்திருக்கிறார். இங்கு அதற்கு அப்பாலும் என்கின்ற வசனத்தில் இலங்கை அரசுக்கெதிரான பொருளாதாரத் தடைகளை விதித்தல் போன்ற அர்த்தங்களைப் பலரும் கற்பிக்க ஆரம்பித்திருக்கின்றனர்.

அமெரிக்கத் தூதுவரின் உரையைப் பற்றி நாம் கைகொட்டிக்கொண்டாட முன்பு அமெரிக்காவின் கடந்தகாலச் செயற்பாடுகள் சிலவற்றை ஆராய வேண்டியதாக இருக்கின்றது. ஜனநாயகம் குறித்த அதன் அக்கறையின் நேர்மைத்தன்மையின்மையை நாம் முன்னமே கண்டோம். அது மனித உரிமைகள் குறித்துக்கொண்டிருக்கும் அக்கறையும் பல ஓட்டைகளைக் காட்டுகின்றது. எந்தச் சர்வாதிகார அரசும் அது அமெரிக்கக் கைக்கூலியாக இருந்தால் போதும் அதனை ஆதரிக்கத் தயங்குவதில்லை. சவூதி அரேபியா, பஹ்ரெய்ன் போன்ற நாடுகள் இதற்கு நல்ல உதாரணங்கள். 2009இல் பாலஸ்தீனிய மக்கள் ஹமாஸ் அமைப்பை தேர்தலில் வெற்றிகொள்ள வைத்தபோது அதன் அரசாங்கத்தை அங்கீகரிக்க மறுத்ததும் இதே அமெரிக்க அரசுதான். அது சிறுபான்மைத் தேசியங்களின் சுயநிர்ணய உரிமையினை அங்கீகரித்த சந்தர்ப்பங்கள் வரலாற்றில் மிகமிகக் குறைவே. ஈராக் மீது படையெடுப்புக்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தபோது அங்கு தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்துப் போராடிக்கொண்டிருந்த குர்திஷ் மக்களை உசுப்பி விட்டு அவர்கள் வடக்கு ஈராக்கில் ஒரு போர் முன்னணியினை திறப்பதற்கான சகல உதவிகளையும் வழங்கியது. அந்தக் காலத்தில் ஊடகங்களிலெல்லாம் குர்திஷ் மக்களை சதாம் ஹுசெய்ன் எவ்வாறு ஒடுக்கினார் என்ற செய்திகள்தாம். அவர்களும் அமெரிக்கா, ஈராக்கினைக் கைப்பற்றினால் தமது சுதந்திரத்தைப் பெற்றுத்தரும் என்கின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நப்பாசையில் அதற்கு ஒத்தாசை வழங்கினார்கள். ஆனால் ஈராக்கினை வெற்றி கொண்டதற்குப் பிறகு குர்திஷ் மக்களின் கதையையே காணோம். அவர்களை ஈராக்கியர்களிடம் விட்டு விட்டு நடையைக் கட்டி விட்டது அமெரிக்கா.

இலங்கையின் விடயத்திலும்கூட அதன் இரட்டைத் தன்மையை ஒபாமாவின் ஜனநாயகக் கட்சியின் காங்கிரஸ் உறுப்பினரே விமர்சித்திருக்கின்றார். அமெரிக்காவின் காங்கிரஸின் வெளியுறவு உபகுழு உறுப்பினரான ஃபலியோமவெகா (Congressman Eni F.H. Faleomavaega) என்பவர் சமீபத்தில் இலங்கை பற்றிய விசாரணைகளில் கூறிய வாசகங்கள் முக்கியமாகும். "ஐ.நா பிரேரணைகளை உபயோகித்து இலங்கை போன்ற குறைவிருத்தி நாடுகளை நிலைகுலையச் செய்யும் அதே வேளை, எமது இராணுவ கேந்திர நலன்கள் எமது மனித உரிமைகள் நிகழ்ச்சி நிரலைவிட முக்கியமாக இருக்கும் இந்தோனேஷியா போன்ற நாடுகளின் மனித உரிமை மீறல்களைக் கவனிக்காதிருக்கின்றோம். இதனை விட்டுவிட்டு, வேறொரு நல்ல பாதையைத் தெரிவு செய்யுமாறு நான் எனது அரசாங்கமாகிய ஐக்கிய அமெரிக்காவினைக் கேட்டுக் கொள்கின்றேன்" என்று கோரிக்கை விடுக்கிறார். இவர் அதே உரையில் யுத்தத்துக்குப் பின்னரான காலத்தில் எவ்வளவு விரைவாகப் பல அபிவிருத்தித் திட்டங்களை இலங்கை அரசு மேற்கொண்டிருக்கின்றது. அதனைப் பற்றி ஒரு வார்த்தைகூட பிரேரணையில் குறிப்பிடவில்லையே எனக் கடிந்து கொள்கிறார். வியட்நாமில் நாங்களுந்தான் ஏஜென்ட் ஒரேஞ்சைப் பாவித்தோம், 6 மில்லியன் இறாத்தல் கொத்துக் குண்டுகளை வீசினோம், இப்பொழுது அந்த மக்களெல்லாம் வந்து எங்களிடம் கணக்குக் காட்டச் சொல்லிக் கேட்டால் நாம் என்ன செய்வது என்கிறார்! ஜெனீவாப் பிரேரணையும் கடந்த சில வருடங்களைப் பற்றித்தானே கூறுகின்றது. ஆனால் அதற்கு முன்னரான 30 வருட காலத்தில் இலங்கை உலகின் அதி பயங்கரவாதத்தினால் பட்ட பாட்டைக் கருத்தில் எடுக்கவில்லையே எனவும் விசனம் தெரிவித்திருக்கின்றார். இவருடைய கூற்றுகள் அமெரிக்க உயர் மட்ட அரசியல் தலைவர்களினது எண்ண அலைகளை நமக்குக் கோடு காட்டுகின்றது.

இவருடைய கூற்றுகள் மட்டுமல்ல, தூதுவர் சிசன் உட்பட சகல அமெரிக்க இராஜதந்திரிகளினதும் கூற்றுகளை நோக்கினாலும் தவறாது ஒவ்வொரு முறையும் விடுதலைப் புலிகள் எவ்வளவு பெரிய பயங்கரவாதிகள் எனவும் அவர்களின் பயங்கரவாதத்தினை ஒழிப்பதற்கு அமெரிக்க அரசு எவ்வாறு உதவி செய்தது என்பதையும் பற்றி ஒரு சில வார்த்தைகளாவது இருக்கும். உலகத்திலேயே ஆகப்பெரிய பயங்கரவாதி என்னும் பட்டத்தைச் சுமக்கக்கூடிய அரசு அமெரிக்காவாகும். அல்கைதாவை வளர்த்தது அதுதான் என்பது உலகப்பிரசித்தி பெற்ற உண்மை. 2001இல் அல்கைதாவுக்கெதிராக அதன் கொள்கைகள் திரும்பிய பின்னரும்கூட 2007இல் அல்கைதா அமைப்புடன் தொடர்பு கொண்ட இன்னுமொரு பயங்கரவாத அமைப்பான ஜூண்டுல்லா (Jundullah) என்கின்ற அமைப்பிற்கு ஈரானுக்குள் கலகம் விளைவிப்பதற்கான உதவிகளை வழங்கி வளர்க்க ஆரம்பித்தது. அது 1980களில் பயங்கரவாதி என தடை செய்த தலைவர் நெல்சன் மண்டேலாவினை 2008ஆம் ஆண்டுதான் அந்த பயங்கரவாதி நிரலிலிருந்து நீக்கியது. இதிலிருந்து பயங்கரவாதிகளுடன் கூட்டுச் சேருவதைப் பற்றி அமெரிக்காவிற்கு ஒரு பிரச்சினையும் கிடையாது என்பது மட்டுமன்றி யாரைப் பயங்கரவாதி என அந்த அரசு முடிவு செய்கின்றது என்பதையும் அறிந்து கொள்ளலாம். விடுதலைப் புலிகள் தான் தோன்றித்தனமான தொரு பயங்கரவாத அமைப்பல்ல. பெரும்பான்மை மேலாதிக்கத்தின் யதார்த்தத்தின் அடிப்படையில் உருவாகிய அமைப்பு. பயங்கரவாத அமைப்புகளுக்கும் விடுதலைப் போராட்ட அமைப்புகளுக்கும் இடையில் வேறுபாடுகளை உணர்ந்து கொள்ள வேண்டும் என்று முன்பொருமுறை ஹிலாரி கிளின்டன் கூடக் கூறியிருந்தார். உலகத் தமிழ் மக்கள் அனைவரும் விடுதலைப்புலிகளை ஆதரித்தது மட்டுமன்றி, தொடர்ந்தும் தலைவர் பிரபாகரனை மானசீகமாகப் போற்றி வருகின்றனர். இன்றும் அவருடைய படங்களைத் தாங்கிக்கொண்டுதான் தமிழ் நாட்டு மாணவர்கள் தமது போராட்டங்களை முன்னெடுத்திருக்கின்றனர். விடுதலைப் புலிகளை ஓர் விடுதலைப் போராட்ட அமைப்பாக நோக்குவதற்கு அமெரிக்க வெளியுறவுக்கொள்கைக்கு முடியாமல் போனது தமிழ் மக்களின் தேசிய விடுதலைக்கான அபிலாஷைகளை வேரறுக்கும் போக்கென்றே முடிவு செய்யலாம். குறைந்தபட்சம் 2009க்குப் பிற்பட்ட காலத்திலும் கூட இந்தப் போக்கு மாறுவதாகத் தெரியவில்லை. இப்பொழுதெல்லாம் கற்ற பாடங்கள் ஆணைக்குழுவின் பரிந்துரைகள், நல்லிணக்கம் என்கின்ற ரீதியிலேயே அவர்களின் சகல அறிக்கைகளும் வெளியிடப்படுகின்றன. கற்ற பாடங்கள் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் பல சிறப்பானவைதான். ஆனால் அதில் தமிழ் மக்களின் அரசியல் தீர்வைப் பற்றியோ அவர்களின் சுயநிர்ணய உரிமைகள் பற்றியோ ஒன்றும் இல்லையே. இந்த நிலைப்பாடு தமிழ் மக்களின்

**தமிழ் மக்களின் அரசியல் நகர்வுகள் சர்வதேச சமூகம் ஏதோ கொண்டு வந்து மடியில் கொட்டப்போகின்ற என்ற குருட்டு நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கக்கூடாது**

*(18ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உள்நாட்டு அரசியல்



என்.சத்தியமூர்த்தி

# இலங்கைப்பிரச்சினையில் அமெரிக்காவின் நிலைப்பாடு



மிச்சேல் சிசன்

இலங்கை மற்றும் அண்டை நாடான இந்தியா வரையில் மட்டுமே ஒரு காலகட்டம் வரை பேசப்பட்டு வந்த இனப்பிரச்சினை சர்வதேச பிரச்சினையாகி தசாப்தங்கள் உருண்டோடி விட்டன. ஆனால், பிரச்சினை மட்டும் முடிவுக்கு வருவதாக இல்லை. இது ஒரு வகையில் நாட்டில் தொடர்ந்து வாழும் தமிழ் மக்களையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற மிதவாத அரசியல் கட்சிகள் மற்றும் சமூக ஆர்வலர்களையும் சோர்வில் ஆழ்த்தி, அப்பாவி தமிழ் மக்களிடையே ''போராட்ட'' மனப்பான்மையை தோற்றுவிக்கும் வல்லமை உள்ளது.

''போராட்டம்'' என்பதில் இருந்து தமிழ்ச் சமூகம், அதிலும் குறிப்பாக தமிழ் இளைஞர் சமுதாயம் ''போராளி'' மனப்பான்மைக்கு மாறி விடுவதற்கு அதிக நேரம் எடுக்காது. அதற்கு சமகாலச் சரித்திரம் சான்றுரைக்கும். ஆனால், அதனால் யாருக்கு என்ன பயன்? அதற்கு இலங்கையில் விடுபட்டுப்போன தமிழ்ச் சமுதாயம் தயாரா? இது போன்ற நிலைப்பாடுகளால் அவர்கள் அடைந்த பயன் என்ன? அல்லது, அவர்கள் இனி அடையப்போகும் பயன் தான் என்ன?

அண்மையில் தலைநகர் கொழும்பில் இருந்து செயலாற்றும் சர்வதேச

பத்திரிகையாளர் சங்கத்தினரிடையே உரையாற்றிய இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் மிச்சேல் சிசன் இனப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினை மற்றும் இலங்கை ஜனநாயகத்தின் தற்போதைய நிலை என்பன போன்ற விடயங்கள் குறித்து சில கருத்துகளைக் கூறியுள்ளார். அது போலவே கடந்த இரு ஆண்டுகளாக மார்ச் மாதம் ஜெனீவாவில் இலங்கை குறித்து அமெரிக்கா தீர்மானம் கொண்டு வரவேண்டிய நிர்ப்பந்தம் குறித்தும் அந்த நாட்டின் நிலைப்பாட்டை விளக்கியுள்ளார்.

சரியோ, தவறோ, அவரது பேச்சு நாடு தழுவிய ஒரு கருத்துப் பரிமாற்றத்திற்கு வித்திட்டுள்ளது எனலாம். என்றாலும், அரசு தரப்பிலும் சரி, அரசுசாரா அரசியல் மற்றும் அரசியல் அல்லாத குழுக்களிடம் இருந்து எந்தவித மனமாற்றத்தையும் எதிர்பார்த்து விடமுடியாது. இன்னும் சொல்லப்போனால், அமெரிக்கத் தூதுவர் கூறிய கருத்துகளின் அடிப்படையில் இலங்கையில் உள்ள அரசியல் நோக்கர்கள் தங்களது பழைய சரக்குகளையே புதுப்பித்து மீண்டும் கடைபரப்ப முனைவார்கள் எனலாம். அமெரிக்காவைப் போற்றுவோர் அதனை தொடர்ந்து போற்றுவர். அந்த நாட்டைத் தூற்றுவோர் அதனையே தொடருவர். இருபாலாருக்கும் அமெரிக்கத் தூதுவரின் கொழும்பு பேச்சு தற்போதைக்கு அச்சாரமாக அமைந்துள்ளது.

ஜெனீவாத் தீர்மானங்களிலும் சரி, கொழும்புத் தூதுவரின் பேச்சிலும் சரி, அமெரிக்கா, இலங்கை குறித்த தனது தற்போதைய, சமகால நிலைப்பாட்டில் ஜனநாயகத்தையே முன்னிறுத்தி உள்ளது. இலங்கையில் ஜனநாயகமே இல்லை என்று அமெரிக்கா கூறிவிடவில்லை. அதேசமயம், தனி நபர் சுதந்திரம், சமூகங்களின் அரசியல்சாசன ரீதியான அந்தஸ்து, பத்திரிகைச் சுதந்திரம் மற்றும் "நீதியின் மாட்சிமை" குறித்த தற்போதைய நிலைமை ஆகியவற்றை தனித்தனியாகப் பட்டியலிட்டு ஐ.நா. மனித உரிமை கவுன்சில் தீர்மானத்தை, அமெரிக்கா வரைந்துள்ளது. அந்த கருத்துகளையே அந்த நாட்டு தூதுவர் கொழும்பிலும் தெளிவுபடுத்தியுள்ளார்.

இவ்வாறு இலங்கையின் அரசு பிரச்சினைகள் என்று அமெரிக்காவும் பிற மேலை நாடுகளும் அனைத்தையும் ஒரே கூடையில் போட்டு குலுக்கி எடுப்பது, அவை அனைத்திற்குமே ஒன்றாகவோ அல்லது ஒன்றன்பின் ஒன்றாகவோ நல்ல முடிவு கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தான். அல்லது, இலங்கையில் ஜனநாயகம் நன்றாகவே வேரூன்ற வேண்டும் என்ற அமெரிக்காவின் அபரிமிதமான ஆவலே அதற்கான ஒரே காரணம் என்ற எண்ணம் பரப்பப்பட்டு வருகிறது. இது போன்ற கருத்தில் உள்ள அடிப்படைப் பிரச்சினைகளின் தாக்கத்தினால் தான், இது வரை இலங்கை குறித்த எந்தவொரு பிரச்சினையிலும் சர்வதேச சமூகம் தெளிவான எந்தவொரு திட்டத்தையும் முன்வைக்க முடியவில்லை என்பதே உண்மை. இது தான் சுதந்திர இலங்கையின் சரித்திரம் காட்டும் உண்மையும் கூட.

**போர்க் குற்றங்கள் குறித்து இன்னமும் கருத்து தெரிவிக்காத அமெரிக்கா இனப்போர் குறித்து புதிய நிலைப்பாடு எடுப்பது என்னவோ அரசியல் மற்றும் பாதுகாப்பு குறித்த தனது எதிர்பார்ப்புகளை தற்போது இலங்கை அரசு பூர்த்தி செய்ய வேண்டும் என்ற நோக்கத்திலேயே எண்ணத்தோன்றுகிறது**

## நிழல் யுத்தமும் பனிப் போரும்...

இலங்கை சுதந்திரம் அடைந்த காலகட்டத்தில், நாட்டில் தனது ஆதிக்கத்தை முன்னிறுத்த இங்கிலாந்தும் அமெரிக்காவும் முயன்றன என்பதே உண்மை. கடந்த காலத்திய ஆட்சி, ஆளுமையின் அடிப்படையில் இங்கிலாந்து அவ்வாறான முயற்சிகளை எடுத்துவந்தது. இரண்டாம் உலகப் போர் வெற்றிக்குப் பிறகு, அமெரிக்காவைப் பொறுத்தவரை தனது உலகளாவிய ஆளுமையை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமும் அதற்கான வாய்ப்பும் ஒருங்கே அமைந்துவிட்டதாகவே அந்த நாடு கருதி-செயல்பட்டதில் தவறு இல்லை தான்.

ஆனால் அந்த "நிழல் யுத்தம்" அரங்கேறி வந்த காலகட்டத்திலேயே "சோவியத் கம்யூனிஸம்" இலங்கை வரை பரவிவிட்டதோ அந்த இரு மேலை நாடுகளின் அச்சம் அவை இரண்டும் ஒன்றாக செயல்பட வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியது எனலாம். அதேசமயம், ஐம்பதுகளின் தொடக்க காலத்தில், இலங்கையை பாதித்த கடும் உணவுப் பற்றாக்குறையைத் தீர்த்து வைக்க "இறப்பருக்கு அரிசி" என்ற சீனாவுடனான உறவையும் அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை எனலாம். இந்த பின்னணியில், இலங்கையில் வேரூன்றிவிட்ட கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் அவர்களது தொழிலாளர் சங்கங்களின் ஆதிக்கம் ஆகியவையும் அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாக அமைந்து விட்டது. இந்தக் காலகட்டத்தில் உலகளவில் உருப்பெறத் துவங்கிவிட்ட அமெரிக்கா மற்றும் சோவியத் யூனியன் ஆகியவற்றின் இடையேயான "பனிப் போரும்" இலங்கையைப் பாதித்தது எனலாம்.

அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து போன்ற மேலை நாடுகளின் அன்றைய கவலை எல்லாம் உலகளாவிய அவர்களது பாதுகாப்புப் பிரச்சினைகள் குறித்தே இருந்தது எனலாம். எனவே தான், இலங்கைக்கு சுதந்திரம் அளித்த அதேசமயம், கட்டுநாயக்க விமான படைத்தளம் மற்றும் திருகோணமலை துறைமுகம் ஆகிய இரண்டையும் தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள இங்கிலாந்து முடிவு எடுத்து, அதனை செயல்படுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.


தவும் செய்தது. அண்டை நாடான இந்தியாவில், தேசிய காங்கிரஸ் கத்தியின்றி, இரத்தமின்றி, ''தேசியத்தின்'' அடிப்படையில் மட்டுமே நாட்டிற்கான சுதந்திரம் பெற்றுக்கொண்ட பின்னர், மேலை நாடுகளைப் பொறுத்தவரையில் இலங்கையின் சுதந்திரம் தவிர்க்க முடியாத சரித்திர கட்டாயம் ஆகிவிட்டது எனலாம்.

அவர்களைப் பொறுத்தவரையில் இங்கிலாந்திடம் இருந்து சுதந்திரம் பெறும் இலங்கைத் தீவிற்கு தங்கள் ஆதரவு அரசியல் மற்றும் பொருளாதார நிலைப்பாட்டை எடுக்கும் ஓர் உள்நாட்டு அரசே சரியான முடிவாக இருந்திருக்க முடியும். அன்றைய சூழ்நிலையில், ஐக்கிய தேசியக் கட்சி இதற்கு பொருத்தமாக அமைந்ததும் காலத்தின் கட்டாயமே தவிர, வேறெதுவும் இல்லை. நாடு சுதந்திரம் அடைந்த சில வருடங்களுக்குள்ளேயே இடதுசாரிக் கருத்துகளை ஜனநாயக ரீதியாக வலியுறுத்தும் இடதுசாரிகளின் ஆட்சி தொடங்கிய காலகட்டத்தில், இங்கிலாந்து நாட்டின் கட்டுப்பாட்டில் இருந்து கட்டுநாயக்க மற்றும் திருகோணமலை படைத்தளங்களை அகற்றியது மேலைநாடுகளுக்கு கவலையைத் தந்தது என்பதே உண்மை.

## இந்தியா சார்ந்த கொள்கை

இந்தக் காலகட்டம் தொடக்கம், அண்டை நாடான இந்தியா தனது காரணங்களுக்காக அமெரிக்காவை விட சோவியத் யூனியனை நம்பி பாதுகாப்பு ரீதியாகச் செயல்பட வேண்டி வந்ததும் இலங்கையின் துர்ப்பாக்கியமே. அந்த ஒரு காரணத்திற்காக மட்டுமே, இந்திய பெருங் கடல் பகுதியில் இந்தியாவிற்கு ''செக்'' வைப்பதற்காக மட்டுமே மேலை நாடுகள் இலங்கையை ஒரு பொருட்டாக நினைத்து அதனுடன் உறவாடின என்பதே உண்மை. அன்றும் சரி, பின்னர் இனப்பிரச்சினை

**இலங்கை குறித்த எந்தவொரு பிரச்சினையிலும் சர்வதேச சமூகத்தினால் தெளிவான திட்டம் எதையும் முன்வைக்க முடியவில்லை என்பதே சுதந்திர இலங்கையின் சரித்திரம் காட்டும் உண்மையாகும்**

''ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை'' தோற்றுவித்த சாலமன் பண்டாரநாயக்க அன்றைய தினம் ஐக்கிய தேசியக் கட்சியில் தான் பங்குவகித்து வந்தார் என்பதும் கருத்தில் கொள்ளப்படவேண்டிய ஒன்று.

இலங்கையைப் பொறுத்தவரையில், இந்த அனைத்து பிரச்சினைகளுமே சுதந்திரம் கிடைத்த காலம் தொட்டு புரையோடிப் போய்விட்ட விடயம். அந்த காலகட்டத்தில், ''மேற்கத்திய ஜனநாயகம்'' மற்றும் ''சந்தைப் பொருளாதாரம்'' ஆகிய இரண்டையும் உள்ளடக்கி, இலங்கையில், அரசு மற்றும் அரசியல் சார்ந்த ''சோவியத் ஊடுருவலை'' தடுப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் ஆட்சியும் தேவைப்பட்டன. கடந்த 1956 ஆம் ஆண்டு தேர்தலில் பண்டாரநாயக்க தலைமையிலான குறித்த இந்தியா-இலங்கை ஒப்பந்த காலகட்டத்திலும் சரி, இந்தியாவை முன்னிறுத்தியே மேலை நாடுகளின் இலங்கைக் கொள்கை வகுக்கப்பட்டு வந்துள்ளது என்பதும் வருத்தப்படவேண்டிய விடயம்.

அந்த விதத்தில், விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு இலங்கை அரசிற்கு ஆதரவாக இருந்தோம் என்று தூதுவர் சிசன் கூறுவதில் கூட அன்றைய கால அமெரிக்காவின் ''இந்தியா சார்ந்த கொள்கை'' தொக்கி இருந்தது எனலாம். ''பனிப்போர்'' முடிவுற்ற காலகட்டம் தொடக்கம், அரசியல், பாதுகாப்பு மற்றும் பொருளாதாரம் சார்ந்த தனது ஆசியா மற்றும் சர்வதேச கொள்கையை இந்தியாவை மையப்படுத்திய அமெரிக்கா, இலங்கை குறித்த தனது கொள்கையில் அண்டை நாடான இந்தியாவின் அதிருப்திக்கு உள்ளாக விரும்பவில்லை என்பதே உண்மை.

இந்திய-இலங்கை ஒப்பந்த காலத்திலும் அதற்கு வழிவகுத்த முந்தைய காலகட்டத்திலும் கூட அமெரிக்காவின் இலங்கை குறித்த கொள்கை அதன் ''இந்தியா கொள்கை'' சார்ந்தே இருந்தது. கடந்த காலகட்டத்தில், சர்வதேச அளவில் அமெரிக்காவின் இந்திய கொள்கையும் தனது ''எதிரி நாடுகள்'' குறித்த கொள்கையை ஒட்டியே இருந்தது என்பது அடிப்படை விடயம். ''பனிப்போருக்கு'' பிந்தைய காலகட்டத்தில், அமெரிக்கா, வளர்ந்து வரும் சீனாவை தனக்கு ''சரியான போட்டி'' என்ற கருதத்தொடங்கியதால் மட்டுமே, சீனாவின் அண்டை மற்றும் ''எதிரி'' நாடான இந்தியாவை தனது பக்கத்தில் வைத்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

அவ்வாறு இல்லையென்றால், எங்கே சோவியத் யூனியன் காலத்தில் இந்தியாவை கோட்டைவிட நேர்ந்தது போன்ற தவறு மீண்டும் ஏற்பட்டு விடுமோ என்று கவலை கூட அமெரிக்காவிற்கு இருந்திருக்கலாம். போதாததற்கு, இந்தியாவின் ''புதிய பொருளாதாரக் கொள்கை''யும் அமெரிக்காவிற்கு ஏற்புடையதாக இருந்தது. இன்னமும் சொல்லப்போனால், உலக அரங்கில், அதிலும் குறிப்பாக தெற்காசியாவை ஒட்டிய இந்திய பெருங்கடல் பகுதியில் கடந்த காலங்களில் இலங்கை தனக்கு ஆற்றிய பங்கை, பனிப்போருக்குப் பிந்தைய காலகட்டத்தில் இந்தியா ஆற்றும் என்று கூட அமெரிக்கா கருதி செயல்பட்டிருக்கலாம்.

ஆனால், இந்தியா போன்ற பெரிய நாட்டுடனான உறவை அமெரிக்கா மட்டுமே முடிவு செய்து செயல்படுத்திவிட முடியாது என்பதை அந்த நாடு தற்போது புரிந்து கொண்டிருக்கும் என்றே தோன்றுகிறது. அதுவும் குறிப்பாக ''எல்லைப் பிரச்சினை'' என்பன போன்ற இருநாட்டு உறவுகள் குறித்த நிலைப்பாட்டில் இந்தியா, சீனாவுடன் பேச்சுவார்த்தை மூலம் மட்டுமே தீர்வுகளை எட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும் என்ற எண்ணவோட்டமும் உறுதியும் இந்தியாவிடம் தொடர்ந்து தெரியவந்துள்ளது. அந்த நிலையில், இலங்கை என்று மட்டுமல்ல, மாலை தீவு, வங்கதேசம், மியான்மார் போன்ற பாகிஸ்தானுக்கும் அப்பால் சென்று, இந்தியாவின் மற்ற அண்டை நாடுகளுக்கும் அமெரிக்கா தனியாக வலைவீசத் தொடங்கியுள்ளது.

இதன் காரணமாகவே, அண்மைக் காலங்களில் இந்த நாடுகளில் எல்லாம் அமெரிக்காவின் அடிச்சுவடுகள் பதியத் தொடங்கியுள்ளன. இலங்கையின் இனப்பிரச்சினை மற்றும் ஜனநாயக உரிமைகள் குறித்து அமெரிக்கா ஒரு நிலைப்பாட்டை தற்போது எடுத்திருந்தாலும், அந்த நாடு இலங்கையிடம் இருந்து எதிர்பார்ப்பது என்னவோ இது எதுவுமே இல்லை என்றே எண்ணத் தோன்றுகிறது. இன்னமும் சொல்லப் போனால், எண்பதுகளில், ஜனாதிபதி ஜயவர்த்தன, அமெரிக்காவின் சந்தைப் பொருளாதாரக் கொள்கையை தெற்காசியாவில் புகுத்திய முதல் நாடு என்ற பெயரை இலங்கைக்கு பெற்றுக் கொடுத்தார்.

அந்தக் காலகட்டத்தில், அவரது ஜனநாயக மரபுகள் குறித்து அமெரிக்கா கண்டு கொள்ளவில்லை என்பதே உண்மை. அந்த தசாப்தத்தில், அரங்கேறிய "இனக் கொலை" (1983 ஜூலை) மற்றும் "ஜே.வி.பி வேரறுப்பு" ஆகிய இரண்டு ஜனநாயகப் படுகொலைகளையும் அமெரிக்காவோ மற்ற மேலை நாடுகளோ இன்றுவரை கண்டுகொள்ளவில்லை என்பதும் கண்கூடு. அது போன்றே, இலங்கையில் எந்தக் கட்சியின் ஆட்சி நடந்திருந்தாலும், யார் பிரதமராகவோ, "நிறைவேற்று ஜனாதிபதி" யாக இருந்திருந்தாலும், பத்திரிகைச் சுதந்திரம், நீதியின் மாட்சிமை மற்றும் தனி நபர் சுதந்திரம் ஆகிய ஜனநாயக குறியீடுகள் கேள்விக்குறியாகவே இருந்து வந்துள்ளன. அதுவே தற்போதும் தொடர்வது சரியல்ல என்றாலும், அது ஒன்றும் புதியதும் அல்ல.

"ஜே.வி.பி வேரறுப்பு" காலகட்டத்தை குறித்து இன்றும் "போர்க் குற்றங்கள்" குறித்து இன்றும் கருத்துத் தெரிவிக்காத அமெரிக்க அரசு, இனப் போர் குறித்து புதிய நிலைப்பாடு எடுப்பது என்னவோ, அரசியல் மற்றும் பாதுகாப்புக் குறித்த தனது எதிர்பார்ப்புகளை தற்போதைய இலங்கை அரசு பூர்த்தி செய்ய வேண்டும் என்று கருதுவதாகவே எண்ணத் தோன்றுகிறது. அந்த விதத்தில், இலங்கையிடமிருந்து அமெரிக்கா தற்போது எந்த விதமான உதவிகள் அல்லது கொள்கையை எதிர்பார்க்கிறது என்பது வெளிப்பட்டால் மட்டுமே இனப் பிரச்சினையை அமெரிக்கா பகடைக் காயாகப் பயன்படுத்துகிறதா, அல்லது அதற்கு அப்பால் சென்று ஜனநாயக மரபுகள் குறித்த தனது கவலைகளுக்கு வடிகாலைத் தேடுகிறதா என்பதும் புலப்படும். அல்லது புலப்படத் தொடங்கும்! ■

---

*(14ஆம் பக்கத்தொடர்ச்சி)*

பிரச்சினைக்கு எப்படித் தீர்வாகலாம்?

தூதுவர் சிசனின் உரையில் அடுத்து நாம் நோக்க வேண்டியது போர்க்குற்றங்களைப் பற்றிய கூற்றுகளையாகும். அவர் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையைக் கோடு காட்டி போர்க்குற்றங்கள் தொடர்பான நம்பகத்தன்மையான சர்வதேச விசாரணைகள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கின்றார். இலங்கை அரசு தமிழர்களின் உரிமைகளை வழங்குவதற்கு ஓரங்குலமும் நகராது என்பது அமெரிக்காவிற்கு எப்போதோ தெரியும். வேறெந்த நாட்டையும்விட அமெரிக்காவிற்குத்தான் இலங்கை அரசின் போர்க்குற்றங்கள் பற்றிய சகல ஆதாரங்களும் இருக்கின்றன. செய்மதி கொண்டு யுத்த நடவடிக்கைகள் முழுவதையுமே அவர்கள் படம் பிடித்திருக்கின்றனர். வேண்டுமென்றால் அதனை வைத்தே விசாரணைகளை முடுக்கி விடமுடியும். ஏன் இதுவரை செய்யப்படவில்லை என்பதே கேள்வி. சனல்4 விவரணப்படங்களையொட்டியும் இதே கேள்விகள் உண்டு. 2012இல் ஒரு பகுதியும் 2013இல் அடுத்த பகுதியும் வெளியிடுவதற்கு யுத்தம் குறித்த சகல காணொளிகளும் அவர்களுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகவா கிடைத்தன? அந்த நிகழ்ச்சியை இலங்கைக்கு எதிரான பிரேரணைகள் கொண்டுவரப்படும்பொழுதுதானா வெளியிட வேண்டும்? இவையெல்லாவற்றையும் வைத்துக்கொண்டு, உலகெங்கும் இருக்கும் ஆயிரக்கணக்கான தமிழ் சாட்சிகளை வைத்துக்கொண்டு சேர்பியாவில் மிலோசவிச்சுக்கு செய்தது போல சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கினைத் தாக்கல் செய்வதற்கு அமெரிக்காவிற்கு எவ்வளவு நாட்கள் எடுக்கும்? இந்த அவதானிப்புகளின் அடிப்படையில் போர்க்குற்றங்களை விசாரிப்பதைவிடவும் இலங்கை அரசின் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதே அதன் நோக்கம் என்று இதிலிருந்து விளங்கிக் கொள்ளலாம். அதற்கான மேடையாக மனித உரிமைகள் பேரவை உபயோகிக்கப்படுகிறது. இங்கு சீனாதான் அமெரிக்காவிற்குப் பிரச்சினையாக இருக்கின்றது, மெல்ல மெல்ல மத்தியில் இராணுவ அதிகாரங்களைக் குவித்துக்கொண்டிருக்கும் சிங்கள அரசல்ல.

இங்குள்ள தமிழ் மக்களின் அரசியல் நகர்வுகள் இந்த உண்மையின் அடிப்படையில்தான் இருக்கவேண்டுமேயொழிய சர்வதேச சமூகம் ஏதோகொண்டு வந்து மடியில் கொட்டப்போகின்றது என்கின்ற குருட்டு நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு இருக்கக்கூடாது. இந்தத் தெளிவின் பயனாகத்தான் இன்று தமிழ் நாட்டில் மாணவர் போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை அடித்தளமாக வைத்து எமது நடவடிக்கைகளை முன்னெடுப்பதே சாலச் சிறந்ததாகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இஸெத் ஹுசெய்ன்

# முஸ்லிம் இனப்பிரச்சினை என்று ஒன்று இருக்கிறதா?

இலங்கையில் முஸ்லிம் இனப்பிரச்சினை என்று ஒன்று இருக்கிறதா? இல்லையென்பதும் இருக்கிறதென்பதுமே இக்கேள்விக்கான எனது பதிலாகும். உங்களுக்கு அதை விளக்குவேன். உண்மையில் அத்தகைய பிரச்சினை இருக்கிறது. அது சிறிய ஒன்றாகவோ அல்லது முக்கியத்துவமற்ற ஒன்றாகவோ அல்ல, எமது பொது மனஉணர்வின் மத்தியில் குமுறிக் கொண்டிருக்கிறது. பலரை ஆட்டிப்படைக்கவும் ஏன் கிலி கொள்ளவும் செய்துகொண்டிருக்கிறது. அந்த உண்மையை நிராகரிப்பது விபரீதமானதாகும். நான் அவ்வாறு செய்யவில்லை. இடையறாத முஸ்லிம் விரோத பிரசார இயக்கமொன்று தீவிரமடைந்திருக்கிறது என்பதையும் ஹலால் பிரச்சினை பூதாகாரமாக்கப்பட்டதுடன், 1983 ஜூலையில் இன வன்முறை போன்று மீண்டும் ஒரு வன்முறை மூளக்கூடுமென்ற பரவலான அச்சம் இருக்கிறது என்பதையும் பெரும்பாலும் மற்றையவர்களைப் போன்று நானும் ஏற்றுக்கொள்கிறேன். இந்த அம்சங்கள் சகலதுமே ஒரு அர்த்தத்தில் நிச்சயமாக ஒரு முஸ்லிம் இனப்பிரச்சினையாக அமைகின்றன.

ஆனால், எது இந்தப் பிரச்சினையைத் தோற்றுவித்தது? பலவருடங்களாக, முஸ்லிம்களைப்பற்றி சிங்களவர்கள் மத்தியில் பல மன உளைச்சல்கள் இருந்து

உள்நாட்டு அரசியல்




பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றன. ஆனால், நீடித்த குரோதப் பிரசாரமொன்றை முடுக்கிவிடப் படக்கூடிய அளவுக்கு அவை பெரிதாக இருந்ததில்லை. இந்தக் கட்டுரையில் அந்த மன உளைச்சல்கள் பற்றி சுருக்கமாக மாத்திரமே என்னால் கருத்துக் கூறலாம். அது எனது நோக்கத்துக்கு போதுமானது என்று நான் நம்புகிறேன். மிருகபலி பற்றிய பிரச்சினை ஒன்று இருக்கிறது. ஆனால், சில காலத்துக்கு முன்பு இருந்ததைப் போன்று சர்ச்சையைக் கிளப்பக்கூடிய அளவுக்கு முனைப்புடன் அது இனிமேலும் இல்லை. இறைச்சிக்காக கால் நடைகளை வெட்டுவதற்கு முன்னதாக அவற்றை கொடுமைப்படுத்துவது பற்றிய இன்னொரு பிரச்சினையும் இருக்கிறது. ஆனால், அது அரசாங்கத்தினால் ஒழுங்கமைக்கப்படக்கூடிய ஒரு பிரச்சினை என்பது புரிந்து கொள்ளப் பட்டிருக்கிறது. பள்ளிவாசல்களில் தொழுகைக்காக அசான் (பாங்கு) ஒலிப்பது குறித்து அண்மைக்காலமாக சர்ச்சைக்குரிய கருத்து எதுவும் வெளியாகவில்லை. அந்தப் பிரச்சினையின் பெரும்பகுதியை உச்ச நீதிமன்றத்தின் உத்தரவொன்று தீர்த்து வைத்தது இதற்குக் காரணமாக இருக்கலாம். பள்ளிவாசல்கள் பல்கிப் பெருகிக் கொண்டிருக்கின்றன. இவற்றில் சில கொழும்பில் வாகனப் போக்குவரத்துக்கு பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றன. முஸ்லிம் அல்லாதவர்களுக்கு இது எரிச்சலூட்டுகிறது. பௌத்த புனித பிரதேசங்களில் பள்ளிவாசல்கள் இருப்பது குறித்து பிரச்சினைகள் எழுவதாகக் கூறப்படுகிறது. போதைப் பொருள் கடத்தல் வியாபாரம் பெரும்பாலும் முஸ்லிம்களின் ஆதிக்கத்தின் கீழேயே இருப்பதாகக் கூறப்படுகிறது. மட்டுமீறிய செல்வந்தர்களாக அவர்களை சிலர் நோக்குகிறார்கள். இவ்வாறு 'பிரச்சினைகளை' கூறிக்கொண்டே போகலாம்.

இவையெல்லாம் எரிச்சலையும் தப்பபிப்பிராயத்தையும் தோற்றுவிக்கக்கூடும். ஆனால், அதற்காக நிச்சயமாக, இடையறாத குரோதப் பிரசாரமும் தற்போது மேற்கொள்ளப்படுவதைப் போன்ற வகையான முஸ்லிம் விரோத நடவடிக்கைகளும் வேண்டியதில்லை. எவ்வாறெனினும், முஸ்லிம்களுக்கு எதிராக முன்வைக்கப்படுகிற குடிப்பரம்பல் குற்றச்சாட்டு வித்தியாசமான ஒருபடி. முஸ்லிம்கள் மத்தியில் பிறப்பு வீதம் விரைவாக அதிகரிப்பதால் நாட்டில் சிங்களவர்களின் சனத்தொகையை முஸ்லிம்கள் தாண்டுவதற்கும் நீண்ட காலம் செல்லாது என்றும் இலங்கை ஒரு முஸ்லிம் நாடாக மாறிவிடும் என்றும் கூறப்படுகிறது. இது உண்மையில் முட்டாள்தனமான ஒரு எதிர்பார்ப்பாகும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக அதை மறுதலிக்க புள்ளிவிபரங்கள் கிடைக்கவில்லை. சம்பந்தப்பட்ட திணைக்களத்தினால் அந்தப் புள்ளிவிபரங்கள் அண்மையில் வெளியிடப்பட்டிருந்தன. அவை முஸ்லிம்கள் பற்றிய குடிப்பரம்பல் குற்றச்சாட்டை அபத்தமானவை

**முஸ்லிம்களுக்கு எதிரான குரோத பிரசாரத்திற்கும் அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கும் முஸ்லிம்களினால் ஏற்படுத்தப்படுவதாக கூறப்படுகின்ற எந்தவொரு பிரச்சினையின் அடிப்படையிலும் காரண விளக்கம் கூற முடியாது**

என்று நிரூபித்தன. இருந்தபோதிலும் இது மக்கள் மத்தியில் ஆழமான ஏக்கத்தையும் முஸ்லிம்கள் மீது வெறுப்பையும் தூண்டிவிடக்கூடிய ஆபத்தைக் கொண்டிருந்தது. அண்மைய வாரங்களில் முஸ்லிம்களின் குடிப்பரம்பல் பற்றிய குற்றச்சாட்டு மீது கவனம் செலுத்தாமல், முஸ்லிம் விரோத பிரசாரங்களில் ஹலால் பிரச்சினை மீது ஏன் கவனம் குவிக்கப்பட்டது? குடிப்பரம்பல் குற்றச்சாட்டு முட்டாள்த்தனமானது என்று சுலபமாக அம்பலப்படுத்தப்பட்டு விடக்கூடும் என்பதை விளங்கிக் கொண்டதே பெரும்பாலும் அதற்குக் காரணமாக இருந்திருக்கும்.



எப்படியாவது, ஹலால் பிரச்சினையும் கூட, முட்டாள்த்தனமானது என்று நிரூபிக்கப்படக் கூடியதேயாகும். இலங்கையில் இனங்களுக்கிடையேயான உறவுகளின் முழுச் சரித்திரத்திலுமே இதைப் போன்று விசித்திரமான வேறு விவகாரம் இருந்ததில்லை என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. பன்றி இறைச்சி போன்ற சில உணவுவகைகளை முஸ்லிம்கள் தவிர்க்கிறார்கள். அவை ஏனையவர்களுக்கு அனுமதிக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேவேளை, மூன்றாவது வகை சிபாரிசு செய்யப்படாத அல்லது தவிர்க்கப்படுவதே நல்லது என்று கூறப்படுகிற உணவுவகைகளைக் கொண்டதாகும். உட்கொள்ளக்கூடிய உணவு வகைகளுக்கும் உட்கொள் ளக்கூடாத உணவு வகைகளுக்கும் இடையே வேறுபாட்டைக் காண்ப தைப்பற்றி ஒரு 1400 வருடங்களாக முஸ்லிம்களுக்கு எந்தப் பிரச்சி னையும் இருக்கவில்லை. ஆனால், தற்போது தவிர்க்கப்படக்கூடிய அல் லது வேறுகாரணங்களினால் ஆட்சே பத்துக்குரிய பெருவாரியான (செயற் கைச் சேர்மானங்களைக் கொண்ட) உணவுவகைகள் கிடைக்கக்கூடிய தாக இருக்கின்றமையால் பிரச்சினை கள் ஏற்படுகின்றன. அதனால், முஸ் லிம்களுக்கு ஹலால் அத்தாட்சிப் பத்திரம் தேவைப்படுகிறது. அத்த கைய அத்தாட்சிப் பத்திரத்தை மார்க்க அறிஞர்கள் சபையான 'அகில இலங்கை ஜம்மியதுல் உலமா' முஸ்லிம்களுக்கு வழங்கி யது. பிறகு அத்தாட்சிப்பத்திரத்தைக் கேட்டுக்கொள்கிற முஸ்லிம் அல்லா தவர்களுக்கும் அவர்களிடம் ஒரு கட் டணத்தைப் பெற்றுக்கொண்டு அது கொடுத்துவந்தது. இந்த முஸ்லிம் அல்லாத பிரிவினர் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள ஹலால் சந்தைகளுக்குள் புகுந்துகொள்வதில் அக்கறை கொண்டிருந்தனர். இந்தக் காரியங்கள் எல்லாவற்றையும் செய்த விடயத்தில் அகில இலங்கை ஜம்மி யத்துல் உலமா அதன் சட்டரீதியான ஆணைக்கு அப்பாலேயே நடந்து கொண்டது என்பது வெளிப்படையா னது. கட்டணங்களை அறவிட்டதன் மூலமாகக் கிடைத்த இலாபத்தை கெடுதியான நோக்கங்களுக்கு அது பயன்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டப் பட்டது. எனது செய்தியை விளக்குவ தற்கு இவ்வளவும் போதுமென்ப தால் இதற்குமேல் விபரங்களை நான் கூறவேண்டியதில்லை என்று நம்பு கிறேன். தீர்வு காண்பதற்கான துணி வாற்றல் அரசாங்கத்திற்கு இருந்தி ருந்தால், பெரிய கஷ்டமேதுமில்லா மல் தீர்க்க முடிந்திருக்காத பிரச்சி னை என்று இந்த ஹலால் விவகாரத் தில் எதுவுமேயில்லை என்பது எனது கருத்து.

முஸ்லிம்களுக்கு எதிரான குரோ தப் பிரசாரத்துக்கும் அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கும் முஸ் லிம்களினால் ஏற்படுத்தப்படுவதாகக் கூறப்படுகின்ற எந்தவொரு பிரச்சி னையின் அடிப்படையிலும் காரண விளக்கம் கூறமுடியாது. இன்னொரு கோணத்தில் பார்க்கும்போது இந்தப் பிரச்சினைகள் எல்லாம் பெரும் பாலும் மூளைகெட்ட காரியங்களா கவே தோன்றுகிறது. தமிழர்களுக்கு எதிராக என்றுவரும்போது முஸ்லிம் கள் எப்போதுமே சிங்களவர்களின் பக்கமே சார்ந்திருந்தார்கள்; ஐம்ப துக்கு ஐம்பது சிங்களம் மட்டும் சட் டம், பல்கலைக்கழகப் பிரவேசத்துக் கான தரப்படுத்தல் என்று ஒவ்வொரு பிரச்சினையிலும் முஸ்லிம்கள் சிங்க ளவர்களின் நிலைப்பாடுகளுக்கு ஆதரவாகவே செயற்பட்டார்கள். விபரங்களுக்குள் செல்ல வேண்டிய தில்லை, ஏனென்றால் அவை எல் லோருக்கும் நன்கு தெரிந்தவையே. இஸ்லாமிய உலகம் இலங்கையைப் பொறுத்தவரை மிகவும் பெரிய முக்கி யத்துவமுடையது என்பதும் வெளிப் படையானது. விடுதலைப் புலிக ளுக்கு எதிரான போரில் பாகிஸ்தான், ஈரான் மற்றும் லிபியாவினால் மூன்று சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட உத விகள் முக்கியத்துவம் கொண்டவை யாக அமைந்தன என்று நம்பப்படுகி றது.

அண்மைய வாரங்களில் இடம் பெற்றிருக்கின்ற நச்சுத்தனமான குரோதப் பிரசாரங்களும் முஸ்லிம் விரோத நடவடிக்கைகளும் இன் னொரு ஜூலை 83 பற்றிய பீதிகள் பரந்தளவில் கிளம்புவதற்கு வழி வகுத்திருக்கின்றன. முஸ்லிம்கள் தரப்பில் இருக்கக்கூடிய குறைபாடுக ளினதோ அல்லது தவறுகளை இத ற்குக் காரணமாகக் கூறவே முடியாது என்பது வெளிப்படையானது. இந்த நிலைமைக்குக் காரணம் சிங்களவர் கள் மத்தியில் இருக்கின்ற காலத்தால் முற்பட்ட முஸ்லிம் விரோத இன வெறி மாத்திரமேயாகும். 83 ஜூலை யில் தமிழர்கள் முஸ்லிம்களைப் பார்த்து 'அடுத்த இலக்கு நீங்கள் தான்' என்று கூறியதை இன்று பலர் நினைவுபடுத்துகிறார்கள். தமிழர்கள் தோற்கடிக்கப்பட்டுவிட்டார்கள். ஒரு சிறுபான்மை இனமே தவிர அதற்கு அப்பால் எதுவுமில்லை என்ற நிலையை முஸ்லிம்களை ஏற்கச் செய்யவேண்டியதே அடுத்து செய் யப்படவேண்டியிருக்கும் காரியம். எனவே, முஸ்லிம் இனப்பிரச்சினை யென்று ஒன்று பற்றி பேசுவதென்பது தவறான எண்ணத்தைத் தோற்றுவிப் பதாக அமையும். உண்மையான பிரச்சினை சிங்கள இனவெறியே யாகும்.


சிங்கள இனவெறியர்கள் என்று ஒரு பிரிவினர் இருக்கிறார்கள் என்று திடீரென்று ஏற்றுக்கொள்ளப்படுகிற ஒரு மனநிலை தோன்றியிருப்பது உண்மையில் உற்சாகம் தருவதாக இருக்கிறது. சில காலத்துக்கு முன்னர் இது பெரும்பாலும் நினைக்கமுடி யாத ஒன்றாகும். ஜனாதிபதி இந்தச் சொற்பதத்தைப் பயன்படுத்தியிருக்கி றார். நிமால் சிறிபால டி சில்வா, மைத்திரிபால சிறிசேன போன்ற முக் கியமான அமைச்சர்களும் அதைப் பயன்படுத்தியிருப்பதைக் காணக் கூடியதாக இருந்தது. சிங்கள இன வெறி இனப்படுகொலைத்தனமான தாக மாறக்கூடும் என்று பரந்தளவில் உண ர்ந்து ஏற்றுக்கொள்ளப்படுகிற நிலைமையும் உற்சாகம் தருகிறது. இனப்படுகொலைத்தனமான இன வெறியின் ஒரு வெடிப்பே 83 ஜூலை என்று பரவலாக நோக்கப் படுகிறது. இவ்வாறான புரிதல்கள் சக லதையும் நான் உற்சாகம் தருபவை யாகவும் அனுகூலமானவையாகவும் காண்கிறேன். ஏனென்றால் இனப் பிரச்சினைகளை இனவெறியின் விளைவுகளின் அடிப்படையில் விளங்கிக் கொண்டால்தான் மிகவும் பயனுறுதியுடைய வகையில் அவற் றைக் கையாண்டு தீர்வு காணக்கூடிய தாக இருக்கும் என்று நம்புகிறேன். ■

**(இஸெத் ஹுசெய்ன் முன்னாள் இலங்கை இராஜதந்திரி)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரத் பொன்சேகாவின் அரசியல் பயணம்

**சிங்கள பௌத்த பழைமைவாத அரசியல் தலைமைத்துவங்களினால் அங்கீகரிக்கப் பட்ட சிங்கள அரசியலில் உத்தியோகபூர்வ முகத்தை நேர்மையானவர் என்றும் ஊழல் அற்றவர் என்றும் தன்னைக் கூறிக்கொள் கின்ற சிங்கள - பௌத்த தலைவரினால் பதிலீடு செய்ய முடியாது**




சரத்பொன்சேகாவின் ஜனநாயகக்கட்சியை ஒரு அரசியல் கட்சியாக ஏற்றுக்கொண்டு தேர்தல் ஆணையாளர் அண்மையில் பதிவு செய்திருந்தார் அல்லவா? அந்த அறிவிப்பு வெளியானதும் பொன்சேகாவின் புதிய அரசியல் பயணம் பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று சிலர் என்னிடம் கேட்டார்கள். எனது பதிலை வெளிப்படையாகக் கூறவில்லை. ஆனால், எனது நல்ல நண்பன் ஜெயந்த கெடேகொடவுக்காக நான் மிகவும் மனவேதனைப்படுகிறேன். அவர் சூழ்நிலைக்குப் பலியாகி விட்ட ஒருவர். தனது நடிப்புத்தொழிலைக் கைவிட்டுவிட்டு அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் மூலமாகவே அரசியலில் பிரவேசித்தார். பிரசாரத்துக்கு பெருமளவில் நிதியில்லாத போதிலும் கூட, 2001 டிசம்பர் பொதுத்தேர்தலில் கெடேகொட ஒருவாறாக பாராளுமன்றத்திற்குள் பிரவேசிக்க முடிந்தது. 2010 ஏப்ரில் பொதுத்தேர்தலில் மிகவும் எளிமையாக, தெருத்தெருவாக நடந்து பிரசாரம் செய்யும் பழக்கத்தைக் கொண்ட அவர், 2004 ஏப்ரில் பொதுத்தேர்தல், கொழும்பில் பளபளக்கும் ஆடம்பரக் கார்களில் உலா வந்தவர்களினால் அலட்சியம் செய்யப்பட்டார். ஆனால், விதி அவரை விடவில்லை. நீதிமன்றத் தீர்ப்பையடுத்து பொன்சேகா பாராளுமன்றத்தில் இருந்து அகற்றப்பட்ட போது அவருக்குப் பதிலீடாக நண்பன் கெடேகொட சபைக்கு வந்தார். ஃபேஸ்புக்கில் அவர் "ஜெனரல் சரத்பொன்சேகாவைக் காப்பாற்றியவர்" என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறார். இன்னும் சில வருடங்களுக்கு


குசல்பெரேரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்சேகாவு க்கு குடியியல் உரிமைகள் கிடைக்கப்போவதில்லை என்பதால் கெடேகொட முன்னாள் இராணுவத் தளபதியின் பதிலாளராக இருப்பார். புதி தாகப் பதிவு செய்யப்பட்டிருக்கும் ஜனநாயகக் கட்சியின் பிரதித் தலைவராகவும் அவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். கட்சியின் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுனில் சில்வா.

தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்துகொண்ட தனது சொந்தக் கட்சியில் சரத் பொன்சேகா இப்போது யார்... என்ன? சட்ட நுணுக்க முறையில் நோக்குகையில், இரு உபதலைவர்களில் ஒருவரான திருமதி அனோமா பொன்சேகாவின் கணவர் என்பதைத் தவிர, அவர் வேறு எதுவுமாக கட்சிக்குள் இல்லை. ஆனால், அரசியலை சட்ட ரீதியாக வரைவிலக் கணப்படுத்த முடியாது. அரசியலில் பொன்சேகா ஜனநாயகக் கட்சியின் தலைவர். அவர் ஊடகங்களுக்கு பேட்டிகளை அளிக்கிறார், செய்தியாளர் மகாநாடுகளில் உரையாற்றுகிறார், கட்சியின் கொள்கைகளை விளக்குகிறார். எப்படியாகிலும் மெய் நடப்பில் அவரே தலைவர். இதுதான் ஜனநாயகக் கட்சியின் அரசியல் என்று அவர் கூறுகிறார். பொன்சேகாவினால் எதைச் சொல்லக் கூடியதாக இருக்கிறது? தற்போதைய அரசியலில் அவர் எதைப் பிரதிநிதித்துவப்படுத்தி நிற்கிறார்? இக்கேள்விகள் முக்கியமாக நோக்கப்படவேண்டியவை.

ஏற்றுக்கொள்ளப்பட்ட எந்தவொரு அரசியல் கோட்பாட்டின் தகுதியின் அடிப்படையிலும் பொன்சேகா ஒரு அரசியல்வாதி இல்லை. அவர் பிரகடனம் செய்யப்பட்ட மார்க்சியவாதியுமில்லை, முதலாளித்துவ வாதியுமில்லை, அவர் ஒரு இடதுசாரியுமில்லை, நவதாராள வாதியுமில்லை, இடதுசாரி விரோதியுமில்லை, தாராள ஜனநாயகவாதியுமில்லை. அவர் வெறுமனே ஒரு சிங்கள இனவாதி. போரின் முடிவுக்குப் பின்னரான இலங்கையில் சிங்கள பௌத்தர்களுக்கு தலைமை தாங்கக்கூடிய தகுதியைக் கொண்டவராக பொன்சேகா தன்னை நினைத்தார். 2005 நவம்பருக்குப் பிறகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கீழ் போர்க் காலகட்டம் முழுவதற்கும் இராணுவத் தளபதியாக இருந்த தனது நிலையும் விடுதலைப் புலிகளின் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் இருந்து உயிர்தப்பிய தனது அதிர்ஷ்டமும் தனது புதிய பேராவலைச் சாதிப்பதற்குப் போதுமான தகுதியைத் தனக்குத் தந்திருப்பதாக பொன்சேகா எண்ணிக்கொண்டார். 2005 டிசம்பரில் அவர் இராணுவத்திலிருந்து ஓய்வு பெறவிருந்தார்.

பொன்சேகாவை இராணுவத் தளபதியாக நியமிக்கச் செய்வதற்கு கோதாபய ராஜபக்ஷ ஜனாதிபதியை இணங்கச் செய்திருக்காவிட்டால், ஓய்வுக்குப் பிறகு அவர் அமெரிக்காவில் குடியேறியிருப்பார்.

போரின்போது விடுதலைப் புலிகள் அனுகூலமற்றதொரு நிலைக்குத் தள்ளப்பட்டுக்கொண்டிருந்த நிலையில் போருக்கு ஆதரவாக கடுமையான சிங்கள இனவாதப் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டு தென்னிலங்கையில் சிங்கள மக்கள் அணிதிரட்டப்பட்டனர். அப்போது வேறு எந்தவொரு நாட்டிலுமே எந்தவொரு இராணுவ அதிகாரியுமே விடுத்திருக்க முடியாத வகையிலான அரசியல் அறிக்கைகளை வெளியிட்டு பொன்சேகா இராணுவத் தளபதி என்ற வகையில் தனக்கொரு இடத்தை வகுக்க ஆரம்பித்தார். அவர் விடுத்ததைப் போன்ற அறிக்கைகளை வேறுநாடுகளில் இராணுவத் தளபதி விடுத்திருந்தால் இராணுவ நீதிமன்றத்தில் விசாரணைக்கு நிறுத்தப்பட்டிருப்பார்கள் என்பதிற் சந்தேகமில்லை. சிங்கள அரசியல் ஆதரவுடன் போர் முன்னெடுக்கப்பட்ட இலங்கையில் இதுவெல்லாம் சாத்தியமில்லை.

2008 செப்டெம்பர் 23 ஆம் திகதி கனடாவின் ''நாஷனல் போஸ்ற்'' பத்திரிகைக்கு பேட்டியொன்றை அளித்த லெப்டினன்ட் ஜெனரல் பொன்சேகா இலங்கை சிங்களவர்களுக்குச் சொந்தமான நாடு என்பதே தனது உறுதியான நம்பிக்கை என்று சொன்னார். ''ஆனால், இலங்கையில் சிறுபான்மை இனத்தவர்களும் வாழ்கிறார்கள். அவர்களை நாம் எமது மக்கள் போன்றே நடத்துகிறோம். நாம் பெரும்பான்மையினத்தவர்கள். நாட்டு ஜனத்தொகையில் 75 சதவீதமானவர்கள், நாம் ஒருபோதுமே விட்டுக்கொடுக்கப் போவதில்லை. இந்த நாட்டைப் பாதுகாப்பதற்கான உரிமை எமக்குண்டு, சிறுபான்மையினத்தவர்கள் இலங்கையில் எங்களுடன் வசிக்க முடியும். ஆனால், அவர்கள் சிறுபான்மையினத்தவர்கள் என்ற போர்வையின் கீழ் வேண்டத்தகாத கோரிக்கைகளை முன்வைக்க முயற்சிக்கக் கூடாது'' என்று அவர் பேட்டியில் கூறியிருந்தார்.

போர்க்காலகட்டத்தில் இத்தகைய பெருவாரியான கருத்துகளைப் பொன்சேகா வெளிப்படுத்தியிருந்தார். சிங்கள இனத்தின், சிங்கள தேசத்தின் மீட்பராகத் தன்னைக் காண்பிப்பதற்கு அவர் முயற்சித்துக் கொண்டிருந்தார். அரசாங்கக் கட்டுப்பாட்டில் உள்ள டெயிலி நியூஸ் (2008 ஜூலை 19) பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் அவர் ''எந்தவொரு ஜனநாயக நாட்டிலுமே பெரும்பான்மையினத்தவர்களே ஆட்சி அதிகாரத்தில் இருக்க வேண்டும். ஜனத்தொகையில் 74 சதவீதத்தினராக இருக்கும் சிங்கள சமூகத்தினராலேயே இலங்கை ஆட்சி செய்யப்படும் என்று குறிப்பிட்டிருந்தார். தனக்கு ''முழு பிரசித்தம்'' கொடுப்பதற்காக பிரதான போக்கு ஊடகங்களில் தனது சொந்த ஊடகக்கும்பலை அவர் ஏற்பாடு செய்துகொண்ட நேரம் அது.

இதைத்தான் ராஜபக்ஷாக்களினால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. ஜனாதிபதி ராஜபக்ஷவின் கீழ் போரை முன்னெடுப்பதற்கான ஆணை மாத்திரமே பொன்சேகாவுக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த ஆணைக்கு அப்பால் அவர் செல்ல வேண்டுமென்று எதிர்பார்க்கப்படவேயில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக தனது சொந்த சகோதரர் ஓய்வு பெற்ற கேணல் கோதாபய ராஜபக்ஷவை நியமித்த ஜனாதிபதி தனக்கு அடுத்ததாக பாதுகாப்பு விவகாரங்களில் அதிகாரம் கொண்டவர் என்ற அந்தஸ்தை அவருக்கே வழங்கியிருந்தார் என்பது தெளிவானது).வெறுமனே போர் வெற்றிக்கான பெருமைக்கும் புகழுக்கும் யார் உரிமை கோருவது என்பதுடன் சம்பந்தப்பட்ட விவகாரம் அல்ல, போரின் வெற்றிக்குப் பிறகு நாட்டை யார் ஆட்சி செய்வது என்பதைப் பற்றிய விவகாரம்.

பிரதான எதிர்க்கட்சியும் கூட அதே மாதிரியான அரசியல் சிந்தனையின் அடிப்படையிலேயே வாதிட்டுக் கொண்டிருந்தது. போட்டியிடுகின்ற சிங்களத் தலைவர்களில் சிறந்தவர் எவர் என்பதை அடுத்த தேர்தல்கள் தீர்மானிக்கும் என்று அவர்களும் நினைத்தனர். ராஜபக்ஷாக்களின் போர்ப்பிரசாரத்தின் சிங்கள இனவாதப் பிரிவினராக விளங்கிய ஜனதா விமுக்தி பெரமுனை (ஜே.வி.பி) சரத் பொன்சேகாவுக்குள் இருக்கும் ''சீர்கேடான மனிதனை'' முதலில் அணுகியது. சிங்கள அரசியலில் ஒரு பிரதான தீர்மானக் காரணியாக போரே விளங்குகிறது என்று கருதிய ஜே.வி.பி.யினர் ராஜபக்ஷவுக்கு எதிரான சிறந்த தெரிவாக பொன்சேகாவே இருக்க முடியுமென்று நம்பினார். ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக பொன்சேகாவை நியமிப்பதற்காக அவரைச் சுற்றிச் சுற்றிச் வந்தவர்கள் சகலரினதும் ஒரே நோக்கம் ராஜபக்ஷவைத் தோற்கடிக்க வேண்டுமென்பதைத் தவிர, வேறு ஒன்றுமாக இருக்கவில்லை. வேறுபட்ட அரசியலைச் செய்ய வேண்டுமென்ற நோக்கம் எதுவும் அவர்களுக்கு அறவே இருக்கவில்லை. மீண்டும் ஒரு முகமாற்றமே எதிர்பார்க்கப்பட்டது. ராஜபக்ஷவை ஒரு சிங்கள இராணுவ முகத்தினால் பதிலீடு செய்யவேண்டுமென்பதே அவர்களின் எண்ணமாக இருந்தது.

நிலைநாட்டப்பட்டுவிட்ட சிங்கள - பௌத்த பழமைவாத அரசியல் தலைமைத்துவங்களினால் அங்கீகரிக்கப்பட்ட சிங்கள அரசியலின் ''உத்தியோகபூர்வ முகத்தை'' நேர்மையானவர் என்றும் ஊழலற்றவர் என்றும் தன்னைக் கூறிக் கொள்கின்ற ஒரு திடீர்ச் சிங்களத் தலைவர்களினால் பதிலீடு செய்ய முடியாது என்பதை 2010 ஜனவரி ஜனாதிபதித் தேர்தல் நிரூபித்தது. ஏற்றுக்கொள்ளப்பட்ட இனவாத தலைமைத்துவத்தின் வழியில் குறுக்கே நிற்கக்கூடிய காரணிகளாக நேர்மையும் ஊழலற்ற தன்மையும் இல்லை என்பதும் நிரூபிக்கப்பட்டது. எனவே, ''சிறப்பான'' சிங்கள பௌத்தர்கள் என்று தங்களை உரிமை கோரிக்கொள்கிற சிங்களத் தலைமைத்துவத்தினால் ராஜபக்ஷவுக்கு சவால்விடுக்க முடியாது. நேர்மை வாய்ந்ததும் தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்றின் அடிப்படையிலானதுமான பொருளாதார அபிவிருத்தியை உறுதியளிக்கிற, மாகாணங்களுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளிக்கிற ஜனநாயக செயற்திட்டமொன்றை ஆதாரமாகக் கொண்டே ராஜபக்ஷவுக்கு சவாலைத் தோற்றுவிக்கக்கூடியதாக இருக்கும்.

தாங்கள் கீறிய கோட்டைத் தாண்ட முயற்சித்தமைக்காக ராஜபக்ஷாக்கள் சரத்பொன்சேகாவை மிகவும் நேர்மையற்ற முறையில் கொடூரமாக நடத்தினார்கள். அனுசரணையாகச் செயற்பட்டு தேர்தலிலும் போட்டியிட வைத்தவர்களும் தரகு வேலை பார்த்தவர்கள் எல்லோரும் அவரைக் கைவிட்டுவிட்ட நிலையில், அவர் தனக்கென எத்தகைய அரசியல் எதிர்காலத்தை வகுத்துக்கொள்வதற்கு முயற்சித்துக்கொண்டிருக்கிறார்? இது மிகவும் முக்கியமான கேள்வியாகும்.

ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக நின்றுகொண்டு பொன்சேகா எதையெதையெல்லாம் பேசினாரோ, அவற்றைவிட சிறப்பானது எதையும் அவர் இப்போது செய்யவில்லை. அதே பழைய ''அசோகா'' கிளாஸில் அதே பழைய சாராயம் தான். ஆனால், வேறுகைகளை ஒரு தட்டில் வைத்து அவர் அவற்றைப் பரிமாற முயற்சிப்பதாக இருக்கக்கூடும்.

இன்று ராஜபக்ஷாக்களினால் கூட, அதே பழைய சிங்கள - பௌத்த அரசியல் உணர்வு மீது தங்களது செல்வாக்கை மேலும் மேம்படுத்த முடியாதிருக்கிறது. போரின் முடிவுக்குப் பின்னரான காலகட்டத்தில் ராஜபக்ஷாக்கள் விடைகாண எதிர்பார்த்து நின்ற ஏனைய பல விவகாரங்கள் தொடர்பில் பழைய நகர்ப்புற சிங்கள ஆதரவு அவர்களை விட்டுத் தூரவிலகிக் கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. அதனால், பொதுபல சேனாவின் வடிவில் வன்முறைத் தன்மையான- கூடுதலான அளவுக்கு குரூரமான பௌத்தத்தை சிங்கள சமுதாயத்தின் மீது திணிப்பதற்கு ராஜபக்ஷாக்கள் முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். பொதுபலசேனாவில் இருந்து வேறு பல அதையொத்த வன்முறை இனவெறி சிங்களக் குழுக்கள் வெளிக்கிளம்பிக் கொண்டிருக்கின்றன. சிங்கள பௌத்த வன்முறைக் கும்பல்கள் நடத்துகின்ற தாக்குதல்களுக்கு பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள பொலிஸ் வழங்குகிற அனுசரணை, முஸ்லிம் சிறுபான்மையினருக்கு விதிக்கப்படுகின்ற காலக்கெடுக்கள், முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவப் பிரிவுகளுக்கும் எதிராக நிகழ்த்தப்படுகிற குரோதப் பேச்சுகள் எல்லாமே அரச அதிகாரத்தைப் பேணிக் காப்பதில் ''ஒரு மிதவாத சிங்கள பௌத்த யுகத்தின்'' முடிவுக்கு இந்த ஆட்சி வந்துவிட்டது என்பதைப் பிரகாசமாக வெளிக்காட்டுகிறது.

வடக்கில் தமிழ் ஊடகங்களுக்கு எதிராகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீதும் மிகவும் வெளிப்படையாக மேற்கொள்ளப்பட்டுவருகின்ற வன்முறைத் தாக்குதல்களும் இதையே நிரூபித்து நிற்கின்றன. இது ருவாண்டா நாட்டில் ருட்ஸி இனத்தவர்களுக்கு எதிராக ஹூட்டு இனத்தவரால் மேற்கொள்ளப்பட்ட கொடுமைகளை ஒத்ததாக இன்னும் மாறவில்லை. அத்துடன் ஹூட்டு


***(34ஆம் பக்கம் பார்க்க...)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமார் டேவிட்

உள்நாட்டு அரசியல்

# சோபித தேரோவின் அரசியலமைப்பு சீர்திருத்த யோசனைகள்



இலங்கையில் இன்று எந்தவிதமான முன்னேற்றத்தையும் நாம் காணவேண்டுமென்றால் தீர்வு காணப்பட வேண்டியிருக்கும் அடிப்படைப் பிரச்சினை அரசு பற்றியதாகும். பல்வேறுபட்ட கோணங்களில் இதை நீங்கள் முன்வைக்கலாம்; (1) தேசியப் பிரச்சினை (தமிழர்களுடையது மாத்திரமல்ல, முஸ்லிம்கள், மலையகத்தமிழர்கள் மற்றும் மதச் சிறுபான்மையினரினதும் பிரச்சினை) தீர்க்கப்படவேண்டும். (2) நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்பட வேண்டும். (3) புதிய அரசியலமைப்பொன்று வரையப்படவேண்டும்.(4) சர்வாதிகாரம் மற்றும் பெருமுதலாளித்துவ நிறுவனங்களின் ஆதிக்கத்திலான அரசு (Corporatist state) நோக்கிய போக்கைத்தோற்கடிக்க வேண்டும். இவையெல்லாம் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவை. அவற்றைத் தனித்தனியாக வேறு படுத்த முடியாது; அரசு பற்றிய நெருக்கடியின் வேறுபட்ட பக்கங்கள். எனவே, அரசை மீள வடிவமைப்பது ஒரு அடிப்படைப் பிரச்சினையாகிறது. இந்தப் பாதையில் இலங்கை எடுத்து வைக்க வேண்டிய அடிகள் வருமாறு; ராஜபக்ஷ ஆட்சியை அகற்றுதல், புதிய அரசியலமைப்பொன்றை வரைதல், மூன்றாவதாக, புதிய அரசியலமைப்பின் கீழான ஆட்சி நிருவாகம் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதை உறுதிசெய்தல்.



சோபித தேரோவுக்கு நெருக்கமான ஒரு அமைப்பான சமூக நீதிக்கான தேசிய இயக்கம் அவரின் தலைமையின் கீழ் அரசியலமைப்புச் சீர்திருத்த யோசனைகளை வரைந்திருக்கிறது. இந்த யோசனைகள் 2000 அரசியலமைப்பு வரைபு சீர்குலைக்கப்பட்ட பிறகு இலங்கையின் அரசியல் வெளியில் செய்யப்பட்டிருக்கக்கூடிய மிகவும் முக்கியமான ஒரு தலையீடாகும். 'இறுதியில் நல்லறிவின் குரலொன்று ஒலிக்கிறதே' என்று அத்தலையீடு வரவேற்கப்பட்டிருக்கிறது. மதிப்பீடு சரியானதே. முந்திய பந்தியில் குறிப்பிடப்பட்ட மூன்று உடனடிப் பணிகளின் அடிப்படையில் நோக்குகையில், நடுவில் உள்ள பணி, அதாவது புதிய அரசியலமைப்பொன்றை வரைவது குறித்து கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. அடுத்த இரு பணிகளும், அதாவது, இந்த அரசாங்கத்தை அகற்றுவது, தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை நோக்கிய செயன்முறைகளில் முன்னேற்றம் காண்பது என்பவை கவனிக்கப்படவேண்டியவையாக இருக்கின்றன. அதன் காரணத்தினால் தான் நான் 'மூன்றில் ஒன்று மாத்திரம் செய்யப்பட்டிருக்கிறது' என்று கூறுகிறேன். அரசாங்கத்தை மாற்றுவதற்கான தந்திரோபாயம் என்பது அரசியல் எதிரணியினால் தொடர்ந்தும் தீர்வு காணப்படாத விவகாரமாக இருக்கிறது. துரதிர்ஷ்டவசமாகவே சாபித தேரோவின் அரசியலமைப்புச் சீர்திருத்த யோசனைகள் தேசிய இனப்பிரச்சினையைப் பொறுத்தவரை குறைபாடுகளைக்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கொண்டதாக இருக்கிறது. தேசிய சிறுபான்மையினங்களுக்கு அதிகாரம் பரவலாக் கப்படுவதை எதிர்க்கவில்லையென்றாலும், உண்மையில் அது அதுவிடயத்தில் மௌனம் சாதிக்கிறது.

இந்த அரசியலமைப்பு சீர்திருத்த யோசனைகள் நாம் செல்ல வேண்டிய பாதையின் மூன்றில் ஒரு பங்கு தூரத்துக்கு எம்மைக் கொண்டுவருகின்றன. ஆனால், அடுத்த மூன்றில் இரண்டு பங்கு தூரம் இந்த அரசாங்கத்தை அகற்றுவது, அதிகாரப் பரவலாக்கலை உள்ளடக்கக்கூடியதாக அரசியலமைப்புச் சீர்திருத்தங்களில் மாற்றங்களைச் செய்வது - செல்ல வேண்டியிருக்கிறது. இந்த சீர்திருத்த யோசனைகளை நான் விபரித்துக் கூறப்போவதில்லை. ஏனென்றால் அவற்றை வாசகர்கள் வேறு எங்காவது விரிவாகப் பார்க்கலாம். நான் ஒரு சுருக்கக் குறிப்பையே தரவிரும்புகிறேன்.

- நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்பட்டு அதற்குப் பதிலாக பாராளுமன்ற ஆட்சி முறை கொண்டுவரப்படும்.
- ஒரு அரசியலமைப்புப் பேரவை (தற்போது ரத்துச் செய்யப்பட்ட அரசியலமைப்புக்கான 17ஆவது திருத்தத்தில் காணப்பட்ட அதிகாரங்களுடன்) மீண்டும் ஏற்படுத்தப்படும். நீதிபதிகள், சட்டமா அதிபர், பொலிஸ் மா அதிபர்.... போன்ற பதவிகளை நியமிக்கும் அதிகாரத்தை அப்பேரவை கொண்டிருக்கும்.
- கூடுதல் வாக்குகளைப் பெறுபவரே வெற்றியாளராகும் தேர்தல் முறையும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையும் கலந்த தேர்தல்முறைஅறிமுகப்படுத்தப்படும்.
- அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 25 ஆக மட்டுப்படுத்தப்படும். தேர்தல்களுக்குப் பிறகு கட்சி மாறும் எம்.பி.க்கள் தொடர்ந்தும் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள். இதற்காக சட்டவிதிகள் முறையாக நடைமுறைப்படுத்தப்படும்.
- அடிப்படை உரிமைகள் அத்தியாயம் மேம்படுத்தப்படும். அதன் நடைமுறைப்படுத்தல் கூடுதலான அளவுக்கு வலுவானதாக்கப்படும்.
- போலியான காரணங்களுக்காக நீதிபதிகளுக்கு எதிராக குற்றப் பிரேரணைகள் கொண்டுவரப்பட்டு அவர்கள் பதவி நீக்கம் செய்யப்படுவது தடுக்கப்படும்.

## அதிகாரப் பரவலாக்கம் குறித்து ஏமாற்றம்

அரசியலமைப்புச் சீர்திருத்த யோசனைகளின் மையத்தில் ஒரு பெரிய ஓட்டை இருக்கிறது. அதிகாரப் பரவலாக்கத்தைப் பற்றி ஒரு வார்த்தையில்லை. தமிழும் சிங்களமும் அரசகரும மொழிகளாகவும் ஆங்கிலம் 'இணைப்பு' மொழியாகவும் இருக்க வேண்டுமென்று அது பிரகடனம் செய்கிறது. ஆங்கிலத்தின் பாத்திரம் இங்கு தவறாகப் புரிந்துகொள்ளப்படுகிறது. அந்த மொழி அடிப்படையில் நவீனத்துவத்துக்குள்ளும் பரந்த உலகிற்குள்ளும் பிரவேசிப்பதற்கான சாளரம் ஆகும். இணைப்பு மொழி என்பதை விடவும் கூடுதல் முக்கியத்துவம் உடையதாகிறது. நவீன இந்தியாவில் ஆங்கிலம் பயன்படுத்தப்படுகிற முறையைப் பார்க்கவும்.

அரசைப் பற்றியும் சிறுபான்மையினங்களைப் பற்றியும் இந்த அரசியலமைப்பு சீர்திருத்த யோசனைகள் ஆவணம் என்ன கூறுகிறது? சிங்கள - பௌத்த பிரமையைச் சாந்தப்படுத்துவதை நோக்கிய சாய்வு காணப்படுகிறது.

'ஒன்று சேர்ந்து இலங்கை மக்களாக அமையும் மக்கள் குழுக்கள் தங்கள் மொழியை வளர்ப்பதற்கான உரிமையை, தங்களது மதத்தைப் பாதுகாப்பதற்கான உரிமையை, அரசாங்க நிறுவனங்களில் உகந்த பிரதிநிதித்துவத்தைப் பெறுவதற்கான உரிமை உட்பட அரச அதிகாரத்தில் உகந்த பங்கைப் பெறுவதற்கான உரிமையை, தங்கள் வரலாற்றைப் பேணுவதற்கான உரிமையை (பொதுவான இலங்கையர் என்ற அடையாளத்தை எந்தவகையிலும் பலவீனப்படுத்தாத வகையில்) கொண்டிருக்கிறார்கள். இதை குடியரசின் அரசியல் ஐக்கியத்தை அல்லது ஆட்புல ஒருமைப்பாட்டை முற்றுமுழுதாக அல்லது பகுதியாகத் துண்டாடுவதற்கு அல்லது உறுதிப்படுத்துவதற்கு உற்சாகமளிக்கும் ஒன்றாக அல்லது அதிகாரமளிக்கும் ஒன்றாக எந்தவகையிலும் கருதலாகாது'.

இதில் உள்ள ''..அரசாங்க நிறுவனங்கள்'' என்றவரையான சொற்தொடர் நேர்த்தியானதாக இருக்கிறது. பண்புடைய எந்தவொரு அரசியலமைப்பிலும் இதைக்காணலாம். ஆனால், மீதிச் சொற்தொடர், இலங்கையின் ஒற்றையாட்சித் தன்மையை வெளிப்படையாக அங்கீகரிப்பதாக அமைகிறது. சிங்களவர்களைத் திருப்திப்படுத்துவதற்காகவே இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது. சிங்களவர்களுக்கு அளிக்கப்பட்ட இந்த உறுதிமொழியுடன் சேர்த்து சிறுபான்மை இனத்தவர்களுக்கு அதிகாரத்தை பரவலாக்கம் செய்வதற்கான பிரகடனமும் வெளிப்படையாகச் செய்திருந்தால் நிலைமை முற்றிலும் வேறுபட்டதாக இருந்திருக்கும். எவ்வாறெனினும் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற ஒரு கோரிக்கை உட்பட பரந்துபட்ட அம்சங்களைக் கொண்ட இன்னொரு தனியான ஆவணமொன்றையும் சமூக நீதிக்கான தேசிய இயக்கம் வெளியிட்டிருக்கிறது. ஆணைக்குழுவின் அறிக்கை ஓரளவு அதிகாரப் பரவலாக்கத்தை வலியுறுத்துகிறது. எனவே மேற்கூறப்பட்ட அறிக்கையையும் அரசியலமைப்பு சீர்திருத்த யோசனைகளையும் பொறுத்தவரை, அதிகாரப் பரவலாக்கல் தொடர்பில் மேலும் கலந்துரையாடல்களுக்கு இடமிருக்கிறது என்று கருதலாம்.

அதிகாரப் பரவலாக்கலைப் பற்றி அல்லது முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் மற்றும் மதச் சிறுபான்மையினத்தவர்களின் அக்கறைகள் பற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடப்படாதமை சிங்கள - பௌத்த உணர்வுகளை திருப்திப் படுத்தும் நோக்கத்தைக் கொண்டதா கும். இது கண்டிக்கத்தக்கதும். சம்பந் தப்பட்ட அந்தப் பந்தி அதிகாரப் பரவலாக்கலுக்கு விரோதமானதா கவும் சிறுபான்மையினத்தவர்கள் மீது அனுதாபமற்றதாகவும் இருக்கி றது. இந்த அரசிய லமைப்புச் சீர்தி ருத்த யோசனைகளை வரைந்த குழு வில் எத்தனை தமிழர்கள், எத்தனை முஸ்லிம்கள் இருந்தார்கள் என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன். அவ்வாறு தமிழர்களும் முஸ்லிம் களும் இருந்திருந்தாலும் கூட, அவர் கள் எந்தளவுக்கு தங்கள் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடியதாக நம்பகத்தன்மை கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்பது இன்னொரு முக்கியமான அம்சம்.

### அரசியல் வெற்றிடத்தை நிரப்புதல்

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சியை ஒழிப்பது குறித்து சோபித தேரோவின் அரசியலமைப்பு சீர்திரு த்த யோசனைகள் குறிப்பிடுகின்றன என்ற போதிலும், கடந்த வருடம் நான் முன்வைத்ததைப் போன்று ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப் பதை தனியொரு முக்கியத்துவ விவ காரமாக வலியுறுத்தவில்லை. ஜனாதி பதி ஆட்சிமுறையை ஒழித்து பாரா ளுமன்ற ஆட்சி முறையைக் கொண்டுவருவதை நோக்கமாகக் கொண்ட குறைந்தபட்ச வேலைத்திட் டத்துடனான சாத்தியமானளவுக்கு பரந்துபட்ட கூட்டணியொன்றை ஏற் படுத்த வேண்டுமென்று நான் கூறியி ருந்தேன். அதற்குப் பிறகு அரசியல் நிருணசபை புதிய அரசியலமைப்பை வரைய வேண்டும். அடுத்து ஜனாதி பதி ஆட்சி முறையை ஒழிப்பதை வாக்குறுதியாக மக்கள் முன்வைத்து தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதி யாகத் தெரிவானவர் பதவியில் இருந்து இறங்க வேண்டும்- இதுவே எனது யோசனை.

சோபித தேரோவின் அரசிய லமைப்பு சீர்திருத்த யோசனைகள் எனது இந்த யோசனைக்கு விரோத மானதாக இல்லை. ஆனால், ராஜபக் ஷாக்கள் அதிகாரத்திலிருந்து அகற் றப்படாத வரை புதிய அரசியலமை ப்பு ஒன்று சாத்தியமானதேயல்ல.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பது என்ற தனியான வாக்குறுதியை முன் வைத்து தேர்தலில் போட்டியிட வைக்கப்படக்கூடிய வேட்பாளர் யார் என்ற கேள்விக்கு இன்னமும் விடை காணப்படாமலேயே இருக்கி றது. ரணில் விக்கிரமசிங்க நம்பிக் கைக்கு இடந்தராதவர். ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பது தொடர் பில் ஒரு போதுமே அக்கறையுட னான உறுதியான நிலைப்பாட்டை அவர் எடுத்ததில்லை. அத்துடன் மகிந்த ராஜபக்ஷவுடனான அவரின் உறவுகள் சந்தேகத்திற்கிடமானவை. முழு எதிரணியும் ஆதரவளித்தால் வெற்றிபெறக்கூடிய சாத்தியத்தைக் கொண்டவர் சந்திரிகா. ஆனால், அவரை நம்ப முடியாது. ஏனென் றால், அவர் ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதாக இருதடவை கள் அப்பட்டமாகப் பொய் சொன்ன வர். அதனால் நம்பக்கூடியவராகவும் வெற்றி பெறக்கூடிய ஒரு தெரிவா கவும் இருப்பவர் சோபித தேரோ வே. மேலும் அதிகாரப் பரவலாக்கத் தையும் சிறுபான்மையினத்தவர்கள் நேர்மையாக நடத்தப்பட வேண்டு மென்பதையும் ஏற்கக்கூடியதாக சிங் கள-பௌத்தர்களை வழிக்குக் கொண்டுவரக்கூடிய அரசியல் நம் பிக்கைச் சான்றும் மத ரீதியான கீர்த் தியும் அவருக்கு இருக்கிறது.

ஐக்கியப்பட்ட எதிரணியை உரு வாக்குவதற்கு முன்னதாக சிறிய விட யங்கள் தொடர்பில் தகராறுப்பட்டுக் கொண்டு நிற்பது நாம் தோற்றுப்போ வதற்கான நிச்சயமான வழியாகும். விக்கிரமபாகு கருணாரத்ன கூட ரணி லுடனான பிணைப்பைப் பொறுத்த வரை ''போதைக்கு'' அடிமையானவ ரைப் போன்று மாறிவிட்டார் போலத் தெரிகிறது. சோபித தேரோவின் அர சியலமைப்புச் சீர்திருத்த யோசனை கள் அதிகாரப் பரவலாக்கல் தொடர் பில் மௌனம் சாதிப்பது குறித்து விக்கிரமபாகு கண்டன அறிக்கை யொன்றை வெளியிட்டிருந்தார். அதை இதயபூர்வமாக நான் ஏற்றுக் கொள்கிறேன். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப் பது குறித்து விக்கிரமபாகு பேசுகின்ற அதேவேளை, ரணில் விக்கிரம சிங்கவோ என்றாவது ஒருநாள் அரி யாசனத்தில் ஏறி அமருவது குறித்து கற்பனை செய்து கொண்டிருக்கிறார்.

தற்போதைய தருணத்தில் உடனடி யாகத் தேவைப்படுவது என்ன? எதேச்சாதிகாரத்தின் பீடமாக இருக் கும் ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்துக் கட்டுவதற்கான முயற்சியி லேயே முழுக்கவனமும் செலுத்தப் படவேண்டும். ராஜபக்ஷ தோற்கடிக் கப்பட வேண்டும். பிரதான இலக்கிலி ருந்து எமது கவனம் வேறு திசையில் செல்லக்கூடாது.

சாமுவேல் ஜோன்சனின் கூற் றொன்றை உங்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறேன். ''ஒவ்வொரு விவாதத்திலும் முன்னேற்றம் காணப் பட வேண்டும். மனம் படிப்படியா கத் திறக்கும். ஒரு உண்மை இன் னொரு உண்மைக்கு வழிகாட்டும். தவறுகள் அகற்றப்பட்டு சிக்கல் நிலை இல்லாமலாக்கப்படும். சாடைக் குறிப்புகள் தீர்மானங்களாக மேம்பாடடையும்''.

இதேபோன்று நிறைவேற்று அதி கார ஜனாதிபதி ஆட்சி முறையை இல்லாதொழிப்பதை மாத்திரமே தனி யொரு பிரச்சினையாக முன்னெடுக் கின்ற சவாலும் சோபித தேரோவின் அரசியலமைப்பு சீர்திருத்த யோச னைகளும் முன்னெடுக்கப்பட வேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வித்துறையில் இராணுவமயமாதல் வெளிப்படும் விதம்

**இராணுவம் அளிக்கும் தலைமைத்துவப்பயிற்சி உண்மையில் தலைமைப்பண்புகளை காட்டிலும் தலைமைக்கு பணிந்து போகும் பண்பைத்தான் கற்பிக்கின்றது. தலைமைக்கும் கட்டளைக்கும் அடி பணிவது இராணுவத்தின் அடிப்படை விழுமியம். கல்வித்துறையின் விழுமியத்திற்கு இது முற்றிலும் எதிரானது**



அ.மார்க்ஸ்

இந்தக் கட்டுரையைக் கல்வித்துறையிலிருந்துதான் தொடங்கினோம். ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இராணுவத்தின் மூலம் சில வாரக் கட்டாயப் பயிற்சி அளிக்கப்படுவதைத்தான் அந்த நண்பர் குறிப்பிட்டார். அவ்வாறு பயிற்சி அளிக்கப்பட்ட இலங்கையின் முக்கியமான தேசியப் பள்ளிகளின் முதல்வர்கள் (principals) 23 பேருக்குச் சென்ற (2012) அக்டோபர் முதல் வாரத்தில் கர்னல் (brevet colonels) பட்டம் வழங்கப்பட்டது. பட்டத்தை வழங்கி உரையாற்றிய பாதுகாப்புத் துறைச்செயலர் கோதாபய, அதற்கு முந்திய நாள் நடைபெற்ற உலகக் கோப்பைப் பந்தயத்தில் இலங்கை கிரிக்கெட் அணி தோல்வியுற்றதைப் பற்றிக் கூறி, தலைமைத்துவப் பயிற்சியின்மைதான் இத்தகைய தோல்விகளுக்குக் காரணம் என்றார்.

சகல துறைகளையும் அதிவேகமாக இராணுவமயமாக்கும் பணியை முன்னெடுத்து வரும் கோதாபயவுக்கு இந்தத் தலைமைத்துவப் பயிற்சி குறித்து ஒரு சிந்தனை உண்டு. இதற்கு முந்திய ஆண்டுதான் (2011) இனி பல்கலைக்கழகங்களில் சேரும் மாணவர்கள் அனைவரும் மூன்று வாரம் இராணுவ முகாம்களுக்குச் சென்று இராணுவப் பயிற்சி பெறுவதை அவர் கட்டாயமாக்கியிருந்தார். ஆங்கில மொழி மற்றும் கணினிப் பயன்பாடுகளில் பயிற்சி அளித்தல், கிராமப்புற மாணவர்களுக்கு உயர் நாகரீக வழமைகளைக் கற்றுக் கொடுத்தல் என்றெல்லாம் இதற்குப் பல நோக்கங்களும் நியாயங்களும் முன்வைக்கப்பட்டன. தலைமைத்துவப் பயிற்சி (leadership training) என இதற்குப் பெயரும் சூட்டப்பட்டது. ஆங்கிலம், கணினி முதலியவற்றில் பயிற்சி அளிக்க இராணுவத்திற்கு என்ன தகுதி உள்ளது? என யாரும் கேட்டுவிட இயலாது. மேனிலைப் பள்ளி மாணவர்கள் சிலர், ஆளும் கட்சியைச் சேர்ந்த அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் எல்லோருக்கும் கூட அடுத்த




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுத்து இத்தகைய தலைமைத்துவப் பயிற்சி அளிக்கப்பட்டது. கோதாபய வின் இந்தத் தலைமைத்துவப் பயிற்சி என்பது உண்மையில் தலைமைப் பண்புகளைக் காட்டிலும் தலைமைக் குப் பணிந்து போகும் பண்பைத்தான் கற்பித்தது. இராணுவம் வேறென்ன சொல்லித் தரும். தலைமைக்கும், கட் டளைக்கும் அடி பணிவதுதான் இரா ணுவத்தின் அடிப்படை விழுமியம். கல்வித் துறையின் விழுமியங்களு க்கு இது முற்றிலும் எதிரானது என் பதை விளக்க வேண்டியதில்லை. சமத்துவம், அறிவுத்துறைச் சுதந்தி ரம், எல்லாவற்றையும் கேள்வி கேட் பது என்பவைதான் கல்வித்துறை விழுமியங்கள். ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையில் கூட ஏற்றத்தாழ்வான உறவு இருக்கலா காது என்பதுதான் பாவ்லோ ஃப்ரெ ய்ரே போன்ற கல்வியியலாளர்கள் முன்வைத்த கோட்பாடு. இத்தகைய கல்வி விழுமியத்திற்கும் படிநிலை அதிகார அமைப்பு (hierarchy). மற் றும் கேள்வியின்றிப் பணிதல் என்கிற இராணுவ அறங்களுக்கும் என்ன தொடர்பு? ஒரு நல்ல படைவீரன் என்போன் எப்போதும் கொல்வதற் கும் கொல்லப்படுவதற்கும் தயாராக உள்ளவன். அவன் சமூகப் பிரச்சி னைகள் எல்லாவற்றையும் மோத லாக (conflict) அணுகுவான். இந்த மோதலை ஒடுக்கிக் கட்டுப்படுத்தும் கருவியாக அவன் வன்முறையை வழிபடுவான்.

கல்விச்சாலை இதற்கு நேரெதிரா னது. இங்கே regimentationக்கு இட மில்லை. நமது மாணிக்கவாசகர், கல்வி என்னும் பல்கடல் பிழைத்தும் என்று கூறுவது நினைவுக்கு வருகி றது. தன்னை இறைவழியிலிருந்து பிறழ்த்திச் செல்லத்தக்க ஆபத்து களான ஈர்க்கிடை புகா இளமுலை மாதர் தன் கூர்த்த நயனக் கொள்ளை முதலானவற்றிலிருந்து அவர் தப்பிப் பிழைத்த கதையைச் சொல்லி வரும் போதுதான் இவ்வரிசையில் அவர் கல்வி என்னும் பல்கடலிலிருந்து தப் பித்ததையும் சொல்லி வைப்பார். சரி யான கல்வி முறை விசுவாசத்திற்கு எதிராகிவிடும் என்பதுதான் இதன் பொருள்.

இன்று ராஜபக்ஷக்களுக்கும் அது தான் கவலை. தங்கள் மீதான கேள்வி முறையற்ற விசுவாசத்திற்கு கல்வி முறை கேடு விளைவித்து விடக் கூடாது என்பது அவர்களின் அச்ச ங்களில் ஒன்று. இந்தப் பின்னணியி லிருந்துதான் இளம் உள்ளங்களில் எல்லையற்ற விசுவாசம், அதிகாரத் திற்குப் பணிதல் முதலான இராணுவ விழுமியங்களைப் பதிக்கும் தலை மைத்துவப் பயிற்சிக்கு அழுத்தம் கொடுக்கப்படுகிறது.

இத்தகைய சேவைகள் இராணுவத்து டன் நெருக்கமாக உறவைப் பேணுப வை. முன்னாள் இராணுவ வீரர்க ளைக் கொண்டே இவை இயக்கப் படுகின்றன. டென்டர் மூலம், குறை ந்த ஊதியத்தைக் கோரும் சேவைக ளைத்தான் தேர்வு செய்ய வேண்டும் என்கிற அரசு விதியிலிருந்து இதற்கு மட்டும் விலக்கு உண்டு என்கிறார் கல்வித்துறையில் மேற்கொள்ளப் படும் இராணுவ மயம் குறித்து அரிய தகவல்களுடன் கூடிய கட்டுரை ஒன்றை எழுதியுள்ள ஷமலா குமார் (EPW, feb 16, 2013).




கேணல்களாக அதிபர்கள்

இன்று கல்வி நிறுவனங்களுக்குள் இராணுவத்தின் இருப்பு, குறிப்பாக உயர் கல்வி நிறுவனங்களில் அதன் இருப்பு அதிகமாகியுள்ளது என்பது மேலோட்டமாகப் பார்த்தாலே தெரி யும். இராணுவ அதிகாரிகள் அடிக் கடி வந்து செல்லுதல், வளாகங்களுக் குள் இராணுவ வாகனங்கள் நிறுத்தி வைக்கப்படுதல், இராணுவப் பிரசா ரக் கருத்தரங்குகள் நடத்துதல் முதலி யன சில எடுத்துக்காட்டுகள். பல் கலைக்கழகங்கள் எப்போதும் கண் காணிக்கப்பட வேண்டியவையாக வும், கலகம் உருவெடுக்கக்கூடிய களங்களாகவும் கருதி அணுகப்படுவ தற்கு ஒரு எடுத்துக்காட்டு வளாகங்க ளுக்குள் பாதுகாப்புச் சேவைகள் (security services) பெரிய அள வில் பணியமர்த்தப்பட்டிருப்பது.

அப்படியும் மாணவர்கள் ஏதும் போராட்டங்களைத் தொடங்குவார் களாயின் அதை ஒரு உள்நாட்டுக் கல வரம் (insurgency)என்கிற அளவில் அரசு எதிர்கொள்கிறது. ராகிங் (rag-ging) குறித்து உயர் கல்வித்துறை அமைச்சர் அளித்த பேட்டி ஒன்றில், பல்கலைக்கழகங்களில் பயங்கரவாத அச்சத்தை உருவாக்குபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்பேன். இரா ணுவத்தைக் கொண்டுவந்து மாண வர்களைக் கட்டுப்படுத்த அரசு விரும்பவில்லை. வடக்கில் எப்படிச் செய்தோமோ அதேபோல (இங்கும்) ஜனநாயகத்தை நாங்கள் பாதுகாத் தாக வேண்டும். இன்று பல்கலைக்கழ கங்கள் (கண்ணிவெடி) நீக்கப்படாத பகுதிகளாக (uncleared areas) உள்ளன. நாம் அவற்றை விடுதலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தாக வேண்டும் எனக் கூறியதை ஷமலா சுட்டிக் காட்டுகிறார் (Sunday Observer, July, 2010). மாணவர் அதிருப்தி குறித்துப் பேசுவதற்கு அமைச்சர் எத்தகைய மொழியைத் தேர்வு செய்துள்ளார் எனப் பாருங்கள். பேச்சோடு நிற்கவில்லை. போராடும் மாணவர்கள் மீது கடுமையாக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு அமைச்சர் வந்தபோது, அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள் என 21 மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். உயர் கல்வியில் சீர்திருத்தம் செய்வது என்கிற பெயரில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் கருத்துகளை எல்லாம் கவனத்தில் கொள்ளாமல் மிகவும் இரகசியமாக திட்டம் ஒன்றை அரசு உருவாக்கியது. இந்த இரகசியத் திட்டம் பல்கலைக்கழக ஆசிரியர் மன்றத்தால் அம்பலப்படுத்தப்பட்டது. 1940இல் உருவாக்கப்பட்ட பல ஜனநாயகக் கூறுகளைக் கொண்ட உயர் கல்விக் கொள்கையுடன் இது பல அம்சங்களில் முரண்பட்டிருந்தது. மாணவர் சங்கம் இதற்கு எதிராகப் போராட்டத்தில் இறங்கியவுடன் பெரிய அளவில் இராணுவம் கொணர்ந்து வளாகத்தில் குவிக்கப்பட்டது. போராடிய மாணவர் சங்கத் தலைவர்களின் பெற்றோர்களை இராணுவத்தினர் நேரடியாகவும் இடைத் தரகர்கள் மூலமாகவும் அச்சுறுத்தினர்.

கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிப்பது உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்துச் சமீபத்தில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க பல்கலைக் கழக ஆசிரியர் கூட்டமைப்பு (FUTA) நடத்திய போராட்டத்திற்கு ஆதரவாகப் பல்கலைக்கழக மாணவர் கூட்டமைப்பு (IUSF) களத்தில் இறங்கியபோதும் இவ்வாறே மாணவர் மற்றும் ஆசிரியர் சங்கத் தலைவர்கள் மிரட்டப்பட்டனர். சஞ்சீவ் பண்டார என்கிற மாணவத் தலைவர் கைதும் செய்யப்பட்டார். போராடிய பல்கலைக் கழக ஆசிரியர் கூட்டமைப்பை அரசு தனது எதிரியாகச் சித்திரித்தது. ஆசிரியர்களுக்கு வெளிநாட்டுத் தொடர்பு உள்ளது எனவும், விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்துள்ளனர் என்றும் குற்றம் சாட்டியது. தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி ஊடகங்களில் போராட்டத்திற்கு எதிராகப் பிரசாரம் செய்தது. தொழிற்சங்கம் நடத்துபவர்களுடன் எல்லாம் நான் பேசமாட்டேன் என்றார் ஜனாதிபதி.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் சென்ற ஆண்டு மாவீரர் தின (நவம்பர் 27, 2012) அஞ்சலி செலுத்துவதற்காக அமைதியாகக் கூடியிருந்த மாணவர்கள் மீது இராணுவம் மேற்கொண்ட அடக்குமுறை நடவடிக்கைகளை அனைவரும் அறிவோம். கந்தர்மடம் தர்ஷாநாந், கனகசுந்தரசாமி ஜெனமே ஜெயன், சண்முகம் சொலமன், வி.பவானந்தன் என நான்கு பேர் அன்று கைது செய்யப்பட்டு வெலிக்கடை இராணுவத் தடுப்பு முகாமில் அடைக்கப்பட்டனர். அவர்கள் மீது பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் (PTA) பிரயோகிக்கப்பட்டது. வாய்மொழியாக அனுமதி மறுக்கப்பட்ட பின்னும் மாணவர்கள் ஊர்வலம் செல்ல முயன்றதாலேயே நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதாகியது என பி.பி.சி செய்தியாளரிடம் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க கூறினார். ஏன் அவர்களுக்கு தியாகிகள் நினைவைப் போற்ற அனுமதி மறுக்கப்பட்டது என வினவியபோது, தேச நலனுக்காக (For the betterment of the country) அப்படிச் செய்ய நேரிட்டது என அவர் பதிலுரைத்தார். கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்ய வேண்டுமென மாணவர்கள் போராட்டத்தைத் தொடர்ந்தனர். சில வாரங்களுக்குப் பின் ஆசிரியர்களும் பெற்றோர்களும் கட்டளைத் தளபதியை அணுகி கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யக் கோரிய போது அவர், அம் மாணவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் எனக் கனவு காணாதீர்கள் எனப் பதிலுரைத்தார். பல்கலைக்கழகத்தை விரைவாகத் திறக்குமாறு நிர்வாகத்தை எச்சரிக்கவும் செய்தார் (The Independant, Dec 22, 2012). கைது செய்யப்பட்ட மாணவர்களில் இருவர் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை.

றுகுணு மற்றும் சப்ரகமுவ பல்கலைக்கழகங்களில் ராகிங் பிரச்சினை எழுந்த போதும் அதைக் கடுமையாக எதிர்கொண்ட அரசு அதிக அளவில் மாணவர்களைக் கைதும் செய்தது. எல்லாவற்றையும் பாதுகாப்பு என்கிற கண்ணாடி வழியே பார்ப்பது என்கிற நிலை இப்போது பல்கலைக்கழக நிர்வாகம், மாணவர் சங்கம் ஆகியவற்றிலும் ஊடுருவி விட்டது என்கிறார் ஷமலா. மாணவர் அமைப்புகள் மேலிருந்து கீழான அதிகார அமைப்புகளாகவும், முடிவெடுப்பதில் ஜனநாயகத் தன்மையற்றவையாகவும் உள்ளன. ராகிங் முறை, புதிதாக வரும் மாணவர்களை வழிக்குக் கொண்டுவந்து, அவர்களைப் பல்கலைக்கழகக் கலாசாரத்திற்குத் தகவமைப்பதாக உள்ளது. மாணவிகள் குறித்த அணுகுமுறை மரபு வழிபட்ட ஆணாதிக்கப் பார்வையின்பாற்பட்டதாகவே உள்ளது என்கிறார் ஷமலா. மரபு வழிபட்ட எதிர்பார்ப்புகளுக்குள்ளேயே நிற்க வேண்டும் என்பதை அவர்களுக்கு உணர்த்தும் வழிமுறையாகவே ராகிங் அமைகிறது.

கல்விக்கு ஒதுக்கப்படும் நிதி குறைவானபோதிலும் இராணுவம் சார்ந்த பள்ளிகளுக்கு மிகத் தாராளமாக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. சமீபத்தில் கொழும்பில் திறக்கப்பட்ட பாதுகாப்புச் சேவைப் பள்ளி (Defence Service School) இனி எதிர்காலத்தில் தேசியப் பள்ளிகளுக்கு ஒரு மாதிரியாக அமையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. விரைவில் வேறு பல நகரங்களிலும் இதன் கிளைகள் திறக்கப்படுமாம். இராணுவ அதிகாரிகளைப் பயிற்றுவிப்பதற்காக 1980களில் கட்டப்பட்ட கொத்தலாவல பாதுகாப்புக் கல்விக் கழகம் (Kothalavala Defence Academy) இப்போது பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டுள்ளது. இராணுவக் கல்வியுடன் தொடர்பில்லாத மேலாண்மைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி (Management studies) மற்றும் மொழிப்பாடங்கள் முதலியனவும் இங்கே பயிற்றுவிக்கப்படுகின்றன. தவிரவும் இதில் இராணுவத்தினர் தவிர பொதுமக்களும் பயிலலாம். இலங்கை அரசு பள்ளிக் கல்விக்காக ஒதுக்கும் நிதியில் 80 சதம் பெருமைக்குரிய 350 தேசியப் பள்ளிகளுக்கு ஒதுக்கப்படுகிறது. மீதியுள்ள 20 சத நிதியில்தான் 9,000 மாகாணப் பள்ளிகள் செயல்படுகின்றன. முன் குறித்த தேசியப் பள்ளிகளில் இராணுவத்தினரின் பிள்ளைகளுக்குச் சிறப்பு ஒதுக்கீடுகள் அளிக்கப்படுகின்றன.

மொத்தத்தில் அனைத்து அம்சங்களிலும் இராணுவ நிலையங்களுக்கும் கல்வி நிலையங்களுக்கும் இடையிலான வேறுபாடுகள் மிக விரைவாக அழிந்து வருகிறது.

எனவே,ராஜபக்ஷக்களின் குடும்ப செல்வதற்கான மசோதா சட்டமாக்கப்பட்டதையடுத்து மகிந்த, கோதாபய மற்றும் பசில் ராஜபக்ஷக்களின் நேரடிக் கட்டுப்பாட்டில் மேற்கொள்ளப்படும் மொத்த அரசுச் செலவு (Capital and Recurrent Expenditure) 64 சதமாக இருக்கும். வேறெந்த ஜனநாயக நாட்டிலும் இது சாத்தியமில்லை. மாகாணங்களிடம் எஞ்சியுள்ள கொஞ்ச நஞ்ச நிதி அதிகாரங்களையும் பறிக்கிற இந்த மசோதாவிற்கு ஒப்புதல் அளிக்க மறுத்ததற்காகத் தான் தலைமை நீதிபதி ஷிராணி பண்டாரநாயகா பதவி இறக்கப்பட்டு ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். போர் வெற்றியைச் சாதித்துக் காட்டியவர் எனப் புகழீட்டிய இராணுவத் தளபதி பொன்சேகாவிற்கு நேர்ந்த கதி எல்லோருக்கும் தெரியும்.

யும் தந்திடாத வளர்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றின் விளைவாக எதிர்பார்த்த அளவிற்கு வெளிநாட்டு மூலதனமும் வந்து குவியவில்லை. கடும் விலைவாசி ஏற்றம், தேங்கிப்போன ஊதியம் ஆகியவற்றின் விளைவாக மாத ஊதியம் பெறும் நடுத்தர வர்க்கம் தொடர்ந்து ஒன்று மாற்றி ஒன்றாகப் போராட்டக் களத்தில் இறங்குகிறது. தங்கு தடையற்ற போக்குவரத்தும், அதனூடான வணிகமும் மட்டுமே இன்று மக்களுக்குக் கையகப்பட்டுள்ள போர் ஓய்வின் பலன்கள். சிறு வணிகர்கள், சிறு முதலாளிகள், விவசாயிகள் ஆகியோர் மட்டும்தான் இதனால் ஓரளவு பயன்பெற்றுள்ளனர். இனச் சிறுபான்மையினர், மாத ஊதியம் பெறுவோர், தொழிலாளிகள், அடித்தள மக்கள், இவர்களோடு பெரு முதலாளிகளும் இன்று அதிருப்தியிலுள்ளனர்.

ஊதிப் பெருத்த இந்த இராணுவத்தின் உதவியின்றி இன்று ராஜபக்ஷக்கள் ஆட்சியில் தொடர இயலாது. இராணுவத்திற்குச் சிறப்பு அதிகாரங்கள், சிறப்புச் சலுகைகள் ஒரு பக்கம் என்ற போதிலும், இராணுவத்திற்குள் முக்கிய பொறுப்புகள் எல்லாம் ராஜபக்ஷக்களின் விசுவாசிகளால் நிரப்பப்பட்டுள்ளன. வேறெந்த ஜனநாயக நாட்டிலும் இல்லாத அளவிற்கு இராணுவத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்த போதிலும் இன்றளவும் ராஜபக்ஷக்களின் அதிகாரத்திற்குட்பட்டதாகவே இராணுவம் உள்ளது. போர் வெற்றியின் மூலம் ஈட்டிய பெரும்பான்மை இனத்தின் பேராதரவு இன்று ராஜபக்ஷக்களின் முக்கிய பலமாக உள்ளது. எனினும் வளர்ந்து வரும் பொருளாதார நெருக்கடியின் முன் எத்தனை காலம் இந்த ஆதரவு நிலைக்கும்? ஊட்டி வளர்க்கப்பட்டுப் பலதுறைகளிலும் கால் பதித்து, தனது இன்றியமையாமை குறித்த செருக்குடன் நிற்கும் இராணுவம் எத்தனை காலம் இந்த நிலையிலேயே தன்னை நிறுத்திக் கொள்ளும். ராஜபக்ஷக்களுக்கு நெருக்கடிகள் முற்றும் போது இந்த இராணுவம் என்ன நிலை எடுக்கும்? ■ *(முற்றும்)*

**தங்கள் மீதான கேள்வி முறையற்ற விசுவாசத்திற்கு கல்வி முறை கேடு விளைவித்துவிடக் கூடாது என்பதற்கு ராஜபக்ஷ ஆட்களுக்கு இருக்கிற அச்சங்களில் ஒன்று**

அதிகார ஆட்சி குறித்து விரிவாகச் சொல்ல வேண்டியதில்லை. ஆசிய நாடுகள் பலவற்றிலும் வாரிசு அரசியல் காணப்பட்டபோதிலும் இவற்றிலிருந்து பல அம்சங்களில் இலங்கையின் குடும்ப அரசியல் வேறுபடுகிறது. சகோதரர்கள் நால்வர் இப்படி முக்கியமான அதிகாரப்புள்ளிகளைக் கையகப்படுத்தியுள்ளது, அவர்களது வாரிசுகள் இன்று வெகு வேகமாக அதிகாரங்களை நோக்கி நகர்வது, அமைச்சர்கள் சுமார் நூறு பேர் இருந்தபோதிலும் அரசுச் செலவினங்களில் மூன்றில் இரு பகுதி ராஜபக்ஷ சகோதரர்களின் கையில் குவிவது என்பதற்கெல்லாம் வரலாற்றில் எடுத்துக்காட்டுகள் குறைவு.

மாகாண அரசுகள் மூலமாக நிறைவேற்றப்படுகிற ஏழை மக்களுக்கான நிவாரண நடவடிக்கைகள் எல்லாவற்றையும் மத்திய நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் கட்டுப்பாட்டில் இயங்கும் திவி நெகுமவின் கீழ் கொண்டு

ஆட்கடத்தல்கள், காணாமலடிக்கப்படுதல்கள் என்பவை தவிர நீதித் துறைப் பணியாளர் தேர்வாணையக் குழுத் தலைவரைப் பொது இடத்தில் ரவுடிகளைக் கொண்டு தாக்குவது, அரசு ஊழியர் ஒருவரை மரத்தில் கட்டிவைத்து ஒரு துணை அமைச்சரே சாட்டையால் அடிப்பது, அமைச்சரின் மகன் ஒரு இராணுவ அதிகாரியைப் பொது இடத்தில் அவமதிப்பது என்பதெல்லாம் ராஜபக்ஷக்களின் ஆட்சியில் சகஜமாகிவிட்டன. உள்நாட்டுப் போர் முடிந்து நான்காண்டுகள் ஆகியும் பொருளாதாரத்தில் எந்த முன்னேற்றமும் ஏற்படாதது பெரு முதலாளிகளை அயர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது. பெரிய அளவு வெளிநாட்டுக் கடன்களின் மூலம் உருவாக்கப்படும் பிரமாண்டமான வளர்ச்சித் திட்டங்கள் எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை. குடும்ப அதிகார ஆட்சி, சொல்லிக் கொள்கிற அளவிற்குப் பயன் எதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச அரசியல்

# வடகொரியாவை சர்வதேச நீதிமன்றத்தில் ஐ.நா. நிறுத்த வேண்டும்

அணுவாயுத தாக்குதல் நடத்தப்போவதாக கிம் யொங்-உன் விடுக்கும் அச்சுறுத்தலை மனித குலத்திற்கு எதிரான குற்றச்செயலாக கணிக்க வேண்டும்





ஜியோவ்றி றொபேர்ட்சன்

அமெரிக்கா மீது முன்னெச்சரிக்கையாக அணுவாயுத தாக்குதலை நடத்தப் போவதாக வடகொரியா விடுத்திருக்கும் அச்சுறுத்தலை பாரதூரமானதாக எடுக்கவேண்டிய தேவையில்லை. ஆனால், அந்த நாட்டிடம் அணுகுண்டு (நம்பகமான மதிப்பீடுகளின் படி 12)களும் ஏவுகணைகளும் இருக்கின்றன. ஏவுகணைகளில் பொருத்தக்கூடிய அணுகுண்டொன்றை வடிவமைக்க வடகொரியாவுக்கு ஒரு சில வருடங்கள் மாத்திரமே எடுக்கும். அந்த வேளையில் ஈரான் அணுகுண்டைப் பெற்றிருக்கக்கூடும். அதேபோன்றே சவூதி அரேபியாவிடமும் ஏன் எகிப்திடமும் கூட அணுகுண்டு இருக்கலாம். அந்த நேரத்தில் முன்னைய பனிப்போர்க் காலத்தில் இருந்ததையொத்த சூழ்நிலையை நாம் உணருவோம். எனவே, வட கொரியத் தலைநகர் பியொங்யாங்கின் சகல பகுதிகளையும் குண்டுவீசித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரை மட்டமாக்குமாறு அமெரிக்க ஜனாதிபதி உத்தரவிடும் நேரத்துக்காக காத்திருப்பதைத் தவிர, நாம் என்ன தான் செய்கிறோம்?

வடகொரியாவின் அச்சுறுத்தல் அணுவாயுதப் பரம்பல் தடுப்பு உடன்படிக்கையில் இருக்கின்ற பேரிடர் மிக்க குறைபாட்டை அம்பலப்படுத்த உதவியிருக்கிறது. கியூபா ஏவுகணை நெருக்கடிக்குப் பிறகு (இறுதியில் என்றாவது ஒரு நாள் அவற்றின் அணுவாயுதங்களை முற்றுமுழுதாக ஒழித்துவிடுவதற்கு இணங்கக் கூடிய - நல்ல நிலையாவது கொண்டிருக்கக்கூடிய) ஐந்து மிகப்பெரிய வல்லரசுகளுக்கு மாத்திரம் அணுவாயுதங்களை மட்டுப்படுத்தும் நோக்குடன் செய்யப்பட்டதே அந்த உடன்படிக்கையாகும். வடகொரியா 1985ஆம் ஆண்டு மிகுந்த தயக்கத்துடன் தான் அணுவாயுதப் பரம்பல் தடுப்பு உடன்படிக்கையில் இணைந்து கொண்டது. ஆனால், மீண்டும் 2003 ஆம் ஆண்டு அதிலிருந்து விலகிக் கொண்டது. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை இதற்கு ஒரு போதும் அனுமதித்திருக்கக்கூடாது. இவ்வுடன்படிக்கையில் இணைந்து கொண்டுள்ள நாடொன்று அதில் இருந்து வெளியேறுவதாக இருந்தால், அதில் உறுப்புரிமையைக் கொண்டிருப்பதால் அந்த நாட்டின் ''உச்சபட்ச'' நலன்கள் ஆபத்துக்குள்ளாவதாக இருக்க வேண்டும். அல்லாவிட்டால் நாடொன்று வெளியேறுவதை உடன்படிக்கை அனுமதிப்பதில்லை. சர்வதேச அணுசக்தி நிறுவனத்தின் தலையீடின்றி அணுகுண்டுகளைத் தயாரிக்கவே வடகொரியா விரும்பியது. அது அவ்வாறு செய்தது. 2006 ஜூலை 4 ஆம் திகதி, அதாவது அமெரிக்காவின் சுதந்திர தினத்தன்று முதலாவது அணுகுண்டை வடகொரியா வெடித்துச் சோதனை செய்தது.

1994ஆம் ஆண்டளவில், இரு அணுகுண்டுகளைத் தயாரிப்பதற்குப் போதுமான புளுத்தோனியத்தை ஒளிவுமறைவாக வடகொரியா சேர்த்து வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டபோது, அந்த நாட்டை ஆக்கிரமிப்பது குறித்து பில் கிளின்டன் நிருவாகம் அக்கறையுடன் ஆராய்ந்தது. ஆனால், அத்தகைய ஆக்கிரமிப் பொன்றில் இறங்கினால், 10 ஆயிரம் கோடி டொலர்கள் செலவாகும் என்பதுடன், சுமார் 10 இலட்சம் பேர் பலியாவர் என்ற மதிப்பீட்டினால் நிருவாகம் திடுக்குற்றது. ஜிம்மி கார்ட்டரின் இராஜதந்திரத்தினால் போர் தவிர்க்கப்பட்டது. அவர் பேச்சுவார்த்தை மூலமாக இணக்கப்பாட்டுத் திட்டமொன்றை வகுத்தாரெனினும் அது விரைவாகவே சீர்குலைந்துபோனது. இறுதியாக அதன் இடத்தை ''6 தரப்பு பேச்சுகள்'' பதிலீடுசெய்தன. அந்தப் பேச்சுகளும் கடந்த 10 வருடங்களாக தடுமாறிக்கொண்டிருந்தது. அதேவேளை, வடகொரிய இராணுவம் யூரேனியத்தை செறிவூட்டிக் கொண்டும் ஏவுகணைச் சோதனைகளை நடத்திக் கொண்டுமிருந்தது.

மேலும் கூடுதலான தடைகளை விதிப்பதன் மூலமாக வடகொரியாவை அதன் அச்சுறுத்தலை நடைமுறைப்படுத்துவதில் இருந்து தடுத்துவிடமுடியாது. ஒவ்வொரு ஆத்திரமூட்டும் நடவடிக்கைக்கும் பிறகு அதிகரித்தவகையிலான தடைகளை அந்த நாடு எதிர்நோக்கி பெரும் பாதிப்புகளை அடைந்திருக்கிறது. தற்போது ஐ.நா.பாதுகாப்புச் சபையில் வட கொரியாவுக்கு எதிராக தடைகளை விதிக்கும் தீர்மானத்தை சீனா கூட ஆதரித்து வாக்களித்ததைக் காணக்கூடியதாக இருந்தது. வடகொரியாவின் நகரங்களையும் அணுநிலைகளையும் (சீனாவின் இணக்கப்பாட்டுடன் என்றாலும்) குண்டு வீசித்தாக்கினால் அது பழிவாங்கும் நோக்குடனான எதிர்த்தாக்குதல்களையே கொண்டுவரும்.

ஐ.நா.பாதுகாப்புச்சபை இருவழிகளில் செயற்பாடுகளில் இறங்க முடியும். ஒன்று மென்மையான அணுகுமுறை - சகலவிதமான வீறாப்புப் பேச்சுகளின் பின்னணியில் எதை வடகொரியா உண்மையில் விரும்புகிறதோ அதைக் கொடுப்பது, அதாவது அணுவாயுதப் பரம்பல் தடுப்பு உடன்படிக்கையில் வடகொரியாவை ஆறாவது (அல்லது இந்தியாவுக்குப் பின்னால் ஏழாவதாக) அணுவாயுத வல்லரசாக மீள அனுமதிப்பதையே வடகொரியா விரும்புகிறது போலும். அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெரி ஏற்கனவே அதை நிராகரித்துவிட்டார். ஏனைய நாடுகளும் அதை எதிர்க்கும். எவ்வாறெனினும், ஒத்துவராத இந்த நாட்டை கட்டுப்படுத்துவதற்கு (இராணுவப் பலத்தைப் பயன்படுத்தாமல்) அது மாத்திரமே ஒரே வழியாக இருக்கக்கூடும். அணுவாயுதப் பரம்பல் தடுப்பு உடன்படிக்கையில் மீண்டும் வடகொரியாவை மீள அனுமதிப்பதன் மூலமாக அந்த நாட்டுக்கு கிடைக்கக்கூடிய அந்தஸ்தின் பயனாக இறுதியில் அணுவாயுதங்களை இல்லாதொழிப்பதற்கான கடப்பாட்டுக்குரியதாக்க முடியும். ஏமாற்றும் வேலைகளில் அந்த நாடு ஈடுபடுவதாக இருந்தால், சர்வதேச அணுசக்தி நிறுவனத்தின் பரிசோதனைக்குட்படுத்த முடியும்.

அடுத்து இருக்கக்கூடிய மார்க்கம், வட கொரியாவின் அணுவாயுதப் போர் அச்சுறுத்தலை மனித குலத்திற்கு எதிரான குற்றச் செயலாகக் கருதுவதும் அதன் நடத்தைக்காக ஜனாதிபதி கிம்யொங் உன் மற்றும் அவரது ஜெனரல்கள் மீது குற்றஞ் சாட்டப்படக்கூடியதாக விசாரணைகளை நடத்துவதற்கு சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்துக்கு பாரப்படுத்துவதுமாகும்.

அணுவாயுதங்களைப் பயன்படுத்துவதோ அல்லது பயன்படுத்தப்போவதாக அச்சுறுத்துவதோ மனித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலத்துக்கு எதிரான குற்றச்செயல் என்று ஐக்கிய நாடுகள் சபை 1984ஆம் ஆண்டு பிரகடனம் செய்தது. அதே வேளை, உச்ச நிலையான தற்காப்புச் சூழ்நிலையைத் தவிர, மற்றும்படி அணுவாயுதத்தைப் பயன்படுத்துவதோ அல்லது பயன்படுத்தப்போவதாக அச்சுறுத்துவதோ பொதுவில் (சர்வதேச) சட்டவிதிகளுக்கு முரணானது என்று சர்வதேச நீதிமன்றம் 1996 ஆம் ஆண்டு தீர்ப்பு கூறியிருக்கிறது. முதலில் அணுவாயுதத்தைப் பயன்படுத்தப் போவதாக தற்போது வடகொரியா விடுத்திருக்கும் அச்சுறுத்தல் "உச்சநிலை தற்காப்புச் சூழ்நிலையில்" செய்யப்படுகிறது என்று எடுத்துக்கொள்ளப்பட முடியாததாகும். அந்த வரைவிலக்கணத்திற்குள் இது உள்ளடங்குவதாக இல்லை.

அணுகுண்டொன்றைப் போடுவதோ அல்லது போடப்போவதாக அச்சுறுத்துவதோ சட்டவிரோதமானது. ஏனென்றால், அதிலிருந்து வெளிப்படக்கூடிய கதிரியக்கம் இராணுவ இலக்குகளுக்கும் குடிமக்களுக்கும் இடையே வேறுபாடின்றி சகலதுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். ஏனென்றால் விளைவுகள் மனித கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவை. ஏனென்றால், அது ஏற்படுத்துகிற துன்பங்கள் அளவிடமுடியாதவை, அநாவசியமானவை. சர்வதேச நீதிமன்றம் கூறியிருப்பதைப் போன்று "அணுவாயுதங்களின் அழிவுச் சக்தி இடைவெளியிலோ அல்லது நேரத்திலோ கட்டுப்படுத்த முடியாததாகும். அச்சக்தி மிகவும் அடிப்படையான இரு மனித உரிமைகளை மீறுகிறது. அடாத்தாக உயிரைப் பறிப்பதற்கு எதிரான உரிமையும் சித்திரவதைக்கு உட்படுத்துவதற்கெதிரான உரிமையுமே அவையாகும். இந்த இடத்தில் சித்திரவதை என்பது கதிரியக்கத்தின் பாதிப்புக்குள்ளாவது" என்று அர்த்தப்படும்.

ஹேக் நகரில் உள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கடந்த தசாப்தத்தில் பெரிய சட்ட சாராம்சமற்ற விவகாரங்களில் - அட்டூழியங்களில் குறிப்பாக, கொலைகள் மற்றும் கொலைகளுக்குத் தூண்டுதலுடன் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் அனுபவத்தைப் பெற்றிருக்கிறது. அந்த நீதிமன்றம் அதன் நோக்கத்தைப் பூர்த்திசெய்ய ஆரம்பித்துவிட்டதாகக் கூறமுடியாது. ஏனென்றால், குற்றச்சாட்டுகள் ஆபிரிக்க அரசியல்வாதிகளுக்கும் ஆபிரிக்க போர்த்தலைவர்களுக்கும் எதிரானவையாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஒரு சர்வதேச நீதிமன்றம் சர்வதேச குற்றவாளிகள் சம்பந்தப்பட்ட விவகாரங்களையே கையாளவேண்டும். அணுவாயுதங்களை சட்டவிரோதமாகத் தயாரிப்பவர்களும் அணுவாயுதங்களைப் பயன்படுத்தப்போவதாக அச்சுறுத்துபவர்களுமே சகலரையும் விட படுபயங்கரமான சர்வதேசக் குற்றவாளிகள்! ■

***அவுஸ்திரேலிய, பிரிட்டிஷ் இரட்டை பிரஜாவுரிமையைக் கொண்ட ஜியோவ்றி றொபேர்ட்சன்***
***மனித உரிமைகள் சட்ட நிபுணர், கல்விமான், ஒலிபரப்பாளர், எழுத்தாளர்***

---

***(24ஆம் பக்கத்தொடர்ச்சி)***

துணைப்படைகள் வகித்த பாத்திரத்தை வகிக்கக்கூடிய ஆற்றலை பொதுபல சேனாவும் "சிங்கள ராவண" இயக்கமும் கொண்டிருக்காமல் இருக்கக்கூடும். ஆனால், 1994 ஆம் ஆண்டு வெறுமனே 100 நாட்களில் 8 இலட்சம் ருட்ஸி இனத்தவர்கள் படுகொலை செய்யப்படுவதற்கு முன்னதாக ருவாண்டா கண்டதைப் போன்ற நச்சுத்தனமான சகல பிரசாரச் செயற்பாடுகளினதும் சாயல் இவற்றில் இருக்கிறது போன்றே தெரிகிறது.

தங்களது இருப்புக்காக தறிகெட்ட முறையில் ராஜபக்ஷாக்கள் உருவாக்குகின்ற அரசியல் போக்குகளுக்கு ஒரு மாற்றாக சரத்பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சியும் அதன் சிங்கள அரசியலும் அமைந்துவிடமுடியாது. உண்மையிலேயே, சிங்கள இனவாதம் அல்லது இனவெறி அதன் இன்னொரு வடிவத்தினால் பதிலீடு செய்யப்பட முடியாததாகும். கொழும்பிலும் அதன் புறநகர்ப்பகுதிகளிலும் அரச பாதுகாப்புடன் வீதிகளில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்ற புதிய தீவிரவாதத்தை வேறு எந்த தீவிரவாதத்தினாலும் தோற்கடிக்கமுடியாது. தேர்தலோ அல்லது தேர்தல் இல்லையோ,அரசியல் இனிமேல் இந்தப் புதிய சிங்கள பௌத்த வன்முறையினாலேயே தீர்மானிக்கப்படப்போகிறது. இந்த இனவெறியை நகர்ப்புற மத்திய தரவர்க்கம் எந்தளவுக்கு எதிர்க்கப்போகிறது? அத்தகைய தொரு தலைமைத்துவத்தைக் கொடுக்கக்கூடிய ஆற்றல் தன்னிடம் இருப்பதாக பொன்சேகா நிரூபித்துக் காட்டவில்லை. உண்மையில் அந்த ஆற்றல் அவரிடம் இல்லை. சிங்கள பௌத்த அரசியல் மேடையில் ராஜபக்ஷாக்களை விடவும் ஜமாய்த்துக்காட்ட பொன்சேகாவினால் முடியாது. அதில் அவர்களுக்கு சவால் விடுக்கவும் அவரால் முடியாது. பொன்சேகாவின் அரசியல் யாத்திரை முன்தெரிந்திராத, முன்கேள்விப்பட்டிராத சிங்கள வணக்கத்தலமொன்றில் தான் சென்று முடியும். அங்கு அந்த இடத்தை துப்புரவு செய்யக்கூட பக்தர்கள் இருக்க மாட்டார்கள்.

இன்று நாம் வித்தியாசமான திசை மார்க்கத்தில் சென்று கொண்டிருக்கிறோம். இரண்டாவது உலகமாயுத்தத்திற்கு முன்னரான கால கட்டத்தில் ஹிட்லரின் பழைய ஆரிய ஜேர்மனியைப் போன்ற திருப்பத்தையல்ல, 1994ஆம் ஆண்டின் ருவாண்டாவின் திருப்பத்தையே இலங்கை நிலைவரங்கள் பெருமளவுக்கு எடுக்கக்கூடிய சாத்தியங்கள் இருக்கின்றன. திசை மார்க்கத்தை மாற்றியமைக்க வேண்டுமானால், நியாயபூர்வ மான, நல்லறிவுடைய, தாராளவாத தலைமைத்துவம் வேண்டுமே தவிர, சரத்பொன்சேகாவையும் அவரது ஜனநாயகக் கட்சியையும் போன்ற அவசியமற்ற சிங்கள இன வெறித்தனமான தலைமைத்துவம் அல்ல! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிஷாலி பின்ரோ
ஜெயவர்தன

# தனியார் நில சுவீகரிப்பின் விளைவான பிரச்சினைகள்

**நில உடைமையுரிமை குறித்தும் நிலம் தொடர்பில் நேர்மையான அரச கொள்கையின் அவசியம் குறித்தும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை தோற்றுவிக்க வேண்டியது மிகவும் முக்கியமானதாகும்**

உள்நாட்டு அரசியல்

பொதுநோக்கமொன்றுக்காக தனியார் உடைமையை நியாயமான நஷ்ட ஈட்டைக் கொடுத்து எடுப்பதற்கு அல்லது சுவீகரிப்பதற்கு அரசாங்கமொன்றுக்கு இருக்கிற உரிமை அதன் தனிமுதல் மேலுரிமை அதிகாரமாகும் (Eminent domain power). அரசாங்கத்தினால் தனியார் நிலமொன்று உண்மையில் எடுக்கப்படுவதற்கு முன்னதாக நியாயமான நஷ்டஈட்டைச் செலுத்த வேண்டியது இத்தால் நிபந்தனையாகிறது. வெறுமனே வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை பிரகடனம் செய்வதன் மூலமாக பொது நோக்கமொன்றுக்காக தனியார் நிலத்தைச் சுவீகரிக்கும் செயன்முறையை முன்னெடுப்பதற்குரிய அதிகாரத்தை இல ங்கையின் காணி சுவீகரிப்புச் சட்டம் அமைச்சருக்கு வழங்குகிறது. ஒரு தனியார் நிலம் "பொது நோக்கமொன்றுக்காக" தேவைப்படுகிறது என்று அந்த வர்த்தமானிப் பிரகடனத்தில் கூறுவதற்கு அவருக்கு அதிகாரமளிக்கப்படுகிறது. அத்தகைய தனியார் நிலம் எந்தப் பொது நோக்கத்துக்காகத் தேவைப்படுகிறது என்று அமைச்சர் கூறவேண்டுமென்று சட்டம் வலியுறுத்தவில்லை. இலங்கை அரசியலமைப்பு உடைமைக்கான உரிமையை ஏற்பாடொன்றின் ஊடாக விளக்கமானமுறையில், ஐயத்துக்கிடமின்றி உத்தரவாதம் செய்யவில்லை.

தனியாருக்குச் சொந்தமான உடைமை சுவீகரிப்புத் தொடர்பில் உகந்த செயன்முறை குறித்த எந்தவொரு சட்ட ஏற்பாடோ அல்லது அரசியலமைப்பு ஏற்பாடோ இல்லாதமையால் (பொது நோக்கமொன்றுக்காக நிலம் தேவைப்படுகிறது என்ற) அமைச்சரின் பிரகடனத்தின் விளைவாக சம்பந்தப்பட்ட நிலத்தின் உரிமையாளருக்கு ஏற்படக்கூடிய பொருளாதாரத் தாக்கத்தை கையாள முடியாமல் இருக்கிறது. அமைச்சரின் அத்தகைய பிரகடனம் உரிமையாளரின் சொத்தின் எதிர்காலப் பயன்பாடு தொடர்பில் அவருக்கு இருக்கக்கூடிய நியாயபூர்வமான எதிர்பார்ப்புகளின் அடிப்படையில் அந்த சொத்தின் பாதுகாப்பில் எந்தளவு தூரத்துக்கு தலையீடு செய்கிறது என்பதையும் கவனித்துக் கையாள முடியாமல் இருக்கிறது.

இது விடயத்தில் இலங்கை உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பொன்று கவனிக்கத்தக்கது. அரசாங்கத்தினால் சுவீகரிக்க உத்தேசிக்கப்பட்ட தனிப்பட்ட உரிமையாளரின் நிலமொன்று தொடர்பான விவகாரத்தைக் கையாளுவதற்குக் கடைப்பிடிக்கப்பட வேண்டிய உகந்த செயன்முறை குறித்து (Manel Fernando V Jayaratne 2000 (1) SLR ½ (SC) என்று வழக்கில்) நீதியரசர் மார்க் பெர்னாண்டோ வழங்கிய அத்தீர்ப்பில் "பொது நோக்கமொன்றுக்காக நிலமொன்று தேவைப்படுகிறது என்று ஒரு அமைச்சர் பிரகடனம் செய்வாரானால், அவர் அந்த நோக்கம் என்னவென்பதை வெளிப்படுத்த வேண்டும்" என்று கூறியிருக்கிறார். அந்தத் தீர்ப்பு குறிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிட்ட சில அடிப்படைக் கேள்விக ளைத் தோற்றுவித்தது; ஒருவருடைய நிலத்தைச் சுவீகரிப்பதற்கு உத்தேசி க்கப்படுவதாக இருந்தால், எந்த நோக்கத்துக்காக அது சுவீகரிக்கப்படு கிறது என்பதை ஏன் அவருக்குச் சொல்லக் கூடாது? அவருக்கு அவ் வாறு சொல்லப்படவில்லையானால், ஒரு உருப்படியான நோக்கத்துக்காக தனது நிலம் எடுக்கப்படவில்லை என்பதை எடுத்துக் காட்டக்கூடிய நிலையில் அவர் எவ்வாறு இருக்க முடியும்? மேற்படித் தீர்ப்பு நில சுவீக ரிப்புச் செயன்முறைகளில் அமைச்சர் களின் பொறுப்புடைமை குறித்த வரவேற்கக்கூடிய அம்சமொன்றைக் கொண்டுவந்தது.

மூன்று தசாப்த கால இனமோதலின் முடிவைத் தொடர்ந்து சந்தையில் பெருமளவு உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு மூலதனத்தின் பாய்ச்சலுடன் பாரியளவிலான அபிவிருத்தித் திட் டங்கள் நகரமயமாக்கலை எந்த வகை யிலாக விரைவுபடுத்தியிருக்கின்றன என்பதையும் போரினால் முன்னர் பாதிக்கப்பட்ட பகுதிகள் உட்பட நாடுபூராகவும் முன்னென்றுமில்லாத வகையான அபிவிருத்தி முயற்சிகள் எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றன என்பதையும் Law & Society Trust அமைப்பினால் மேற்கொள் ளப்பட்டுவருகின்ற ஆய்வொன்று வெளிச்சம் போட்டுக்காட்டுகிறது. வடக்கு, கிழக்கில் நிலப்பிரச்சினை இனநெருக்கடியின் மூலகாரணிகளில் ஒன்று அடையாளம் காணப்பட்டி ருக்கிறது. போரின் முடிவுக்குப் பின் னரான கால கட்டத்தில் மேற்கொள் ளப்படுகின்ற நடவடிக்கைகள் மக்க ளின் சொத்துரிமைகளை கடுமை யாகப் பாதித்திருக்கின்றன. முன்னர் போர் இடம்பெற்ற பகுதிகளில் கடு மையாக அதிகரித்திருக்கின்ற இரா ணுவ மயமாக்கல் போரினால் பாதிக் கப்பட்ட மக்களின் இந்தப் பிரச்சி னையை மேலும் தீவிரப்படுத்தியிருப் பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

போரின் போது (உள்நாட்டில்) இடம்பெயர்ந்த மக்கள் திரும்பிச் செல்வதற்கு நிலமில்லாமல் இருக்கி றது என்பது இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பிரதான மான ஒரு பிரச்சினையாகும். இந்தப் பிராந்தியத்தில் உள்நாட்டுப் போரின் போது பெருவாரியான நிலங்களில் இருந்து மக்கள், (தாக்குதல் தடுப்பு வலயங்களையும் இராணுவ முகாம்க ளையும் அதியுயர் பாதுகாப்பு வல யங்களையும் உருவாக்குவதற்காக) வெளியேற்றப்பட்டார்கள்.

பலவந்தமாக வெளியேற்றப்படா விட்டாலும் கூட, சில தனிப்பட்டவர் கள் போரின் அச்சம் காரணமாக அல் லது இயற்கை அனர்த்தங்களின் விளைவாக தங்களது நிலங்களில் இருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப் பட்டார்கள். உள்நாட்டுப் போர் முடி வடைந்ததும், இந்த நிலங்கள் அவற் றின் சட்ட ரீதியான உரிமையாளர் களுக்குத் திருப்பித்தரப்பட வேண்டு மென்று கோரப்பட்டது. ஆனால், இந் தச் செயன்முறைகளில் பல்வேறு சிக் கல்கள் காணப்பட்டன. இந்தப் பிராந் தியத்திலே உள்நாட்டுப் போர் முடிவ டைந்தபோதிலும், வீட்டுவசதிகளும் வாழ்வாதாரங்களும் மீள்விக்கப்ப டக்கூடியதாக இருக்கவில்லை. சுவீக ரிக்கப்பட்ட பெருமளவு நிலங்கள் தொடர்ந்தும் அரசின் கைகளிலேயே இருக்கின்றன. இராணுவ நோக்கங்க ளுக்காகப் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருப்பதைக் காணக்கூடிய தாக இருக்கிறது. யாழ்ப்பாணப் பிர தேசத்திலிருந்து தமிழ் மக்கள் பலவந் தமாக வெளியேற்றப்பட்டிருப்பதா கக் குற்றஞ்சாட்டி அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றிருக்கின்றன.

இலங்கையில் அதியுயர் பாது காப்பு வலயங்கள் எனப்படுபவை 1980களின் ஆரம்பத்திலிருந்து இரா ணுவ நிலைகளைச் சுற்றிவர தாக்கு தல் தடுப்பு வலயங்கள் என்று தொட ங்கி பல்வேறு வடிவங்களில் ஏற்ப டுத்தப்பட்டு வந்திருக்கின்றன. அவ் வாறு வலயங்களை ஏற்படுத்துவ தற்கு சட்ட ரீதியான நியாயப்பாடுகள் இல்லாததால் பல சந்தர்ப்பங்களில் அவை தொடருவதற்கு போதுமான பாதுகாப்புக் காரணங்கள் இல்லாமல் உள்ளது. சம்பூர் அதியுயர் பாதுகாப்பு வலயம் அத்தகையவற்றில் ஒன்று. கிழக்குமாகாணத்தில் அப்பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தின் வாய்மூல உத்தரவின்பேரில் குடிமக் கள் வெளியேற நிர்ப்பந்திக்கப்பட் டார்கள். தற்போது அப்பகுதிகள் உத் தியோகபூர்வமற்ற அதியுயர் பாது காப்பு வலயங்கள். எனவே, சட்டரீதி யானதோ அல்லது சட்டவிரோதமா னதோ எதுவென்றாலும், பாதிக்கப் பட்ட மக்களின் வீட்டு, நிலம் மற்றும் உடைமை உரிமைகள் பாதுகாப்புக் காரணங்களுக்காக மீறப்பட்டிருக் கின்றன.

இடம்பெயர்வினால் மிகவும் கடு மையாகப் பாதிக்கப்பட்ட அதே வேளை, பொதுவில் அலட்சியம் செய்யப்படுகின்ற இன்னொரு சமூ கம் இருக்கிறது. வடக்கு, கிழக்கின் முஸ் லிம்களே அவர்கள். 1990ஆம் ஆண்டு வடமாகாணத்திலிருந்து முஸ்லிம் சமூகம் விடுதலைப் புலிக ளினால் முழுவதுமாக வெளியேற்றப் பட்டது. உயிர்வாழ்வுக்காக இந்த மக் கள் உலக வங்கி மற்றும் யூனிசெவ் போன்ற அமைப்புகளின் உதவியைப் பெற நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். 2002 பெப்ரவரியில் ரணில் விக் கிரமசிங்கவைப் பிரதமராகக் கொண்ட அரசாங்கத்துக்கும் விடுத லைப்புலிகளுக்கும் இடையே கைச் சாத்திடப்பட்ட போர் நிறுத்த உடன்ப டிக்கையைத் தொடர்ந்து இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்க ளுக்கு பிரதிநிதித்துவப்படுத்தப்பட வில்லை. அதுமாத்திரமல்ல, அரசி யல் வாழ்வில் இருந்தும் ஒதுக்கப் பட்டார்கள். இன்று மன்னார் மாவட் டத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள் தங்கள் நிலங்களுக்குத் திரும்பிச்செல்ல முடியாதிருக்கிறது. அந்த நிலங்கள் காடுபற்றிக் கிடப்பது அல்லது அங்கு சென்றடைவது கஷ்டமாயிருப்பது இதற்குக் காரணமாகும். அதனால், மன்னார் முஸ்லிம்கள் பெருமளவில் தொடர்ந்தும் இடம்பெயர்ந்தவர்களா கவே வாழுகிறார்கள். இதேபோன்றே தெற்கிலும் இலங்கையின் ஏனைய

(56ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொலின் ரொட்ஹன்ரர்

ஐக்கிய இராச்சியத்தின் பிரதமராக 1979 தொடக்கம் 1990 வரை பதவி வகித்த மார்கரட் தட்சர் பிரிட்டிஷ் சமூகத்தின் முகத்தை மாற்றியவர் என்பதுடன், அடுத்துவரும் வருடங்களிலும் கூட அச்சமூகத்திற்குள் கரு த்துவேற்றுமைகளை தோற்றுவிக்கக்கூடிய ஒரு ஆளுமையாக விளங்குவார். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் தற்போதைய அமைச்சரவையில் இருக்கின்ற கோடீஸ்வர உறுப்பினர்கள் குழு உட்பட வலதுசாரிகளைப் பொறுத்தவரை மார்கரட் தட்சர் தீவிர தொழிற்சங்கவாதத்தின் ஆதிக்கத்தில் இருந்து பிரிட்டனைக் காப்பாற்றியதுடன், (கடுமையாக உழைத்தால் எல்லாமே தங்களுக் கேயுரித்தாகும் என்று நம்புகிற) பேரார்வமுடைய சமூகத்தைத் தோற்றுவித்த ஒரு தலைவி. ஏனைய பலரைப் பொறுத்தவரை, அவர் உற்பத்தித் தொழில்துறையை நிர்மூலம் செய்வதிலும் வர்க்கச் சிறப்புரிமை நலன்களை உயர்த்தி, சாதாரண தொழிலாள மக்களின் உரிமை களைப் படிப்படியாக அழித்ததில் கருவியாகச் செயற்பட்ட ஒரு பெண்மணி. ஒரு மளிகைக் கடைக் காரரின் மகளான மார்கரட் தட்சர் லிங்கன்ஷயரில் கிரான்தாம் பகுதியில்

# மார்கரட் தட்சரின் மரபு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்தார். ஒக்ஸ்போர்ட்டில் இரசாய னவியலைப் படித்த அவர், பிறகு ஒரு பாரிஸ்டராக பயிற்றுவிக்கப் பட்டு 1959ஆம் ஆண்டு கன்சர்வேட் டிவ் கட்சியின் எம்.பி.யாக பாராளு மன்றத்தில் பிரவேசித்தார்.

பிரஜைகளின் வாழ்வில் அதீத அக்கறையையும் கட்டுப்பாட்டையும் கொண்ட அரசு (Nanny State) என் பதையும் இல்லாமற்செய்து தொழில் துறை முயற்சியாளர் உணர்வைக் கட்டவிழ்த்துவிட்டு மக்களை அவர் களின் சொந்தக் கால்களில் நிற்க வைப்பதே பிரிட்டனின் பிரதமர் என்றவகையில் மார்கரட் தட்சரின் இலக்காக இருந்தது. நெல்சன் மண் டேலாவை பயங்கரவாதி என்று கண் டித்ததுடன், சிலி நாட்டின் பாசிச சர் வாதிகாரி அகஸ்டோ பினோஷேயை நியாயப்படுத்தியதன் மூலம் மாத்திர மல்ல, பனிப்போரை (Cold war) ஒரு கொதி நிலைக்கு எரியூட்டியதன் மூலமாகவும் தனது அரசியல் நிலைப் பாடு எதுவென்பதை எந்தவிதமான ஐயப்பாட்டுக்கும் இடமின்றி உல கிற்கு வெளிக்காட்டினார் அவர்.

மூன்று பொதுத் தேர்தல்களில் மார் கரட் தட்சர் வெற்றிபெற்றார். பலவீன மானதும் பிளவுற்றிருந்ததுமான எதி ரணியும் இதற்கு வசதியாக அமைந் தது. ஆனால், ஒருபோதுமே அவர் மக்களின் வாக்குகளில் மூன்றில் ஒரு பங்கிற்கும் கூடுதலான வாக்குக ளைப் பெற்றதில்லை. தொழிற்சங்கங் களின் பலத்தையும் அவரது தன வந்த ஆதரவு, தனியார்மய ஆதரவுக் கொள்கைகளுக்கு குறுக்கே நின்றி ருக்கக்கூடிய எவரையும் நசுக்குவ தற்கு ஒரு கணமேனும் தாமதிக்க வில்லை. ஐரோப்பாவிலேயே மிகவும் மூர்க்கத்தனமானது என்று வர்ணிக்கப்படக்கூடிய தொழிற்சங்க விரோத சட்டத்தைக் கொண்டுவந்த அதேவேளை, தட்சர் தனியார் துறைக் கும் தனவந்தர்களுக்கும் பெருவாரி யான மானியங்களையும் வரிக்குறை ப்புச் சலுகைகளையும் நடைமுறைப் படுத்தினார். 'செல்வத்தை ஆக்குதல்' என்ற போர்வையில் முக்கியமான அரசு சொத்துகள் தனியார் மயமாக்




கப்பட்டன. வர்த்தகத்துறையினருக்கு நேசமான பல சட்டங்கள் கொண்டுவ ரப்பட்டன. தனது கொள்கைகளை நிருவகிப்பதற்கு உதவ (அரச நிதியுத வியைப் பெறுகின்ற அதேவேளை, அரசிலிருந்து சுயாதீனமாக இயங்கு கிற) பல நிறுவனங்களை அவர் உரு வாக்கினார்.

என்னதான் ஆரவாரமாகப் பேசி னாலும் மார்கரட் தட்சர் அரசின் வகி பாகத்தை உண்மையில் குறைக்க வில்லை. அவர் அரச இயந்திரத்தை வேறுபட்ட முறையில் பயன்படுத்தி னார். அதாவது, செல்வம் அடிமட் டத்திலிருந்து உயர்மட்டம் நோக்கிப் பாய்ச்சல் செய்வதை உறுதிப்படுத்து வதற்கு வர்த்தகத்துறையினர் சார்பாக அரசு இயந்திரம் பயன்படுத்தப்பட் டது. தட்சர் புதிய தொழிற்துறை முய ற்சி உணர்வு வேகத்தைக் கட்ட விழ்த்து விடவுமில்லை, செல்வத்தை 'தோற்கடிக்கவுமில்லை'.

தட்சரின் ஆட்சியின் கீழான பொருளாதார வளர்ச்சி வீதங்கள் 1970களில் இருந்ததைப் போன்றதா கவே இருந்தது. ஆனால், சொத்து ரிமை ஒருமுகப்படுத்தல் இடம்பெற் றதைக் காணக்கூடியதாக இருந்த துடன், ஏற்றத்தாழ்வு மட்டங்களும் கடுமையாக அதிகரித்திருந்தன. தட்ச ரும் அவரை ஆதரித்த லண்டன் நகர நிதிநிறுவனங்களும் நிதிச்சந்தைக ளில் அரச ஒழுங்குபடுத்தல்களை (Deregulation) இல்லாமற் செய் தன. அதனால் இறுதியில் வங்கி முறைமை தகர்ந்துபோவதற்கே வழி யேற்பட்டது.

உள்நாட்டிலென்றாலென்ன, சர்வ தேச அரங்கிலென்றாலென்ன, மக்க ளைக் கவரக்கூடிய குறிப்பிட்ட சில உணர்ச்சிப் பாங்குகளையும் முற்சா ய்வு அல்லது தப்பெண்ணங்களையும் (விருப்பார்வத்துடன் செயற்படுகிற) வலதுசாரி ஊடகங்களின் உதவியு டன் மிகவும் தந்திரமான முறையில் கையாளுவதில் மிகவும் உயர்ந்த ஆற்றலை தட்சர் கொண்டிருந்தார்.

சோசலிசத்தை அல்லது மேற்குலக பொருளாதாரங்களுக்குள் சோசலி சத்தை நோக்கியதாகக் காணப்பட்ட போக்குகளைத் தோற்கடிப்பதில் உறு திபூண்டவர்களும் (மூலதனக்கட்டுப் பாடுகள் போன்ற) தங்களது நடவடிக் கைகள் மீதான எந்தவொரு கட்டுப் பாட்டையும் வெறுக்கின்றவர்களு மான பெருஞ்செல்வாக்குடைய வங் கியாளர்களுக்கும் தொழிலதிபர்க ளுக்குமான கருவியாகவே தட்சர் செயற்பட்டார்.

இரண்டாவது உலகமகா யுத்தத்திற் குப் பின்னரான காலகட்டத்தில் வலு வான நலன்புரி அரசையும் முழுமை யான தொழில்வாய்ப்பைப் பெறுவத ற்கு உதவியாக பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் தலையீட்டை நாடும் போக்கையும் அடிப்படையாகக் கொண்ட கருத்தொருமிப்பொன்று உருவாகியிருந்தது. அந்தக் கருத்தொ ருமிப்பைத் தகர்ப்பதற்கு மேற்குறிப் பிட்ட வங்கியாளர்களும் தொழிலதி பர்களும் அவர்களது சிந்தனைக் குழாமும் திடசங்கற்பம் பூண்டிருந்த னர். தன்னம்பிக்கை பற்றியதும் நலன் புரி அரசிடமிருந்து பெறக்கூடியவை யென்று கருதப்பட்ட பயன்களைப் பற்றியதுமான எந்தவொரு எண்ண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும் திறந்த சந்தை மற்றும் தனிநபர் பொறுப்புணர்வு பற்றிய எண்ணங்களினால் பதிலீடு செய்யப்பட்டன. உயர் குழாத்தின் (elite interests) நலன்களை நோக்கி அதிகாரச் சமநிலையை நகர்த்தும் நோக்கத்தை நியாயப்படுத்துமுகமாகவே இந்தப் பதிலீடு இடம்பெற்றது.

## தொழிற்சங்க இயக்கம்

தொழிற்சங்க இயக்கத்தின் கோட்டையாக விளங்கிய பிரிட்டனின் உற்பத்தி தொழிற்துறையின் (Manufacturing industry) பெரும்பகுதியை சின்னாபின்னமாக்கிய செயற்பாடுகளுக்குத் தட்சர் தலைமை தாங்கினார். வேதனங்களை குறைவாக வைத்திருப்பதற்கும் தொழிற்சங்கத் தீவிரவாதத்தை பலவீனப்படுத்துவதற்கும் தட்சர் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பயன்படுத்தினார். வெறுமனே இருவருடங்களுக்குள்ளாகவே பிரிட்டனின் கைத்தொழில்துறைத்தளத்தின் ஐந்தில் ஒரு பகுதியை தட்சரின் கொள்கைகள் நிர்மூலம் செய்தன.

சொற்ப எண்ணிக்கையானவர்கள் உச்சபட்ச இலாபத்தைப் பெறுவதை உறுதி செய்வதற்காக பிரிட்டனின் உற்பத்தித்துறையில் பெருமளவானவை மலிவான கூலியில் தொழிலாளர்களைப் பெறக்கூடிய பொருளாதாரங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் கையளிக்கப்பட்ட (Out sourcing) அதேவேளை மக்களுக்கான சேவைகளுடன் சம்பந்தப்பட்ட துறைகள், நீதித்துறை மற்றும் வங்கித்துறை ஆகியவை பொருளாதாரத்தின் புதிய சாரதிகள் என்று போற்றப்பட்டன. அதன் விளைவாக, பல தொழிலாளர்களைப் பொறுத்தவரை வாழ்க்கைத் தொழில் ஒன்றைக் கொண்டிருக்கக் கூடிய கண்ணியம் என்பது குறைந்த சம்பளத்துக்கான தரக்குறைவான தொழில்களினாலும் வேலையின்மையினாலும் நிதிப்பாதுகாப்பின்மை மற்றும் கடன் பளுவுடனான வாழ்க்கையினாலும் பதிலீடு செய்யப்பட்டதையே காணக்கூடியதாக இருந்தது.

தட்சரின் ஆட்சியின் கீழ் தேசிய வருமானத்தில் ஊழியர்களின் பங்கு 65 சதவீதத்திலிருந்து 53 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. சாதாரண மக்களின் வேதனங்கள் வீழ்ச்சி கண்டபோது விசேடமாக உயர்ந்த விலை குறிக்கப்பட்ட பொருட்களுக்கான கிராக்கி குறைந்து போனது. பாவனையாளர்களின் செலவை அதிகரிக்குமுகமாக தாக்குப்பிடிக்க முடியாத மட்டத்திலான தனிப்பட்ட கடன் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த விடயத்தைப் பொறுத்தவரை தட்சர் விட்டுச் சென்ற இடத்திலிருந்து ரொனிபிளயரின் ''புதிய தொழில் கட்சி'' அரசாங்கம் தொடர்ந்தது. ''புதிய தொழில் கட்சி''யை உருவாக்குவதற்கான தயாரிப்பு வேலைகளுக்கு களம் அமைத்துக் கொடுத்தமை தட்சர் யுகத்தின் நேர்த்தியான சாதனைகளில் ஒன்றாகும்.

பொருளாதாரம் இனிமேலும் உற்பத்தித்துறையை அதன் கீழ்க் கட்டுமானமாகக் கொண்டிராத நிலையில், நிதி மூலதனமும் ஹெட்ஜிங் நிதியும் கடனும் ஏமாற்றுத்தனமான கொடுக்கல் - வாங்கல்களுமே பொருளாதாரத்தின் ஆதாரமாக மாறிவிட்டநிலையில், இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களின் கிறிமினல் தனங்களினால் ஏற்பட்ட இழப்புகளுக்காக சாதாரண மக்கள் விலையைச் செலுத்த வேண்டியேற்பட்டது. முழுநலம் வாய்ந்த உற்பத்தித்துறையின் உட்கட்டமைப்பினதும் கண்ணியமான ஒரு தொழிலினதும் பெறுமதி என்னவாயிற்று?

தட்சரின் வருடங்களில் பிரிட்டனின் கைத்தொழில்மயம் படிப்படியாக அருகச் செய்யப்பட்டபோது வேலையில்லாத் திண்டாட்டம் மிகவும் கடுமையாகப் பெருகியது. வறியவர்களுக்கும் தனவந்தர்களுக்கும் இடையேயான வெளி அதிர்ச்சி தரத்தக்க வகையில் அதிகரித்தது. எளிதில் பாதிக்கப்படத்தக்க, பலவீனமான பொருளாதாரம், தொழில்வாய்ப்பு இருக்கிறவர்களுக்கும் போதிய வேலையின்மை, வேலையில்லாத் திண்டாட்டம், அவற்றின் விளைவான சமூகச் சீர்குலைவு, பிறர் பொருளைக் கைப்பற்றுவதில் நாட்டம் கொண்ட சுயநல உணர்வை முதன்மைப்படுத்துகிற வக்கிரத்தனமான கலாசாரம் ஆகியவற்றுடன் கூடிய ஒரு வங்கித்துறை நெருக்கடியே தட்சரின் மரபாகும்.

அவரின் மரபு பற்றிய எந்தவொரு மதிப்பீடும் மக்கள் வாழ்வதற்கு ஆசைப்பட்ட சமுதாயத்தின் வகை மாதிரிக்கும் அவர்கள் தற்போது வாழுகின்ற சமுதாயத்தின் வகை மாதிரிக்கும் இடையேயான வெளியை அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்கும்.


துரதிர்ஷ்டவசமாக, இலட்சக்கணக்கான சாதாரண பிரிட்டிஷ் மக்களைப் பொறுத்தவரை மேற்கூறப்பட்ட இரண்டுக்கும் இடையேயான வெளி எட்டிப் பிடிக்கமுடியாத வேறுபாடாக, பாழ்கிடங்காக மாறியிருக்கிறது. பலரைப் பொறுத்தவரை, மார்கரட் தட்சர் பற்றிய மதிப்பீடு ஏற்கனவே கல்லில் செதுக்கப்பட்டுவிட்டது. இறுதியாக, வங்கியாளர்களினதும் ஒரு குறிப்பிட்ட குழுவினரின் ஆதிக்கத்திலான ஆட்சி நிருவாகத்தினதும் கைகளில் பிரிட்டன் தாரை வார்க்கப்படுவதற்கு தட்சர் உதவினார். இத்தகைய குறிப்பிட்ட குழுவினரின் ஆட்சி நிருவாகம் பிரிட்டனில் மாத்திரமல்ல, உலகில் பரந்தளவிலும் கூட ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிவிட்டது. ■




***(வடமேற்கு இங்கிலாந்தைச் சேர்ந்த சமூகக்கொள்கை ஆய்வாளரான கொலின் ரொட்ஹன்ரர் இந்தியப்பத்திரிகைகளில் எழுதி வருபவர்)***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத்தண்டனை


# தமிழக அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றுமா?

ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்ற மூவரைக் காப்பாற்ற வேண்டும் என்ற போராட்டத்திற்கு தமிழகம் மீண்டும் தயாராகிக் கொண்டிருக்கிறது. பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த கல்லூரி விரிவுரையாளரும், பி.ஈ படித்தவருமான தேவிந்தர் பால்சிங் புல்லர் வழக்கில் இந்திய சுப்ரீம் கோர்ட் 12.4.2013 அன்று அளித்துள்ள தீர்ப்பு அதற்கு களம் அமைத்துக் கொடுத்திருக்கிறது. தீர்ப்பு வெளிவந்தவுடனேயே அந்த தீர்ப்பிற்கு மாற்றாக தமிழகத்தில் கருத்துகள் வரத் தொடங்கிவிட்டன. தி.மு.க. தலைவர் கருணாநிதி, ''இந்த தீர்ப்பு அதிர்ச்சியளிக்கிறது. பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய மூவருக்கும் வழங்கப்பட்டுள்ள தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்க மாநில அரசு அமைச்சரவையைக் கூட்டி தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்'' என்று அறிக்கை விட்டார். அதே கருத்தை மறுநாள் மாவட்ட செயலாளர் கூட்டத்தில் தீர்மானமாகப் போட்டார் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் வைகோ. இது தவிர தமிழ் அமைப்புகள் எல்லாம் இதற்காக குரல் கொடுத்து வருகின்றன. பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் ''என் மகன் உயிருடன் இருப்பது தமிழக முதல்வர் ஜெயலலிதாவால்தான். ஆகவே அவரைச் சந்தித்து கோரிக்கை வைக்க விரும்புகிறேன். அவர்தான் என் மகனைக் காப்பாற்ற வேண்டும்'' என்று ஒப்பனாக பேட்டியே கொடுத்திருக்கிறார். மூவரின் உயிரைக் காப்பாற்ற உருவாக்கப்பட்ட இயக்கங்கள் எல்லாம் சேர்ந்து வருகின்ற 30ஆம் திகதி தமி






முத்தையா காசிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகத்தில் மாபெரும் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளன.

இந்த வாதப் பிரதிவாதங்கள் எல்லாமே இந்தியாவில் சட்டப் புத்தகத்தில் இருக்கும் தூக்குத் தண்டனையை நிறைவேற்ற எடுத்த முயற்சிகளின் விளைவாக ஏற்பட்டுள்ள எதிரொலி. குறிப்பாக புதிய குடியரசுத் தலைவராக பொறுப்பேற்ற பிரணாப் முகர்ஜி கருணை மனுக்களை அதிவேகமாக முடிவு செய்வது நாட்டில் தூக்குத் தண்டனைக்கு எதிரான பிரசாரத்தை முடுக்கி விட்டுள்ளது. அவர் வந்த பிறகு முதலில் மும்பைத் தாக்குதலுக்கு காரணமான பயங்கரவாதி கசாப்பிற்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை உறுதி செய்தார். மஹாராஷ்டிரா மாநிலம் புனே சிறைச்சாலையில் இருந்த கசாப் ரகசியமாக தூக்குலிடப்பட்டான். அடுத்து இந்தியப் பாராளுமன்றத்தைத் தாக்கிய அப்சல் குருவின் தூக்குத் தண்டனையை எதிர்த்து வந்திருந்த கருணை மனுவை நிராகரித்தார். திகார் ஜெயிலில் இருந்த அப்சல் குரு திடீரென்று தூக்கிலிடப்பட்டார். இந்த இருவரின் விடயங்களிலும் அந்தத் தண்டனையை நிறைவேற்ற வேண்டிய நிலையில் இருந்த மாநில அரசுகள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவை. அதனால் பிரச்சினை ஏதுமில்லை. ஆனால் இப்போது சுப்ரீம் கோர்ட் நிராகரித்துள்ள புல்லர் வழக்கில் தூக்குத் தண்டனையை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு காங்கிரஸ் அல்லாத அரசிடம் இருக்கிறது. ஏனென்றால் பஞ்சாபில் இருப்பது அகாலி தளம் கட்சியின் அரசு. அதே போல்



ராஜீவ் கொலை கைதிகளின் தூக்குத் தண்டனை உறுதி செய்யப்பட்டாலும், அதை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு தமிழக அரசிடம் இருக்கிறது. இங்கு இருப்பதோ அ.தி.மு.க. அரசு. இது மாதிரியொரு சிக்கலில் ராஜீவ் வழக்கில் தண்டனை பெற்ற மூவரின் தூக்குத் தண்டனை தொங்கிக் கொண்டிருக்க, அந்த தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்படுமா? என்ற கேள்வி தமிழகத்தின் சந்து பொந்துகளில் எல்லாம் எழுந்துள்ளது. அது ஏறக்குறைய ஒரு ''சென்டிமென்டாகவே'' மாறியிருக்கிறது.

இந்தியாவில் தூக்குத் தண்டனைக்கு எதிரான போராட்டம் இன்று நேற்றல்ல 57 வருடங்களுக்கு முன்பிலிருந்தே நடைபெற்று வருகிறது. தூக்குத் தண்டனையை ஒழிக்க வேண்டும் என்று கோரி 1956இல் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட மசோதா நிராகரிக்கப்பட்டது. இருவருடம் கழித்து 1958இல் அதே மாதிரியான மசோதா ராஜ்ய சபையில் வந்தது. அதுவும் விவாதிக்கப்பட்டு, பிறகு வாபஸ் பெறப்பட்டது. மூன்றாவது முறையாக 1962 இல் மீண்டும் ராஜ்ய சபையில் இதே மாதிரி தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிராகரிக்கப்பட்டது. பாராளுமன்றம், ராஜ்ய சபை மட்டுமல்ல, தூக்குத் தண்டனை ஒழிப்பு இந்திய சட்ட கமிஷன் முன்பும் விவாதிக்கப்பட்டது. ஆனால் சட்ட கமிஷன் தனது 35ஆவது அறிக்கையில் தூக்குத் தண்டனை இந்தியாவிற்கு தேவை என்று கூறிவிட்டது. அதற்கு சட்ட கமிஷன்



ஏழு காரணங்களை அடுக்கியது. சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டுவது, பலதரப்பட்ட மக்கள் வாழும் சமுதாயம் அடங்கிய பரந்த இந்தியாவைக்

## ‘எம்.டி.எம்.ஏ. விசாரணை முடியும் வரை பொறுத்திருங்கள்’



திருச்சி வேலுச்சாமி. ஒரு காலத்தில் டாக்டர் சுப்ரமணியம்சுவாமிக்கு மிக நெருக்கமாக இருந்தவர். ராஜீவ் கொலைக்குப் பிறகு ஆரம்பத்திலிருந்தே ''விடுதலைப் புலிகள்'' ராஜீவ் காந்தியைக் கொல்லவில்லை என்ற வாதத்தை எடுத்து வைத்து வருபவர். ஜெயின் கமிஷன் முன்பு கூட ஆஜராகி சாட்சியம் அளித்தவர். சில மாதங்களுக்கு முன்பு ''ராஜீவ் படுகொலை- தூக்குக் கயிற்றில் நிஜம்'' என்ற புத்தகத்தை எழுதி தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியவர். அவரிடம் இந்த மூவரின் தூக்குத் தண்டனை பற்றி கருத்துக் கேட்டோம். இதோ அவரது மினி பேட்டி!

''பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய மூவரையும் தூக்கிலிடுவது என்பது நீதி, நியாயம், நெறிமுறைகள் அனைத்திற்கும் எதிரானது. ராஜீவ் கொலை வழக்குப் பற்றி விசாரித்த ஜெயின் கமிஷன் குறிப்பிட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பாற்றுவது போன்றவை அவற்றுள் முக்கியமான காரணங்களாகும்.

இந்நிலையில், ''தூக்குத் தண்டனை வழங்குவது சட்டபூர்வமானதுதான்'' என்று 1973இல் ''ஜெக்மோகன்சிங்'' என்ற ஒரு வழக்கில் இந்திய சுப்ரீம் கோர்ட்டின் அரசியல் சாசன பெஞ்சே தீர்ப்பளித்தது. அது மட்டுமல்ல, அந்தத் தண்டனைய வழங்க அதிகாரம் அளித்துள்ள இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவு 302ம் செல்லும் என்று 1980 வாக்கில் ''பச்சன்சிங்'' என்பவரது வழக்கில் தீர்ப்பளித்தது சுப்ரீம் கோர்ட். பிறகு இந்த தூக்குத் தண்டனையை எது மாதிரி வழக்குகளில் வழங்கலாம் என்றும் கூட இந்திய உச்சநீதிமன்றம் வரையறை செய்திருக்கிறது. முதலில் ''குற்றத்தின் கொடூரம்'' அடிப்படையில் தூக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்று கூறியது. பிறகு ''குற்றத்தின் கொடூரத்தை'' பார்ப்பதை விட ''குற்றம் செய்தவர்'' பற்றி கணக்கில் எடுத்துக் கொண்டு தூக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்றது. பிறகு வேறு ஒரு வழக்கில், ''குற்றத்தின் கொடூரம்'' ''குற்றம் செய்தவர்'' இரண்டையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தூக்குத்தண்டனை வழங்க வேண்டும் என்றது. அதை இன்னும் சுருக்கி ஒரு கால கட்டத்தில் ''அரிதிலும் அரிதான வழக்குகளில்'' மட்டும் தூக்குத்தண்டனை வழங்க வேண்டும் என்று வழிகாட்டியது சுப்ரீம் கோர்ட். எந்த வழக்குகளில் தூக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்று மட்டுமே சுப்ரீம் கோர்ட் கூறியிருக்கிறதே தவிர, எந்தெந்த வழக்குகளில் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்க வேண்டும் என்று இதுவரை சுப்ரீம் கோர்ட் வரையறுத்து தெளிவான வழிமுறைகளை வகுத்துக் கொடுக்கவில்லை என்பதே சட்ட நிபுணர்களின் கருத்தாக இருக்கிறது. ஏனென்றால் அரசியல் சட்டப் பிரிவு 72இன் கீழும், 161இன் கீழும் அந்த உரிமையை, அதிகாரத்தை இந்திய குடியரசுத் தலைவரிடமும், மாநிலங்களில் உள்ள கவர்னர்களிடமும் விட்டு வைத்துள்ளது. இதனால்தான் தூக்குத் தண்டனைக் கைதிகள் அனைவரும் கவர்னரிடமோ அல்லது குடியரசுத் தலைவரிடமோ ''எங்கள் தண்டனையை ஆயுள் தண்டனையாக குறையுங்கள்'' என்று கருணை மனுக்கள் கொடுத்து காத்திருக்கிறார்கள்.

இது போன்றதொரு முறையீட்டை ராஜீவ் வழக்கில் தூக்குத் தண்டனை பெற்ற பேரறிவாளன், சாந்தன், முருகன், நளினி ஆகிய நால்வருமே செய்தார்கள். முதலில் மாநில கவர்னருக்கு கருணை மனு போட்டார்கள். கவர்னரோ அமைச்சரவை ஆலோசனையைப் பெறாமலேயே அந்த மனுக்களை டிஸ்மிஸ் செய்தார். (கருணை மனுக்களை அமைச்சரவையின் ஆலோசனையின் பேரிலேயே கவர்னர்களோ, குடியரசுத் தலைவரோ முடிவு செய்ய வேண்டும் என்பது தான் இந்திய அரசியல் சட்டம் வகுத்துத் தந்துள்ள நடைமுறை) இதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்கள். ''அரசியல் சட்டப்படி அமைச்சரவையின் ஆலோசனையினைப் பெற்று கருணை மனு மீது கவர்னர் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகவே தன்னிச்சையாக கருணை மனுக்களை தள்ளுபடி செய்தது செல்லாது'' என்று தீர்ப்பளித்தார் நீதியரசர் கோவிந்தராஜ். 1999இல் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டது. இதன் பிறகு அப்போது இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்த நால்வரின் மனுக்களை 19.4.2000 அன்று பரிசீலித்தது. நளினிக்கு தூக்குத் தண்டனை கொடுக்க வேண்டாம் என்று அப்போது குடியரசுத் தலைவராக இருந்த கே.ஆர்.நாராயணனை சந்தித்து முறையிட்டார் சோனியா காந்தி. ''நளினி உட்பட நால்வரையுமே தூக்கிலிடுவது எனக்கு, என் மகனுக்கோ, என் மகளுக்கோ உடன்பாடான விடயமல்ல. ஆகவே அவர்கள் கருணை மனு வரும் போது தூக்குத் தண்டனையை நால்வருக்கும் ரத்துச் செய்ய வேண்

விடயங்களின் அடிப்படையில் உண்மைக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க எம்.டி.எம்.ஏ. (விசாரணைக் குழு) அமைக்கப்பட்டு, சி.பி.ஐ. விசாரித்து வருகிறது. அந்த விசாரணையின் முடிவு என்ன என்பதை இதுவரை சொல்லவில்லை. ஏறக்குறைய 14 வருடங்களாக நடக்கும் இந்த விசாரணையின் முடிவு என்ன என்பதை இந்திய உள்துறை அமைச்சர் கூட இதுவரை தெரிவிக்கவில்லை. உலக நாடுகளில் இந்தியா பழைமையான நாகரீகம், கலாசாரம் போன்றவற்றிற்கு முன்னணி நாடாகத் திகழ்கிறது. அது போன்றதொரு நாட்டில் இந்த மூவரின் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படக்கூடாது. அந்த மூவரையும் தூக்கிலிட எந்தவொரு முகாந்திரமும் இல்லை. இவர்களுக்கு கருணை அளிக்க வேண்டும் என்று 1999 வாக்கில் நானே குடியரசுத் தலைவருக்கு பாக்ஸில் மனு கொடுத்தேன். ஏற்கனவே ஒருமுறை தூக்குத் தண்டனை நிறைவேற்றுவது இந்த மூவர் விடயத்தில் நிறுத்தி வைக்கப்பட்டது. அதன் காரணத்தை கேட்டேன். அப்படி நிறுத்தி வைத்ததற்கான காரணத்தை இதுவரை அவர்கள் தெரிவிக்கவில்லை. இந்த மூவரின் கருணை மனுக்களை அமைச்சரவை கூட்டமே நடத்தி ஆலோசனை செய்யவில்லை என்று தகவல் அறியும் சட்டத்தின் படி நான் கேட்ட ஒரு கேள்விக்குப் பதிலாகக் கொடுத்துள்ளார்கள். அந்த பதில் எல்லாம் இப்போது உச்சநீதிமன்றத்தில் இருக்கிறது.

ஆகவே ''யார் உண்மை குற்றவாளிகள்?'' என்று சி.பி.ஐ.யின் எம்.டி. எம்.ஏ. குழு கண்டுபிடிக்கும் வரையாவது குறைந்தபட்சம் இந்த மூவரின் தூக்குத் தண்டனையை இந்திய அரசும், இங்குள்ள மாநில அரசும் நிறைவேற்றக்கூடாது. அந்த உண்மை தெரியாமல் நிறைவேற்றப்பட்டால் ஜனநாயகத்தின் பெயரில் இந்தியாவில் நாஸிசமும், பாஸிசமும் கொடி கட்டிப் பறக்கிறது என்று உலகமே கைகொட்டிச் சிரிக்கும். அப்படியொரு நிலைக்கு இந்தியாவை தள்ள மாட்டார்கள் என்று நம்புகிறேன். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும் என்று கேட்டுக் கொள்கிறேன்'' என்று குடியரசுத் தலைவருக்கே சோனியா காந்தி கடிதம் எழுதினார். அப்போது அமைச்சரவையைக் கூட்டி ஆலோசித்த அன்றைய முதல்வர் கருணாநிதி, ''கைப்பிள்ளையுடன் இருக்கும் நளினிக்கு கருணை காட்டி அவருடைய தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்க பரிந்துரை செய்யப்படுகிறது. மற்ற மூவரின் கருணை மனுக்கள் நிராகரிக்கலாம்'' என்று மாநில கவர்னருக்கு பரிந்துரை செய்தார். அவ்வாறே அடுத்த இரு தினங்களில் அதாவது 21.4.2000 அன்று நளினியின் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது. ஆனால் பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய மூவரின் கருணை மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. இந்த மூவரின் தூக்குத்தண்டனை உறுதி செய்யப்பட்டது.

கருணை மனுவை கவர்னர் நிராகரித்த உடனே மூவரும் மீண்டும் குடியரசுத் தலைவருக்கு கருணை மனு கொடுத்தார்கள். 28.4.2000 அன்று அந்த மனுக்களை தமிழக அரசு மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தது. இந்த மனு மத்திய அரசிடம் 11 வருடம் நான்கு மாதங்கள் தூங்கியது. பிறகு திடீரென்று 12.8.2011 அன்று இந்த மூவரின் கருணை மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டன. எந்நேரமும் தூக்கிலிடப்படலாம் என்ற நிலை ஏற்பட்ட போது, தமிழகத்தில் மூவரையும் காப்பாற்ற போராட்டங்கள் தொடங்கின. செங்கொடி என்ற இளம் பெண் தற்கொலை செய்து கொண்டாள். அனல் பறந்த ''பப்ளிக் ஒபீனியனின்'' அடிப்படையில், மூவரின் தூக்குத்தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்ற வேண்டும் என்று தமிழக சட்டமன்றத்தில் முதல்வர் ஜெயலலிதா தீர்மானமே கொண்டு வந்து நிறைவேற்றினார். இதே காலகட்டத்தில்தான் ''கருணை மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க எடுத்துக் கொண்ட 14 வருட காலதாமதத்தை'' (தூக்குத் தண்டனையை சுப்ரீம் கோர்ட் இறுதியாக உறுதி செய்தது 8.10.99 என்ற அடிப்படையில்) சுட்டிக்காட்டி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். சென்னை உயர்நீதிமன்றமும் தூக்குத் தண்டனைக்கு தடை விதித்தது. ஆனால் காங்கிரஸ் வழக்கறிஞர்களோ, ''சென்னை உயர்நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணை நடைபெறுவதற்கான சூழ்நிலை இல்லை'' என்று சுட்டிக்காட்டி சுப்ரீம் கோர்ட்டே இதை விசாரிக்க வேண்டும் என்று வழக்கறிஞர்கள் மூலம் கோரிக்கை வைத்தது. அதை மாநில அரசு எதிர்த்தும் கூட, விசாரணையை சுப்ரீம் கோர்ட்டே எடுத்துக் கொண்டிருக்கிறது. (முதன் முதலாக தமிழகத்தைச் சேர்ந்த நீதியரசர் சதாசிவம் வருகின்ற ஜூலை மாதத்தில் இந்திய சுப்ரீம் கோர்ட்டின் தலைமை நீதிபதியாகிறார் என்பது குறிப்பிடத்தக்கது). ஆக ராஜீவ் வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள இந்த மூன்று தூக்குத் தண்டனை கைதிகள் கவர்னருக்கு அளித்த கருணை மனுவும் நிராகரிக்கப்பட்டு விட்டது. குடியரசுத் தலைவருக்கு அளித்த கருணை மனுவும் நிராகரிக்கப்பட்டது. இருந்தாலும், ''கருணை மனுவின் மீது முடிவு எடுப்பதில் ஏற்படும் காலதாமதம் தூக்குத்தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்க ஒரு காரணமா?'' என்ற முக்கிய கேள்வி ''தேவிந்தர் பால் சிங் புல்லர்'' வழக்கில் எழுப்பப்பட்டிருந்த நேரம். ஆகவே, அந்தத் தீர்ப்பு வரும் வரை ராஜீவ் வழக்கிலும் தூக்குத்தண்டனையை நிறுத்தி வைத்துள்ளது சுப்ரீம் கோர்ட்.

இப்போது ''புல்லர்'' வழக்கில் இந்திய சுப்ரீம் கோர்ட் சில விடயங்களை தெளிவுபடுத்தியிருக்கிறது. அது இது தான். (1) ''கருணை மனுக்கள் மீது முடிவு எடுப்பதில் ஏற்படும் தாமதத்தை'' அடிப்படையாக வைத்து பயங்கரவாதம் தொடர்புடைய வழக்குகளில் விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்க முடியாது. (2) ''அப்பாவி மக்களை கருணையே இல்லாமல் கொலை செய்பவர்கள்'' அரசியல் சட்டப்படி உள்ள கருணை கோரும் மனுவைத் தாக்கல் செய்தால், அவர்களுக்கு கருணை காட்ட முடியாது. (3) குடியரசுத் தலைவர் கருணை மனுவை நிராகரித்து விட்டால் அதன் பிறகு அந்த அதிகாரத்திற்குள் நீதி மன்றம் தலையிடுவதற்கு மிகக் குறைவான சந்தர்ப்பங்களே இருக்கின்றன. ''மனதைச் செலுத்தாமல் முடிவு எடுத்தல்'' ''சம்பந்தமில்லாத விடயங்களின் அடிப்படையில் முடிவு எடுத்தல்'' ''ஒருதலைப்பட்சமாக அல்லது கெட்ட நோக்கத்துடன் முடிவு எடுத்தல்'' போன்ற காரணங்களின் அடிப்படையில் மட்டுமே கருணை மனு தள்ளுபடி விவகாரத்தில் குடியரசுத் தலைவரின் அதிகாரத்திற்குள் நீதி மன்றம் தலையிட முடியும்.(4) அதே போல் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவரோ அல்லது அவருக்கு வேண்டியவர்களோ கருணை மனுவை முடிவு செய்ய விடாமல் போராட்டங்கள், மனுக்கள் கொடுத்து தாமதம் செய்தால், அந்த தாமதத்தை நீதிமன்றங்கள் ''காரணமாக'' எடுத்துக் கொள்ள முடியாது. கருணை மனுக்கள் மீது முடிவு எடுப்பதில் ஏற்படும் தாமதம் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்க ஒரு காரணம் என்று இதுவரை ஒரு சில வழக்குகளில் உச்சநீதிமன்றம் சொல்லி வந்தது. அந்த நிலைமை இப்போது ''புல்லர்'' வழக்கில் முற்றிலும் மாறி விட்டது. குறிப்பாக ''பயங்கரவாதிகள்'' விடயத்தில் இந்த காரணத்தை எடுத்துக் கொள்ளவே முடியாது என்றே அறுதியிட்டுக் கூறி விட்டது.

பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோர் விடயத்தில் ஒரேயொரு ஆறுதல் செய்தி இருக்கிறது. அவர்கள் ராஜீவைக் கொன்றது பயங்கரவாத செயல் அல்ல என்று இந்திய சுப்ரீம் கோர்ட் ஏற்கனவே கூறியிருக்கிறது. இப்போது ''புல்லர்'' வழக்கில் ''கருணை மனுக்கள் மீது ஏற்படும் காலதாமதம்'' பயங்கரவாத சட்டங்களின் கீழ்வரும் வழக்குகளுக்கு பொருந்தாது என்று கூறியிருப்பதால், இந்த மூவரின் முன்பு உள்ள ''இருளில்'' ஒரு ஒளிக்கீற்று தெரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்பு இருக்கிறது. அதேநேரத்தில் ''தொடர்ந்து மனுக்களும்,வழக்குகளும் போட்டு கருணை மனுவின் மீது முடிவு எடுக்க விடாமல் செய்தால் அந்த காலதாமதத்தை கணக்கில் எடுத்துக் கொள்ள முடியாது'' என்று கூறியிருப்பது, இந்த மூவருக்கும் சிக்கலாகவும் இருக்கிறது. ஏனென்றால் மூவரின் தூக்குத்தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்கச் சொல்லி எண்ணற்ற போராட்டங்கள் தமிழகத்தில் நடந்து விட்டன. மனுக்கள் கொடுக்கப்பட்டு விட்டது. இன்னும் சொல்லப்போனால் இவர்கள் பற்றிய வழக்கை சென்னை உயர்நீதி மன்றத்தில் விசாரிக்க முடியாது என்று வாதாடி அந்த வழக்கே சுப்ரீம் கோர்ட்டிற்கு மாற்றப்பட்டு விட்டது. ஆகவே ''புல்லர்'' வழக்கில் சொல்லப்பட்டுள்ள ஒரு விடயம் மூவருக்கும் சாதகம் என்றால், இன்னொரு விடயம் பாதகமாகத்தான் இருக்கிறது.

இனி இவர்களின் உயிரைக் காப்பாற்றும் ஆயுதம் மாநில அரசிடம் மட்டுமே இருக்கிறது. அமைச்சரவையில் தீர்மானம் போட்டு அனுப்பினால் ஒருவேளை இந்த மூவரின் வாழ்வில் வசந்தம் வருவதற்கு வாய்ப்புக் கிடைக்கலாம். அதில் கூட மாநில அரசுக்கு ஒரு சிக்கல் இருக்கிறது. ஏற்கனவே இந்த மூவரின் கருணை மனுக்கள் மாநில அரசின் பரிந்துரையின் பேரில் கவர்னருக்கு அனுப்பப்பட்டு நிராகரிக்கப்பட்டு விட்டது. ஆகவே இனி மாநில அரசுக்கு இந்த விடயத்தில் கவர்னருக்கு பரிந்துரை செய்யும் அதிகாரம் இல்லை. அதற்கு முக்கிய காரணம் கவர்னரிடம் நிராகரிக்கப்பட்ட பிறகு, அந்த மூவரும் குடியரசுத் தலைவருக்கு கருணை மனுக்கள் கொடுத்தார்கள். அங்கேயும் அந்த மனுக்கள் நிராகரிக்கப்பட்டு விட்டன. 1991 வாக்கில் மாநில அரசுகளுக்கு மத்திய அரசு இது மாதிரி கருணை மனுக்கள் விடயத்தில் ஒரு கடிதம் அனுப்பியது. அந்தக் கடிதத்தில், ''ஒரு முறை குடியரசு தலைவர் கருணை மனுவை நிராகரித்து விட்டால் மீண்டும் வரும் கருணை மனுக்களை கவர்னர் பரிசீலிக்கக்கூடாது. ஏதாவது புதிய காரணங்கள் அடிப்படையில் கருணை மனுக்கள் மீண்டும் கொடுக்கப்பட்டால், அந்த மனுக்கள் ''மீண்டும்'' குடியரசுத் தலைவரிடம்தான் வர வேண்டும்'' என்று அந்தக் கடிதத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. ''புல்லர்'' வழக்கை சுட்டிக்காட்டி புதிய கருணை மனுக்களை இனி அந்த மூவரும் மீண்டும் ஒரு முறை குடியரசுத் தலைவருக்கு வேண்டுமானால் முறையிடலாம். சுப்ரீம் கோர்ட்டில் உள்ள வழக்கு முடியட்டும் என்று அவர்கள் ஒரு வேளை காத்திருக்கலாம்.


இப்போது மீண்டும் மாநில அரசு அமைச்சரவைத் தீர்மானம் போட வேண்டும் என்று தமிழகத்தில் அனைத்து கட்சிகளும், தமிழ் அமைப்புகளும் கோரிக்கை விடுத்துள்ளன. இதே மாதிரி கோரிக்கை முன்பு 2011 இல் கருணை மனுவை குடியரசுத் தலைவர் நிராகரித்த உடன் எழுந்தது. அப்போது தமிழக சட்டமன்றத்தில் பேசிய முதல்வர் ஜெயலலிதா, ''குடியரசுத் தலைவர் கருணை மனுவை நிராகரித்திருப்பதால், தூக்குத்தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்க பரிந்துரை செய்யும் அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை. ஏதோ எனக்கு அதிகாரம் இருப்பது போல் யாரும் பேச வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்'' என்றே 29.8.2011 அன்று கூறியிருக்கிறார். அந்த அடிப்படையில் பார்த்தால் மூவரின் தூக்குத் தண்டனையை குறைக்க தமிழக அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றுமா என்பது கேள்விக்குறிதான். ஆனால் எப்படி ''இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும்'', ''இலங்கை ஜனாதிபதி மீது சர்வதேச விசாரணை நடத்த வேண்டும்'', ''தமிழ் ஈழம் அமைய பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும்'', ''மூவரின் தூக்குத்தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க வேண்டும்'' என்று தமிழக சட்டமன்றத்தில் முதல்வர் ஜெயலலிதா தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றினாரோ, அதே மாதிரியொரு தீர்மானம் மீண்டும் வரலாம். அந்தத் தீர்மானத்தால் மூவரின் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாக குறையும் வாய்ப்பு ரொம்ப ரொம்பக் குறைவு. ஆனால் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டால், கட்சிகள் மத்தியில் நிலவும் அரசியல் ''திசைமாறும்'' ஆபத்து இருக்கிறது! ■



வியாபாரம் சிறக்க
விளம்பரம் தேவை
உங்கள் விளம்பரங்களை
சமகால செய்திகளை சுமந்து வரும்
சமகாலத்தில்
பிரசுரித்திட இன்றே அழையுங்கள்.
மோகன்
0772 546 646


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# பிரதமர் வேட்பாளர்கள் பற்றிய விவாதங்கள்

ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இடம்பெற்ற நிகழ்வுகள் குறித்து இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இயல்பாகவே மகிழ்ச்சியடைந்திருப்பார் என்பதிற் சந்தேகமில்லை. அமெரிக்காவின் தீர்மானத்துக்கு திருத்தங்களை முன் மொழியுமாறு இந்திய அரசாங்கத்துக்கு கடுமையான நெருக்குதல்கள் செய்யப்பட்ட போதிலும் கூட, ராஜபக்ஷவினால் ஒரு மென்மையான தீர்மானத்துடன் தப்பிச் செல்லக்கூடியதாக இருந்தது. மன்மோகன் சிங் அரசாங்கம் அதன் நிலைப்பாட்டைக் கடுமையாக்க வேண்டுமென்பதற்காக நிர்ப்பந்தத்தைக் கொடுக்க திராவிட முன்னேற்றக் கழகமும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் அவற்றின் சகல தந்திரங்களையும் பயன்படுத்தின. மத்தியில் ஆளும் கூட்டணியின் இரண்டாவது பங்காளிக் கட்சியான தி.மு.க.வும் தமிழ் நாட்டில் உள்ள ஏனைய கட்சிகளும் காட்டிய எதிர்ப்புகளைப் பொருட்படுத்தாமல், விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இலங்கையை இந்தியா ஆதரிக்கத் தொடங்கியதிலிருந்து மன்மோகன் சிங் அரசாங்கம் ஜனாதிபதி ராஜபக்ஷ மீது மென்மையான போக்கையே கடைப்பிடித்து வந்தது.

இந்திய அரசாங்கம் விரும்பியிருந்தால் அமெரிக்காவுடன் சேர்ந்து செயற்பட்டு இலங்கைக்கு எதிராகக் கடுமையான தீர்மானமொன்றைக் கொண்டுவந்திருக்க முடியும். ஆனால், அதற்குப் பதிலாக இந்தியா அவர்களுடன் சேர்ந்து தீர்மானத்தின் கடுமையைத் தளர்த்தியதையே காணக்கூடியதாக இருந்தது. கூட்டணி அரசியல் காரணமாகவும் லோக்சபாவில் இருக்கக்கூடிய உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் தி.மு.க.வுக்கு இருந்த முக்கியத்துவம் காரணமாகவும் கடந்த வருடத்தைப் போன்றே ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக வாக்களிக்க வேண்டியிருக்கும் என்பது ஆரம்பத்தில் இருந்தே தெளிவாகத் தெரிந்த போதிலும், இந்தியா இவ்வாறு நடந்து கொண்டது என்பது கவனிக்கத் தக்கது. அந்த வகையில் நோக்குகையில், பாரம்பரிய பிணைப்புகளைக் கொண்டுள்ள முக்கியமான அயல் நாட்டுடனான நல்லுறவைப் பேணிப் பாதுகாப்பதற்கு மன்மோகன் சிங் அரசாங்கம் அதனால் சாத்தியமான அளவுக்கு கூடுதல் பட்சமானதைச் செய்திருக்கிறது.

ஆனால், பாவம், மன்மோகன் சிங் முகங்கொடுக்க வேண்டியிருக்கிற விளைவுகளைப் பாருங்கள். முக்கியமான நேச அணியொன்றை இழந்திருக்கும் அவரின் அரசாங்கம் தப்பிப் பிழைப்பதற்கு இப்போது போராடிக் கொண்டிருக்கிறது. உண்மையில் அது ஒருவகை கோமா நிலைக்கும் தள்ளப்பட்டிருக்கிறது. லோக்சபாவில் அரசாங்கத்தின் பலம் சிறுபான்மையாகிவிட்ட நிலையில், தன்னை வெளியில் இருந்து ஆதரிக்கும்



எம்.பி.வித்தியாதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாஜ்வாதிக் கட்சி மற்றும் பகுஜன் சமாஜ் கட்சி தொடர்பில் 'அதட்டலும் அரவணை ப்பும்' என்ற வகையிலான அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டியிருக்கிறது. முலாயம் சிங் யாதவ் தலைமையிலான சமாஜ்வாதி கட்சி தற்போது உத்தரப்பிரதேசத்தை ஆட்சிசெய்கிறது. பகுஜன் சமாஜ் கட்சி அந்த மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் மாயாவதி தலைமையிலானது.

இத்தகைய அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் காரணமாக அரசாங்கத்தின் 'உயிர்வாழ்வு' நிச்சயமற்றதாக இருக்கிறது. 2014 ஏப்ரில் வரை அதிகாரத்தில் இருப்பதற்கு அதற்கு ஆணையிருக்கிறது என்ற போதிலும், இவ்வருட இறுதியில் பொதுத் தேர்தலில் நடைபெறக்கூடிய சாத்தியங்கள் குறித்து சகல கட்சிகளும் பேச ஆரம்பித்திருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது. மூத்த அரசியல்வாதியும் முக்கியமான அமைச்சருமான சரத்பவார் கூட எதிர்பார்க்கப்பட்டதைக் காட்டிலும் முன் கூட்டியே பொதுத் தேர்தல் நடைபெறக்கூடும் என்று நினைக்கிறார். பவாரினால் ஸ்தாபிக்கப்பட்ட தேசிய காங்கிரஸ் கட்சி ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் முக்கியமான ஒரு பங்காளி. உரிய காலத்துக்கு முன்கூட்டியே பாராளுமன்றத் தேர்தல் நடைபெறுவது பெரும்பாலும் நிச்சயம் என்று பவார் எதிர்வு கூறுகிறார். தி.மு.க.வின் வெளியேற்றத்துக்குப் பிறகு காங்கிரஸ் தலைமையிலான கூட்டரசாங்கம் நொய்தானதாகிவிட்டது என்றும் அவர் கூறுகிறார். அநாவசியமாகப் பேசுகிற ஒரு பேர்வழியல்ல பவார். அவர் இவ்வாறெல்லாம் கூறுவதையடுத்து டில்லி அரசியல் அரங்கில் பெரும் சலசலப்பு ஏற்பட்டிருக்கிறது.

கூட்டரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகள் கூடி ஆராய்ந்து தேர்தல்களை எதிர்நோக்குவதற்கான திட்டங்களை வகுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியிருக்கிறார். அடுத்த பொதுத் தேர்தலுக்கான தந்திரோபாயத்தை ஆராய்வதற்கு கூட்டமொன்றுக்கு அழைப்பு விடுக்குமாறு ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவியான சோனியா காந்திக்கு கடிதமொன்றை எழுதியதாகவும் பவார் தகவல் வெளியிட்டிருக்கிறார்.

'முன்னைய இரு தேர்தல்களிலும் கலாநிதி மன்மோகன் சிங்கை பிரதமர் பதவிக்கான வேட்பாளராக நாம் முன்னிறுத்தினோம். அப்போது ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக்கு தி.மு.க. மற்றும் திரிணாமுல் காங்கிரஸ் போன்ற பல கட்சிகளின் ஆதரவு இருந்தது. இப்போது கூட்டணியின் பாராளுமன்றப் பலம் சுருங்கிவிட்டது. தேசிய காங்கிரஸ் கட்சியும் தேசிய மகாநாட்டுக் கட்சியும் மாத்திரமே அதன் நேச அணிகளாக இருக்கின்றன என்று பவார் சுட்டிக் காட்டியிருக்கிறார். தனது முன்முயற்சியில் மூன்றாவது முன்னணி ஒன்று அமைக்கப்படக்கூடிய சாத்தியம் குறித்து வெளிவருகிற செய்திகளை அவர் மறுத்திருக்கிறார். அரசியல் சார்புகளைப் பற்றிக் கணக்கில் எடுக்காமல் தான் ஆட்களுடன் நல்லுறவுகளை எப்போதுமே பேணி வந்திருப்பதாகக் கூறியிருக்கும் பவார், ஜனநாயகத்திலே சகல தரப்பினருடனும் கலந்துரையாடல்களை நடத்த வேண்டியிருக்கிறது என்றும் சுட்டிக் காட்டினார்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு (பாரதிய ஜனதாவின் தலைவராக தான் இருந்த போது) 'சிரேஷ்ட தலைவர்' ஒருவர் தன்னை அணுகியதாக நிதிஷ் கட்காரி கூறியிருக்கும் பின்னணியில் பவார் மேற்படி கருத்துகளை வெளியிட்டிருப்பதால் அவை கவனத்தைப் பெறுவதாக அமைந்திருக்கின்றன. அரசியல் அரங்கில் எதிர் எதிர் முனைகளில் இருந்தாலும் கூட, பவாரும் கட்காரியும் நெருக்கமான தொடர்புகளைப் பேணிவருகிறார்கள். அதனால், கட்காரி வெளியிட்ட மேற்படி தகவல் அரசியல் வட்டாரங்களில் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால், தனது கட்சிக்கு ஒன்பது எம்.பி.க்களே இருப்பதால் அத்தகைய சிறிய பலத்தைப் பயன்படுத்தி அரசாங்கத்தைக் கவிழ்க்க முடியாது என்கிறார் பவார்.

எவ்வாறெனினும், மன்மோகன் சிங் அரசாங்கம் நாளாந்த அடிப்படையில் உயிர்பிழைத்துக் கொண்டிருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் பிரதான எதிர்க்கட்சியான பாரதிய ஜனதா உட்பட பெரும்பாலான கட்சிகள் உரிய காலத்துக்கு முன்கூட்டியே பொதுத்தேர்தலொன்றை எதிர்நோக்க விரும்பவில்லை என்பதேயாகும். அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு தனது கட்சி விரும்பப் போவதில்லை என்று பாரதிய ஜனதாவின் தலைவர் ராஜ்நாத் சிங் வெளிப்படையாகக் கூறியிருப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது. அரசாங்கம் தானாகவே வீழ்ச்சி காண்பதைக் காணவே தான் விரும்புவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார். இதற்கான காரணம் தெளிவானது. அரசாங்கத்தின் செல்வாக்கு படுமோசமாகக் குறைந்திருக்கும் நிலையில், அதை கவிழ்ப்பதன் மூலம் அனுதாபத்தைத் தேடிக் கொடுக்க பாரதிய ஜனதா விரும்பவில்லை.

தேர்தல் பற்றிய நிலைவரம் தெளிவானதாக இல்லாவிட்டாலும் கூட, எதிர்காலப் பிரதமர் வேட்பாளர் பற்றிய தீவிர விவாதமொன்று பிரதான

**குஜராத்தில் தான் சாதித்ததை நாட்டின் ஏனைய மாநிலங்களில் சாதிக்க முடியும் என்று நரேந்திர மோடி நிரூபிக்கவேண்டியிருக்கிறது.**

**காங்கிரஸின் சரித்திர சுமைகளை விரும்பியோ, விரும்பாமலோ சுமந்துகொண்டு செல்ல வேண்டிய நிலை ராகுல் காந்திக்கு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக பாரம்பரிய ஊடகங்களிலும் சமூக ஊடகங்களிலும் மூண்டிருக்கிறது. இந்த விவாதம் காரணமாக காங்கிரஸ் கட்சியும் பாரதிய ஜனதாக் கட்சியும் பாதிக்கப்படுகின்றன. இவ் விவாதம் பாரதிய ஜனதாவின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரும் குஜராத் மாநில முதலமைச்சருமான நரேந்திர மோடிக்கும் காங்கிரஸின் உபதலைவர் ராகுல் காந்திக்கும் இடையிலானதாகவே இருக்கிறது. மன்மோகன் சிங் கூட மீண்டும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அதிகாரத்துக்கு வந்தால் பிரதமராக இருப்பதற்கு தய ங்கப் போவதில்லை என்று கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

நாடு பூராகவும் கட்சியைக் கட்டியெழுப்புவதற்கே தான் அதி முன்னுரிமை கொடுக்கப் போவதாகவும் பிரதமர் பதவியில் தனக்கு அக்கறையில்லை என்றும் ராகுல் காந்தி கூறியிருக்கிறார். மாறாக, மோடி இப்போது தன்னை தேசிய அரங்கில் சந்தைப்படுத்த ஆரம்பித்திருக்கிறார். பிரதமர் பதவிக்கான சவாலை ஏற்பதற்குத் தயாராகியிருப்பதாக இதன் மூலம் அவர் தெளிவாகவே உணர்த்துகிறார்.

இந்திய வாக்காளர்களுக்கு எது நல்லது எது கெட்டது, சமுதாயத்துக்கு யார் நல்லவர், யார் கெடுதியானவர் என்பது குறித்து அரசியல் ஆய்வாளர்களும் அவதானிகளும் தங்களது மதிப்பீடுகளை வெளியிட்டுக் கொண்டிருப்பதையடுத்து மூண்டிருக்கும் விவாதம் கவனத்தை ஈர்க்கிறது என்பதுடன், சுவாரஸ்யமானதாகவும் உள்ளது. நரேந்திரமோடியின் கடந்த காலச் செயற்பாடுகளும் அவரது ஆட்சிப் பாணியும் நன்கு தெரிந்தவை என்கிற அதேவேளை, ராகுல் காந்தி இதுவரை அரசாங்கத்தில் எந்தவொரு பதவியையும் வகிக்காதவர் என்பதால் அவர் அரசியல் முறைமை பற்றி விடுக்கின்ற அறிக்கைகளும் சமுதாயத்தைப் பற்றி தெரிவித்துவருகின்ற கருத்துகளுமே விவாதத்தின் பகுதிகளாக மாறியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. நாட்டின் ஆட்சி முறையை மாற்றியமைப்



*2009ஆம் ஆண்டு ஒரே மேடையில் மோடியும் நிதிஷ் குமாரும்*

பது குறித்தும் மக்களுக்கு வழங்கப்படவேண்டிய சேவைகளை மேம்படுத்துவது குறித்தும் நரேந்திரமோடி உறுதி மொழிகளை வழங்குகிறார். இதற்கு அவர் குஜராத் மாநிலத்தில் தனது 11 வருடகால ஆட்சியின் சாதனைகளை சான்றாக முன்வைக்கிறார். எனவே, அவரைப் பொறுத்தவரை தனது ஆற்றல்கள் பற்றி மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டிய தேவையில்லாமலிருக்கலாம். ஆனால், ராகுல் காந்தியைப் பொறுத்தவரை, அவர் தனது கட்சியும் குடும்பத்தினரும் செய்த நன்மை, தீமைகள் சகலவற்றையும் சுமக்க வேண்டியவராக இருக்கிறார். சுமார் அரை நூற்றாண்டு காலமாக நாட்டையும் பெரும்பாலான மாநிலங்களையும் ஆட்சி செய்த காங்கிரஸின் சரித்திரச் சுமைகளை விரும்பியோ விரும்பாமலோ சுமந்து கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டிய நிலை ராகுல் காந்திக்கு. காங்கிரஸ் கட்சியிடமிருந்தோ, அல்லது நேரு - காந்தி குடும்பத்திடமிருந்து அவரால் தூரவிலகிச் செல்ல முடியாது. காந்தி குடும்பம் பெருமளவு செல்வத்தைச் சேர்த்து வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கிவைத்திருப்பதாக பல வாக்காளர்கள் குறிப்பாக இளைஞர்கள் நம்புகிறார்கள்.

குஜராத்தில் தான் சாதித்ததை நாட்டின் ஏனைய மாநிலங்களில் சாதிக்க முடியும் என்று நரேந்திர மோடி நிரூபிக்க வேண்டியிருக்கிறது. கரையோர மாநிலமொன்றுக்கு எது நல்லதோ அது இந்தியாவைப் போன்ற பல்வகைமையைக் கொண்ட நாடு முழுவதற்கும் சமமான அளவுக்கு நல்லதாக இருக்குமென்பதை அவர் நிரூபித்தாக வேண்டும். நரேந்திரமோடியும் பாரதிய ஜனதாவும் நாட்டு மக்களுக்கு காட்சிப்படுத்துகின்ற குஜராத் பாணி பொருளாதார அபிவிருத்தி தனவந்தர்களுக்கும் வறியவர்களுக்கும் இடையிலான வெளியைக் குறைப்பதற்கு வழிவகுக்கவில்லை. பொருளாதாரக் குறிகாட்டிகளைப் பொறுத்தவரை குஜராத் சிறப்பாகச் செயற்பாட்டை வெளிக்காட்டியிருக்கிறதென்று ஏனைய கட்சிகளின் தலைவர்களும் கூட, தனிப்பட்ட முறை

**தேசிய ஜனநாயக கூட்டணியின் பிரதமர் வேட்பாளராக மோடியை வர அனுமதிப்பது தனது கட்சியைப் பாதிக்கும் என்று நிதீஸ் குமார் பயப்படுகிறார். அவருக்கு பிரதமர் வேட்பாளராக வரவேண்டும் என்ற நோக்கம் இருக்கிறது என்னவோ?**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
ஆவணம் நூலகம் யாழ்ப்பாணம்.

யில் கூறியிருக்கின்றபோதிலும், நிலைமை இவ்வாறுதான் இருக்கிறது.

தற்போதைய தருணத்தில் நரேந்திர மோடிக்கு அனுகூல மாநில நிலை இருக்கிறது போலத் தோன்றுகிறது. ஏனென்றால் பெருவாரியான ஊழல் குற்றச்சாட்டுகள் காரணமாக காங்கிரஸ் பாரிய நம்பிக்கைப் பற்றாக்குறைக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கிறது. ராகுல் காந்திக்கு இதுவெல்லாம் நன்றாகவே தெரியும். கடந்த உத்தரப் பிரதேச சட்டசபைத் தேர்தலில் அவரின் தொகுதியிலோ அல்லது தாயாரின் தொகுதியிலோ கூட காங்கிரஸ் படுமோசமான பின்னடைவையே சந்திக்க வேண்டியேற்பட்டது.

### தேசிய ஜனநாயக கூட்டணியில் பிளவு

பாரதிய ஜனதாவின் உயர்மட்டத்தில் மோடியின் எழுநிலை அந்தக் கட்சியின் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்குள் பிளவுகளை தோற்றுவித்துக் கொண்டிருக்கிறது. மிகவும் வெளிப்படையாக மோடியை எதிர்ப்பவர்கள் பீஹார் மாநிலத்தில் ஆளும் கூட்டணிக்கு தலைமை தாங்குகிற ஐக்கிய ஜனதா தள் கட்சியைச் சேர்ந்த தலைவர்களே. அக்கட்சியின் தலைவரும் மாநிலத்தின் முதலமைச்சருமான நிதிஷ்குமார் பல வருடங்களாக மோடியை எதிர்த்து வருகிறார். கடந்த சட்டசபைத் தேர்தலின் போது தனது மாநிலத்தில் பிரசாரம் செய்வதற்கு அவர் மோடியை அனுமதிக்கவில்லை, எந்தவொரு மேடையிலும் மோடியுடன் சேர்ந்து , நிற்பதையும் கூட நிதிஷ்குமார் தவிர்த்தே வந்திருக்கிறார். பாரதிய ஜனதாவுடன் சேர்ந்து கூட்டணி அமைத்தே ஐக்கிய ஜனதா தள் பீஹாரில் ஆட்சிக்குவந்தது. இக்கூட்டணியில் உயர்சாதிகளைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாக பாரதிய ஜனதாவும் பின்தங்கிய சாதிகளையும் முஸ்லிம்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாக ஐக்கிய ஜனதா தள் கட்சியும் விளங்குகின்றன. முன்னதாக பீஹார் மாநிலம் சுமார் இரு தசாப்தங்களாக லல்லு பிரசாத் யாதவ் தலைமையிலான ராஷ்திரிய ஜனதா தள் கட்சியின் ஆட்சியின் கீழ் இருந்தது. இந்த இரு தசாப்தங்களும் இந்த மாநிலத்தின் இருண்ட கால கட்டமாகும். குஜராத்தில் 2002 ஆம் ஆண்டில் இடம் பெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான கலவரத்தை கட்டுப்படுத்துவதற்கு போதுமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதற்காக குற்றஞ்சாட்டப்படுகிற மோடியை பிரதமர் வேட்பாளராக வர அனுமதிப்பது தனது கட்சியைக் கடுமையாகப் பாதிக்கும் என்று நிதிஷ்குமார் பயப்படுகிறார். அல்லது அவருக்கு பிரதமர் வேட்



வராக இருக்க வேண்டும் என்று அவர் மகாநாட்டில் வலியுறுத்தியதைக் காணக்கூடியதாக இருந்தது. அதிகாரத்துக்காக மதச்சார்பின்மையை ஒருபோதும் விட்டுக்கொடுக்க முடியாது என்று அவர் பிரகடனம் செய்தார்.

'பலவந்தத்தினால் நாட்டை நிருவகிக்க முடியுமென்று யாரும் நினைத்து விடக்கூடாது. சில சந்தர்ப்பங்களில் நீங்கள் தொப்பியை அணிய வேண்டிவரும். வேறுசில சந்தர்ப்பங்களில் நீங்கள் திலகமிட வேண்டிவரும்' என்று நிதிஷ்குமார் கூறினார். கடந்த வருடம் மோடி மேற்கொண்ட உண்ணாவிரதத்தின்போது மௌலவியொருவர் கொடுத்த தொப்பியை தனது தலையில் போட்டுக் கொள்வதற்கு மோடி மறுத்த சம்பவத்தையே பீஹார் முதலமைச்சர் இவ்வாறு மறைமுகமாகக் கூறியிருக்கிறார்.

மோடி மீது நிதிஷ்குமார் தொடுத்த இத்தாக்குதலையடுத்து உடனடியாக

**பாரதிய ஜனதாவின் சகல தலைவர்களுக்கும் தேசிய ஜனநாயகக்கூட்டணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கும் ஏற்புடைய ஒரே தலைவர் எல்.கே.அத்வானி என்றே தோன்றுகிறது. ஆனால் மீண்டும் ஒரு தடவை பிரதமர் வேட்பாளராக வருவதற்கு அவர் இணங்குவாரா?**

பாளராகும் நோக்கம் இருக்கிறதோ?

தற்போது நிலைவரம் கூட்டணியை உடைக்கக்கூடிய அளவுக்கு மோதலாக மாறிக் கொண்டிருக்கிறது. முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் காலத்திலேயே பாரதிய ஜனதாவுக்கும் ஐக்கிய ஜனதா தள் கட்சிக்கும் இடையேயான கூட்டணி உருவாக்கப்பட்டது. அண்மையில் புதுடில்லிக்கு வந்த நிதிஷ்குமார் தனது கட்சியின் இருநாள் தேசிய மகாநாட்டில் மோடியை கடுமையாகத் தாக்கிப் பேசியதைக் காணக்கூடியதாக இருந்தது. தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பிரதமர் வேட்பாளராக வரக்கூடிய எவருமே சந்தேகத்துக்கு அப்பாற்பட்ட முறையில் மதச்சார்பற்ற நம்பிக்கைச் சான்றைக்கொண்ட தலை

கூடிய பாரதிய ஜனதா தலைவர்கள் 'சிறப்பாகச் செயற்படாத - ஊழல் தனமான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கத்தை தோற்கடிப்பதே தற்போதைய தருணத்தின் தேவையாகும். அந்த நோக்கத்தின் மீது எதிரணிக்கட்சிகளும் நேச அணிகளும் கவனத்தைக் குவிக்கும் என்று எதிர்பார்க்கிறோம். எமது கட்சியைச் சேர்ந்த முதலமைச்சர்களைத் தாக்குவதற்கு அவர்கள் தங்கள் சக்தியை விரயம் செய்தால் அது துரதிர்ஷ்டவசமானதாகும்' என்று கூறினார்கள்.

பிரதமர் வேட்பாளர் யார் என்பது தொடர்பில் நிபந்தனைகள் விதிப்பதை தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகள் நிறுத்திக் கொள்ள வேண்டுமென்று பாரதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனதா தலைவர்கள் காட்டிய எச்சரிக்கைச் சமிக்ஞையாகவே மேற்படி கூற்று அமைந்தது. குறிப்பாக, மோடியின் பெறுமதி அதிகரித்துக் கொண்டு வருவதால் 'மிகுந்த மக்கள் செல்வாக்குடைய தலைவரான' அவர் மீது தாக்குதல் தொடுப்பதை இனிமேல் பொறுத்துக் கொள்ளப்போவதில்லை என்று ஐக்கிய ஜனதா தள் கட்சிக்குக் காட்டப்பட்ட சமிக்ஞையாகவே இதை எடுக்க வேண்டும்.

மோடியுடன் இணைந்து செயற்படுவதற்குத் தயாரில்லை என்பதை தெட்டத் தெளிவாக வெளிக்காட்டும் வகையில் ஐக்கிய ஜனதா தள் அதன் இருநாள் மகாநாட்டின் இறுதியில் தீர்மானத்தையும் நிறைவேற்றியது. தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பிரதமர் வேட்பாளர் மதச்சார்பற்ற நம்பகத்தன்மை கொண்டிருக்க வேண்டும் என்று தீர்மானத்தில் கூறப்பட்டது. கடந்த காலத்தில் நடைமுறையில் இருந்துவருகிற பாரம்பரியத்துக்கு ஏற்ற முறையில், பிரதமர் பதவிக்கான வேட்பாளரின் பெயரை இவ்வருட இறுதிக்குள் அறிவிக்க வேண்டுமென்று பாரதிய ஜனதாவுக்கு ஐக்கிய ஜனதா தளத்தின் தீர்மானம், காலக்கெடுவும் விதித்திருக்கிறது.

எதிர்காலத் தலைவர் சர்ச்சைக்குரிய விவகாரங்களான அயோத்தி, கோவில, பொதுவான ஒரு குடியியல் கோவை, அரசியலமைப்பின் 370ஆவது சரத்து ஆகியவற்றுக்கு தற்போதைக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்ற உறுதிமொழியை வழங்க வேண்டும். ஆட்சிமுறைக்கான நிகழ்ச்சித் திட்டத்தை ஏற்றுக்கொள்வதாகவும் சகல தரப்பினரையும் உள்ளடக்கிய அபிவிருத்திக் கொள்கையை முன்னெடுப்பதாகவும் பின்தங்கிய மாநிலங்களையும் பிராந்தியங்களையும் அபிவிருத்தி செய்வதாகவும் உறுதிமொழி தரவேண்டும் என்றும் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டது.

தலைமைத்துவம் பற்றிக் கூறுகையில் அடல் பிஹாரி வாஜ்பாயை நிதிஷ்குமார் நினைவுக்குக் கொண்டு வந்தார். சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரையும் தன்னுடன் அரவணைத்துச் செல்லக்கூடிய ஒருவர் மாத்திரமே நாட்டின் தலைவராக வர முடியும். அந்த நியமத்துக்கு இசைவான பாதையை மாற்றுவதற்கு முனைந்தால், நிச்சயம் பிரச்சினைகள் ஏற்படும் என்று நிதிஷ்குமார் கூறினார்.

இது இவ்வாறிருக்க, ஐக்கிய ஜனதா தலைவர்களில் ஒருவரும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தவிசாளருமான சரத் யாதவ் கூடுதலான அளவுக்கு இணக்கமான அணுகுமுறையொன்றைக் கடைப்பிடிப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. தேசிய ஜனநாயகக் கூட்டணிக்குள் தற்போது காணப்படுகின்ற சிக்கல்களுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்று கட்சி உறுப்பினர்களுக்கு உறுதியளித்த யாதவ், உளறுகிறவர்கள் சற்று குறைத்துப் பேசினால் நன்றாக இருக்குமென்பது ஆலோசனை தெரிவித்தார்.

பிரதமர் வேட்பாளர் விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்கு கூட்டமொன்று கூட்டப்படவேண்டுமென்று கோருகிற பங்காளிக் கட்சி ஐக்கிய ஜனதா தள் மாத்திரமல்ல.

பிரதமர் பதவிக்கான வேட்பாளராக பாரதிய ஜனதாவின் இன்னொரு தலைவரான சுஷ்மா சுவராஜைக் கொண்டுவரவேண்டுமென்று முன்னதாக குரல்கொடுத்த சிவசேனை, இந்த வேட்பாளர் விவகாரம் குறித்து தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகள் மத்தியில் ஆராயப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருக்கிறது. ஐக்கிய ஜனதா தளம் போன்று சிவசேனை மோடிக்கு எதிரானதாக இருக்கவில்லை. மோடி பிரதமர் வேட்பாளராக வருவதில் தங்களுக்கு ஆட்சேபனையில்லை என்று இன்னொரு பங்காளிக் கட்சியான அகாலி தளமும் கூறிவிட்டது.

ஆனால், மக்களைத் துருவமயப்படுத்தக்கூடிய தலைவர் என்று கூறப்படுகிற மோடி தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு பாராளுமன்றத்தின் லோக் சபாவில் 'மந்திர எண்ணிக்கையான' 272 ஆசனங்கள் கிடைக்கக்கூடியதாக பாரதிய ஜனதாவின் எம்.பி.க்களின் எண்ணிக்கையை கணிசமான அளவுக்கு அதிகரிக்க வேண்டும். அதற்கான தந்திரோபாயத்துடன் அவர் செயற்படவேண்டும். தற்போதைய லோக்சபாவில் பாரதிய ஜனதாவுக்கு 120 ஆசனங்களே இருக்கின்றன. முஸ்லிம்களின் ஆதரவு கிடை க்காது என்ற அச்சத்தில் ஏனைய பல பங்காளிக் கட்சிகள் வெளிப்படையாக ஆதரிக்காமல்விடக் கூடுமென்பதால், பாரதிய ஜனதாவுக்கு லோக்சபாவில் சுமார் 200 ஆசனங்கள் கிடைப்பதற்கு மோடி உதவ வேண்டும்.

பாரதிய ஜனதாவின் சகல தலைவர்களுக்கும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கும் ஏற்புடைய ஒரே பாரதிய ஜனதா தலைவர். எல்.கே. அத்வானி என்றே தோன்றுகிறது. வாஜ்பாய் அரசாங்கத்தில் அவர் பிரதிப் பிரதமராகப் பதவி வகித்தவர். வாஜ்பாய் போன்று ஒரு இமேஜை தனக்கு உருவாக்குவதற்கு அத்வானி கடுமையாகப் பாடுபட்டு வந்திருக்கிறார் என்ற போதிலும் அவர் கடும்போக்கான ஒரு தலைவர் என்றே கருதப்படுகிறார். ஆனால், அவரைப் பொறுத்தவரை ஒரு பெரிய பின்னடைவு ஒன்று உண்டு. கடந்த பொதுத் தேர்தலில் அவரின் தலைமையின் கீழேயே பாரதிய ஜனதா போட்டியிட்டு தோல்வியையே தழுவியது. மீண்டுமொரு தடவை அத்வானி பிரதமர் வேட்பாளராவதற்கு இணங்குவாரா என்பதும் ராஷ்டிரிய சுயம் சேவக் (ஆர்.எஸ்.எஸ்) அவரை ஆதரிக்குமா என்பதும் இன்னமும் தெளிவாகத் தெரியவில்லை. மோடிக்கு ஆதரவாக இருந்துவரும் (அத்வானியின் அமைச்சரவைச் சகாவான) யஸ்வந்த் சின்ஹா, அத்வானி இணங்குவாரேயானால் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்குத் தலைமை தாங்குவதற்கு அவரை விட சிறந்த தலைவர் வேறுயாரும் இருக்க முடியாது என்று கூறியிருக்கிறார் என்பது கவனிக்கத் தக்கது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயூரா

# அடுத்தடுத்து நிகழ்ந்த இரு இசைமேதைகளின் மறைவு

ஏனோ மனிதன்
பிறந்து விட்டான்,
நினைப்பதெல்லாம் நடந்து
விட்டால், மயக்கமா
கலக்கமா, மனிதன்
என்பவன் தெய்வமாகலாம்,
தோல்வி நிலையென
நினைத்தால் மனிதன்
வாழ்வை
நினைக்கலாமா....
இவை எல்லாவற்றையும்
எப்படி எம்மால் மறக்க
முடியும்? என்றென்றைக்
கும் காதுகளில் ஒலித்துக்
கொண்டேயிருக்கும்



கலையுலகம்

## மலரோடு விளையாடிய தென்றல் பி.பி.ஸ்ரீனிவாஸ்

மென்மையான குரலால் பல்லாயிரக்கணக்கான திரை ரசிகர்களை, இசை ஆர்வலர்களை கிறங்க வைத்த பழம் பெரும் பின்னணிப் பாடகர் பி.பி.ஸ்ரீனிவாஸ் கடந்த ஏப்ரல் 14 ஆம் திகதி காலங்களில் வசந்தமாகி விட்டார். தனது 82ஆவது வயதிலும் உற்சாகமாக வலம் வந்த பாடகர். காலங்களில் அவள் வசந்தம் போன்ற அவர் பாடிய பல பாடல்கள் அழியாத உணர்வாக தமிழ்த் திரை இசையின் வசந்த காலமாக என்றென்றும் நம் நினைவில் நிற்கக்கூடியவை. பி.பி.எஸ்.ஸின் குரலும் பாடும் பாணியும் நமது இசை அனுபவத்தின் நீங்காத பகுதிகளாக இன்னும் இருக்கிறது. இவர் பொருள் உணர்ந்து சொற்களுக்கு அழுத்தம் தந்தவர். அழகான அசைவுகள் மூலம் பாடல்களுக்கு மெருகூட்டியவர்.

பி.பி.ஸ்ரீனிவாஸ் பின்னணியில் பாடகர் என்பதற்கான ஆங்கிலச் சொல்லான Play Back Singer என்பதன் முதல் எழுத்துகளான PBS தனது பெயரின் சுருக்கமாக இருப்பதால் தான் மட்டுமே உண்மையான பின்னணிப் பாடகர் என்று நகைச்சுவையாக குறிப்பிடுவார்.

பிரதிவாதி பயங்கரா ஸ்ரீனிவாஸ் என்பதே இவரது முழுப்பெயர். செப். 22, 1930 ஆம் ஆண்டு ஆந்திர பிரதேசத்தில் காக்கிநாடாவில் பிறந்தவர். தந்தை பணீந்திர ஸ்வாமி. நடுத்தர வர்க்க அரசு ஊழியராக இருந்தார். தாயார் சேஷ கிரியம்மா இசை யில் மிகவும் ஈடுபாடுகொண்ட குடும்பத் தலைவி. இசையில் விருப்பமுடையவராக இருந்த பி.பி.எஸ். தனது தாயார் ஈர்ப்போடு இயல்பாகப் பாடும் எளிமையான செவ்வியல் ராகங்களையும் பஜன்களையும் கேட்டு வந்தார். இதன் மூலம் இசை ஆர்வத்தை மேலும் வளர்த்து வந்தார்.

பி.பி.எஸ் சிறுவயதில் தனது அருகாமையிலுள்ள வீட்டில் வசித்து வந்த ஓர் சிறுமிக்கு கர்நாடக இசை ஆசிரியர் ஒருவர் இசை கற்பித்து வந்தார். இவர் எவ்வித உணர்ச்சி வெளிப்பாடோ ரசனையோ இல்லாமல் இசைப்பாடத்தை நடத்தி வந்தார். இதைப் பார்த்து கேட்டுவந்த பி.பி.எஸ். கர்நாடக இசை வடிவத்தையே வெறுக்க ஆரம்பித்தார். கர்நாடக இசை என்பது எந்திரத்தனமான உணர்ச்சியில்லாத ஒரு இசை வடிவம் என்று இவர் மனதில் ஆழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகப் பதிந்து போனது. இதன் காரணமாகவே இவரது கவனம் முழுமையாக வட நாட்டு இசையின் பக்கம் திரும்பியது. அக்கால கட்டத்தில் மிகப்பிரபல்யமாக விளங்கிய இந்தித் திரைப்படப் பாடல்களை முறையாகக் கேட்டு அதன் நுணுக்கங்களையும் அசைவுகளையும் தீவிரமாகக் கற்று வந்தார். இவரிடம் அனுபவம் கற்றல் முறைப்பட்டதாக வெளிப்பட்டது. இப்பாடல்களின் இசைப்புலமையை தனக்கு உள்வாங்கும் ஆற்றல் கொண்டவராக வளர்ந்து வந்தார். இசை ஆர்வத்தையும் மெருகூட்டி வளர்த்து வந்தார்.


பி.பி.எஸ். தொடர்ந்து இசைத்துறையில் ஈடுபட்டு வருவதை இவரது தந்தையார் விரும்பவில்லை. ஒருமுறை பிரபலமான ஜோதிடர் ஒருவர் பி.பி.எஸ்.ஸின் ஜாதகப் பலனின்படி இசைத்துறையில் நுழைந்தால் இவரது வாழ்வு முற்றிலுமாக வீணாகிவிடும் என்று கோரி இருந்தார். ஆனால் துடிப்பான ஸ்ரீனிவாஸ் உங்களது எல்லா ஜாதக முன்னறிவிப்புகளும் நிறைவேறி இருக்கிறதா? எனக் கேள்வி கேட்டு சவால் விடுத்தார். ஜோதிடரிடம் திடமான எந்தப் பதிலும் இருக்கவில்லை. பிற்காலத்தில் ஜாதகப் பலம் என்னும் படத்தில் பாடியதில் இருந்து தான் பி.பி.எஸ்.ஸின் திரை இசை வாழ்வு உச்சத்தை நோக்கி நகர்ந்தது என்பது சுவாரஸ்யமான விடயம்.

பி.பி.எஸ்.ஒருவாறு பி.கொம் பட்டதாரி ஆனார். பின்பு இவர் சட்டக்கல்லூரியில் சேர்வதற்காக சென்றார். படிப்பில் அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை. ஈ மணி சங்கர சாஸ்திரி எனும் தனது குடும்ப நண்பரை சந்திப்பதற்காக அடிக்கடி ஜெமினி ஸ்ரூடியோவுக்குச் செல்வதை வழக்கமாக்கிக் கொண்டுவந்தார். அப்போது ஜெமினியில் இசைத் துறைத் தலைவராக ஈ மணி பணிபுரிந்து வந்தார். இவர் ஒரு வீணை வித்துவான். சட்டப்படிப்பில் முதல் வருடம் முடிவதற்குள் படிப்பை நிறுத்தி விட்டு ஈ மணியிடம் உதவியாளராகச் சேர்ந்தார் பி.பி.எஸ்.

ஜெமினியின் உரிமையாளர் எஸ்.எஸ்.வாசன் பி.பி.எஸ்.ஸின் குரலையும் பாடும் முறையையும் வெகுவாக ரசித்து தனது படங்களில் வாய்ப்புத்தருவதாகச் சொன்னார். அந்த வாய்ப்பும் கிடைத்தது. ஜெமினி தயாரிப்பில் 1952இல் வெளியான மிஸ்டர் சம்பத் எனும் இந்தி திரைப்படத்தில் முதல் முறையாக பி.பி.எஸ் ஓரிரு தனித்த வரிகளையும் கூட்டுக் குரல் வரிகளையும் பாடினார். பெண்குரல்களுக்கு முக்கியத்துவம் இருந்த ''அஜி ஹம் பாரத் கி நாரி'' மற்றும் ''சலோ பனியா பரன் கோ'' என்ற அப்பாடல்களில் அப்போது நட்சத்திர பாடகிகளாக விளங்கிய கீதா தத், சம்ஷாத் பேகம், ஜிக்கி ஆகியோர் பாடியிருந்தனர். பி.பி.எஸ்.ஸின் இந்தி உச்சரிப்பு எடுத்த எடுப்பிலேயே சிறப்பாக இருந்தது. இதனை பலரும் பாராட்டினர்.

1953 இல் மூன்று மொழிகளில் வெளியான ஜாதகம் (தமிழ்) ஜாதகப்பலம் (தெலுங்கு) ஜாதகப் பலா கன்னடம் முதலான படங்களில் இரண்டு தனிப்பாடல்களைப் பாடும் வாய்ப்பைப் பெற்றார். தமிழில் ''சிந்தனை என் செல்வமே'' ''மூட நம்பிக்கையாலே'' எனும் அந்த இரண்டு பாடல்களும் மூலப்படமான கிஸ்மத் எனும் புகழ்பெற்ற இந்திப் படத்தில் வந்த மெட்டுகளில் அமைந்திருந்தது. இப்பாடல்கள் மூலமே பி.பி.எஸ். பின்னணிப்பாடகர் எனும் பரிமாணத்தைப் பெற்றார்.

**எம்.எஸ்.விஸ்வநாதனுடன் சேர்ந்து தமிழ்த் திரையுலகில் இசைப்பொற்காலத்தை தோற்றுவித்த பி.கே.ராமமூர்த்தி**



1954இல் விடுதலை என்னும் படத்தில் ''அன்போடு இன்பமாக'' எனும் பாடல் வாய்ப்பு இவருக்கு கிடைத்தது. பின்னர் வெளிப்பட்ட பி.பி.எஸ்.ஸின் பாடும் முறையின் பாங்கும் இவருடைய தனித்துவமான பாணி என்று சொல்லக்கூடியவற்றின் சாயல்களும் இப்பாடலில் இடம்பெற்றிருந்தது. இதே வருடத்தில் பி.எஸ்.திவாகர் இசையமைப்பில் வெளியான ''புத்ர தருமம்'' வழியாக மலையாள சினிமாவில் பி.பி.எஸ். நுழைந்தார். இவரது தாய்மொழியான தெலுங்கில் இவர் அதிகம் பிரபலம் பெறமுடியவில்லை. ஆனால் கன்னட மொழியில் நடிகர் ராஜ்குமாருக்கு இவரது குரல் நன்கு பொருந்தியிருந்தது. குறிப்பிட்ட காலம் வரை பி.பி.எஸ் ராஜ்குமாரின் பின்னணிக் குரலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
தசன நூலகம்
யாழ்ப்பாணம்.

பெரும் செல்வாக்குப் பெற்று வந்தார்.

தமிழ், இந்தி, மலையாளம், தெலுங்கு, கன்னடம் முதலான மொழிகளிலெல்லாம் பி.பி.எஸ் பாடல்களைப் பாடத்தொடங்கினார். ஒவ்வொரு மொழியிலும் இவரைத் தனித்து அடையாளப்படுத்தும் தனிப்பாணி முத்திரை தெளிவாக வெளிப்பட்டது. ஒவ்வொரு இசையமைப்பாளரும் பி.பி.எஸ்.குரலை தனித்துக்காட்டும் இசைக்கோர்வையை அமைத்தனர். சுத்தமாகவும் அமைதியாகவும் பாடும் திறனை வளர்ப்பதில் தீவிர கவனம் செலுத்தி வந்தார். தமிழில் 1957 ஆம் ஆண்டில் இருந்து பி.பி.எஸ்ஸின் இசைப்பயணம் புதுப்பரிமாணமாக மாற்றம் கண்டது. ''சமய சஞ்சீவி'' எனும் படத்தில் ஜிக்கியுடன் சேர்ந்து பாடிய ''கமகமவென'' எம்.என்.நம்பியாருக்குப் பின்னணியாக மக்களைப் பெற்ற மகராசி படத்தில் ''ஒன்று சேர்ந்த அன்பு மாறுமா'' மற்றும் மத்தள நாட்டு மேரி படத்தில் ''கண்ணுக்கு நேரே மின்னிடும் தாரை'' போன்ற பாடல்கள் வெளிவந்து பி.பி.எஸ்ஸை தமிழ்த்திரை இசையில் அடையாளம் காட்டியது.

1959இல் முதன் முதலாக ஜெமினி கணேசனுக்காக பின்னணி பாடினார். இதுவரை ஜெமினிக்கு ஏ.எம். ராஜாவே திரை இசைக்குரலாக இருந்தார். ராஜா மெல்லிசைபாடுவதில் இந்திப் பாணியை புகுத்தியவர். ராஜாவின் பாட்டும் இசையமைப்பும் சரசரப்பு இல்லாத சுகமான ராகம். ஐம்பதுகளின் ராஜா இவர். இன்னிசை விரும்பும் பலர் இன்னும் இவரது ஒலிநாடாக்களை நாடுகிறார்கள். இவ்வாறு இயங்கிய ராஜாவின் இசை அனுபவத் திரட்டில் பி.பி.எஸ். வருகை பிறிதொரு புதுப்பரிமாணமாக எழுச்சி பெற்றது. ஜெமினியின் பின்னணிக் குரலாக உருவெடுத்த பி.பி.எஸ் பாடகர் ஏ.எம்.ராஜா குறித்து கூறிய கருத்து இங்கு நோக்கத்தக்கது. ''ஏ.எம் ராஜா திரை இசையில் ஒரு முன்னோடி. அவருக்கு முன்னிருந்த இசையை மாற்றி வடநாட்டுப் பாணியை ஆரம்பித்து வெற்றியும் கண்டார். ராஜாவின் சங்கீதம் - மென்மை, இனிமை, மேன்மை ஆகிய மூன்றின் சங்கமம்'' என்று தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார்.

பி.பி.எஸ் குரலில் வரிசையாக நல்ல பாடல்கள் வந்து கொண்டிருந்தன. ''மலரோடு விளையாடும் தென்றலே''(தெய்வப் பலம்) ''கண்டேனே உன்னைக் கண்ணாலே'' (நான் சொல்லும் ரகசியம்) ''நான் பாட நீ ஆடு கண்ணே'' (மாலா ஒரு மங்கள விளக்கு) ''தங்க நிறம் இதழ் செம்பவளம்'' (அருமை மகள் அபிராமி) ''கனிந்த காதல்'' (அழகன் மலைக்கள்வன்) இந்தப் பாடல்கள் செவிக்கும் உணர்வுக்கும் புதிய அனுபவங்களாக வெளிப்பட்டது. இதமான இசை ரசனையை வளர்க்கும் சூழல் உருவானது.



1960 களில் மெலடிப் பாடகராக பி.பி.எஸ் உருவெடுக்கப்போகிறார் என்பதைக் காட்டிய படம் ''அடுத்த வீட்டுப் பெண்'' இப்படத்தில் நான்கு இனிமையான பாடல்களை பி.பி.எஸ். பாடியிருந்தார். ''மாலையில் மலர்ச் சோலையில்'', ''கண்ணாலே பேசி பேசிக் கொல்லாதே'', ''வனிதா மணியே'' ஹிட் பாடல்கள். இப்படத்திற்கு ஆரி நாராயண ராவ் இசையமைத்திருந்தார்.

கப்பலோட்டிய தமிழனில் ஜி.ராமநாதன் பி.பி.எஸ்ஸை மீண்டும் பாட வைத்தார். ''காற்று வெளியிடை கண்ணம்மா'' என்ற பாரதியின் இலக்கிய வரிகள் காதுக்கு இனிமையான சரளமான இசைத்தமிழாக நகல் எடுத்தது. தொடர்ந்து பல மறக்க முடியாத பாடல்களை பி.பி.எஸ். பாடியிருந்தார். பல்வேறு இசையமைப்பாளர்களின் இசையில் புதுப்புது இசைக்கோலம் அமைத்து வந்தார். எம்.வேணு இசையமைப்பில் ''தேடிடுதே வான மிங்கே'' (உத்தமி பெற்ற இரத்தினம்) எம்.பி.ஸ்ரீனிவாசனுக்கு ''தென்னங் கீற்று ஊஞ்சலிலே'' (பாதை தெரியுது பார்) கே.வி.மகாதேவனுக்கு ''வீசத் தென்றலே வீசு, ஏன் சிரித்தாய் என்னைப்பார்த்து'' (பொன்னித்திருநாள்) ஏ.எம்.ராஜாவிற்கு ''பன்னோடு பிறந்தது தாளம்'' (விடிவெள்ளி) விஸ்வநாதன் ராமமூர்த்திக்கு ''நீயோ நானோ யார் நிலவே'' (மன்னாதி மன்னன்) இவ்வாறு பல்வேறு பாடல்களும் இனிமையும் நளினமும் இசை நேர்த்திகளும் கொண்ட பி.பி.எஸ்ஸின் தனித்துவமான குரல் தமிழ் சினிமாவில் அதிகம் கேட்கத் தொடங்கியது.

1961 இல் ஏ.வி.எம் இன் பாவ மன்னிப்பு படம் வெளிவந்தது. இந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப் படத்தில் ஜெமினி கணேசனின் பின்னணிக் குரலாக பி.பி.எஸ் குரல் ஒலித்தது. காலங்களில் அவள் வசந்தம் பாடல் ஜெமினிக்கு பொருத்தமான பின்னணிக் குரல் பி.பி.எஸ். தான் என்பதற்கான இசைவெளி ஏற்புடைமை உருவானது. நூற்றுக்கணக்கான பாடல்களை தொடர்ந்து பாடத் தொடங்கினார். விஸ்வநாதன்-ராமமூர்த்தி இரட்டையர் இசையில் பி.பி.எஸ். முக்கியமான ஒருவராக உருப்பெற்றார்.

அநாசாயமாக பாடுவது, தேர்ந்தெடுத்த சொற்களுக்கு அழுத்தம் கொடுத்து பொருளுக்கு ஆழம் சேர்ப்பது, அசைவுகள் மூலம் மெட்டுக்கு சுவை சேர்ப்பது போன்ற பி.பி.எஸ்ஸின் முத்திரைகள் பல பாடல்களில் பதிந்தன. பி.பி.எஸ் பாணி என்று தனித்து வேறுபடுத்தி அடையாளம் காட்டுமளவிற்கு தனது ஆளுமையை வெளிப்படுத்தி வந்தார். ''யார் யார் யார் அவள் யாரோ'' (பாசமலர் 1961) ''என்னருகே நீ இருந்தால்'' (திருடாதே 1961) ''ஒரே கேள்வி ஒரே கேள்வி'' (பனித்திரை 1961) ''பூஜைக்கு வந்த மலரே வா'' (பாத காணிக்கை 1962) ''ரோஜா மலரே ராஜ குமாரி,பாடாத பாட்டெல்லாம்'' (வீரத்திருமகள் 1962) ''ஒருத்தி ஒருத்தனை நினைத்துவிட்டால்'' (சாரதா 1962) ''மதுரா நகரில் தமிழ்ச் சங்கம்'' (பார் மகளே பார் 1963) ''சித்திரமே சொல்லடி'' (வெண்ணிற ஆடை 1964) ''மௌனமே பார்வையாய்'' (கொடி மலர் 1964) போன்ற பாடல்கள் இன்று வரை இனிமையாக கேட்கக்கூடியவாறு தான் உள்ளன.

''ஏதோ மனிதன் பிறந்து விட்டான்'' (பனித்திரை 1961) ''நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்'' (நெஞ்சில் ஓராலயம் 1962) ''மயக்கமா கலக்கமா, மனிதன் என்பவன் தெய்வமாகலாம்'' (சுமைதாங்கி 1962) போன்ற தத்துவப் பாடல்களுக்கு பி.பி.எஸ் குரல்வளம் அமைதியும் ஆறுதலும் தந்தன. இதுபோல் ''கடலுக்கு உயிர் காவல்'' (மணப்பந்தல் 1961) ''எந்த ஊர் என்றவனே'' (காட்டுரோஜா 1963) ''எல்லாம் நாடக மேடை'' (பாசமும் நேசமும் 1964) ''சிரிப்பு பாதி அழுகை பாதி'' (எங்க வீட்டு பெண் 1963) ''கண்களே கண்களே'' (வாழ்க்கைப் படகு 1965) போன்றவை சோகத்தை சுகமாக பரிமாறியவை. வெவ்வேறு உணர்ச்சிகளின் மோதுகைக்கு உள்நுழைந்து மேலெழும் உணர்வு பரிமாற்றமாக குரல் வழியே வெளிப்படுத்தியவர் பி.பி.எஸ். ''எனக்குப் பிடித்தது இதமான மிதமான இனிமையான இசை அந்தமாதிரி இசைத்திரையில் அன்றைக்கு ஒலித்தது. இது என்னுடைய அதிர்ஷ்டம். அப்படிப்பட்ட பாடல்களைப் பாடக் கிடைத்த வாய்ப்பு என் பாக்கியம்'' என்கிறார் பி.பி.எஸ். இத்தகை வாய்ப்புகளை இவருக்கு விஸ்வநாதன் - ராமமூர்த்தி அளித்தனர். இந்த இரட்டையர்கள் மெல்லிசையில் பெரும் புரட்சி செய்தார்கள். இவ்வாறான படைப்பாக்க இசை அனுபவத்துக்கு ஸ்ரீனிவாஸை நன்கு பயன்படுத்தினர்.

1970களின் ஆரம்பத்தில் இருந்து பி.பி.எஸ்ஸிற்கு தமிழ் சினிமாவில் பாடும் வாய்ப்புகள் குறையத் தொடங்கின. 1979 ஆம் ஆண்டு சங்கர் - கணேஷ் இசையமைப்பில் ''மாலை மயங்கினால் இரவாகும்'' (இனிக்கும் இளமை) என்ற பாடலைப் பாடினார். வழக்கமான பாணியில் இருந்து வேறுபட்ட இனிமையான படல் இது. இளையராஜா இவருக்கு அதிகம் வாய்ப்புகள் கொடுக்கவில்லை. கடவுள் அமைத்த மேடை (1979) படத்தில் தென்றலே நீ பேசு என்ற பாடலை இளையராஜாவின் இசையில் பாடினார். அபாவாணனின் இயக்கத்தில் வெளியான ஊமை விழிகள் (1986) படத்தில் ''தோல்வி நிலை என நினைத்தால்'' இந்தப் பாடல் பெரும் வரவேற்பைப் பெற்றது. 2004 இல் யுவன் சங்கர் ராஜா இசையில் 7ஜி ரெயின்போ காலனி எனும் படத்தில் ஓரிரு வரிகளைப் பாடினார். 2010 இல் ஜீ.வி. பிரகாஸ் இசையில் ஆயிரத்தில் ஒருவன் படத்திலும் சில வரிகளைப் பாடினார். இந்த இரு படங்களையும் செல்வராகவன் இயக்கியிருந்தார்.

பாடும் வாய்ப்புகள் குறைந்து போனாலும் தன்னை ஒரு பல்மொழிக் கவிஞனாகவும் எழுத்தாளராகவும் நிலைநிறுத்தியுள்ளார். இந்தி, தமிழ், மலையாளம், தெலுங்கு போன்ற எட்டு மொழிகளில் இரண்டு இலட்சத்திற்கும் மேலான கவிதைகள் ஆக்கியுள்ளாரெனவும் அறியமுடிகிறது. பொதுவாக இந்தக் கலைஞர்கள் பற்றியும் நேர்நிலையான கருத்துகளை, அபிப்பிராயங்களைப் பகிர்ந்து கொள்வதை தனது கொள்கையாக கடைப்பிடித்தவர். யாவரையும் தனது கவிதையால் பாராட்டும் திறன் கொண்டவர். ஆனாலும் இவரது தகுதிக்கோ, சாதனைக்கோ ஏற்ப இந்த ஒரு விருதும் மத்திய பத்மஸ்ரீ, பத்ம பூசன் விருதுகள் எதுவும் இவருக்கு கிடைக்கவில்லை. விருதுகளுக்காக திட்டமிட்டு உழைக்கும் ஆற்றலும் இவருக்கு கிடைக்கப்படவில்லை.

பி.பி.எஸ் இன் பாடல்களில் பெரிய மந்திர ஜாலங்களோ எல்லையற்ற பரவசமோ உள்ளம் பேதலித்த உச்ச அனுபவங்களோ வெளிப்பட்டதில்லை. ஆனால் பாடல்களின் உணர்வுள் தீவிரமடையாமல் மீளுருவாக்கிப் பாடினார். உணர்ச்சிகளின் உச்சங்களை அடைவதை விட சங்கதிகளை கச்சிதமாகவும் மென்மையாகவும் பாடுவதில் பன்முகத் தேர்ச்சிகளை வெளிப்படுத்தியமை ஓர் முதிர்ச்சியான இசையனுபவத்தை ஆற்றுப்படுத்தியுள்ளார். திரையிசை மரபின் தொடர்ச்சியை ஆழமாகவும் நுணுக்கமாகவும் புரிந்துகொள்ளும் போது இசையின் ஒரு சிறப்பார்ந்த பரிமாணம் துலக்கம் பெறும். அதாவது குறிப்பிட்ட ஒரு கலைஞரின் இசைப் பரிமாணம் அந்த நபரின் ஆளுமை சார்ந்த இசைப்புலமை வெளிப்பாடு இசைப்பரிமாணமாக மேலெழுச்சி பெறும். இந்த தன்மைகள் திரையிசையாக்கப் புலத்திலும் சாத்தியப்பட்டுள்ளன. தனித்தன்மைகளுடன் வித்தியாசங்களாகவும் கிளைவிட்டு வளர்ந்து வந்துள்ளன. பி.பி.எஸ்ஸின் இசை மரபு இதனை தெளிவாக எடுத்துரைக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### டி.கே. ராமமூர்த்தி

தமிழ்த் திரை இசை உலகில் எம். எஸ்.விஸ்வநாதன், டி.கே.ராமமூர்த்தி ஆகியோர் மெல்லிசை மன்னர்கள் என்று அழைக்கப்படுபவர்கள். இவர்களுள் திருச்சிராப்பள்ளி கிருஷ்ண சுவாமி ராமமூர்த்தி (1922-2013) தனது 92ஆவது வயதில் (17.04.2013) காலமாகி விட்டார்.

1940களின் இறுதியில் எழுந்த ஒரு புதிய திரை இசை நாயகர் சி.ஆர் சுப்பராமன். இவர் திரை இசையின் இந்துஸ்தானி மேற்கத்திய இசைப்பாணிகளை இயல்பாகப் புகுத்தியவர். இவரது இசைக்குழுவில் ஆர்மோனியம் வாசித்துக்கொண்டிருந்தவர் எம்.எஸ்.விஸ்வநாதன். வயலின் வாசித்துக் கொண்டிருந்தவர் டி.கே. ராமமூர்த்தி. எதிர்பாராத சூழ்நிலையில் சுப்பு ராமன் இயற்கை எய்திய போது அவர் விட்டுச்சென்ற திரைப்படங்களுக்கு விஸ்வநாதனும் ராமமூர்த்தியும் இணைந்து இசை அமைக்கத் தொடங்கினர். தொடர்ந்து இவர்கள் பல்வேறு படங்களுக்கு இசையமைத்து திரை இசையில் புது மரபை உருவாக்கினர். இவர்களுடைய பாடல்கள் ஜனரஞ்சகமாகவும் கர்நாடக இசையை அடிப்படையாகக் கொண்டும் அமைந்திருந்தன. 1950/1960களில் இந்த இருவரது இசை அமைப்பு திரையரங்குகளில் ஒரு புதிய காலகட்டமாக அமைந்தது. தென்னிந்திய திரைப்பட இசையில் இக்காலத்தை இசைப் பொற்காலம் என்றும் கூறுவர்.

எம்.எஸ்.வி.யும் டி.கே. ஆரும் 20 ஆண்டுகள் இணைந்து பல்வேறு படங்களுக்கு குறிப்பிடத்தக்க வகையில் இசையமைத்து வந்தனர். எம்.ஜி.ஆர் நடித்த ஆயிரத்தில் ஒருவன் திரைப்படமே இருவரும் இணைந்து பணியாற்றிய கடைசிப் படம். 1965 இல் இருவரும் தனித் தனியாகப் பிரிந்தனர். ராமமூர்த்தி தனியாக பத்தொன்பது படங்களுக்கு இசையமைத்துள்ளார். சாதுமிரண்டால் (1966), மறக்க முடியுமா (1966), தேன்மலை (1966), மெற்ராஸ் டூ பாண்டிச்சேரி (1966), நான் (1967) எங்களுக்கும் காலம் வரும் (1967), சோப்பு சீப்பு கண்ணாடி (1968), சங்கமம் (1970), அவளுக்கு ஆயிரம் கண்கள் (1975), இவள் ஒரு பௌர்ணமி (1987), முதலான படங்களுக்கு இசை அமைத்திருந்தார். ஆனால் எம். எஸ்.விக்கு தொடர்ந்து கிடைத்த வாய்ப்புகள், செல்வாக்குகள் ராமமூர்த்திக்கு கிடைக்கவில்லை. பலரின் வற்புறுத்தலுக் கேற்ப மீண்டும் இருவரும் இணைந்து பணியாற்றக்கூடிய வாய்ப்புகள் உருவாகின. எங்கிருந்தோ வந்தான் எனும் படத்திற்கு இருவரும் இணைந்து இசையமைத்தனர். ஆனால் இப்படம் பெரியளவில் இவர்களுக்கு பெயரைப் பெற்றுக்கொடுக்கவில்லை.

எந்த விழாக்கள், நிகழ்ச்சிகள் என்று வந்தாலும் எம்.எஸ்.வி, ராமமூர்த்தியையும் அழைத்துக் கொண்டு செல்வதை ஒரு வழக்கமாகக் கொண்டிருந்தார். இருவரையும் தனித்தனியாக வைத்து புரிந்துகொள்ள முடியாதளவிற்கு இவர்களுக்கிடையிலான இசைப்புலமைத்துவம் முதிர்ச்சியாக இருந்தது. 2006 இல் சத்திய பாமா பல்கலைக்கழகம் இருவருக்கும் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்தது. 2012 இல் ஜெயா தொலைக்காட்சி முதல்வர் ஜெயலலிதா தலைமையில் இந்த இருவருக்கும் பெரும் விழாவொன்றை எடுத்தது. அப்போது முதல்வர் ஜெயலலிதா இவர்களுக்கு "திரை இசைச் சக்கரவர்த்திகள்" என்ற பட்டத்தை வழங்கினார்.

பணம் படைத்தவள் எனும் படத்தில் கண் போன போக்கிலே கால் போகலாமா கால் போன போக்கிலே மனம் போகலாமா என்ற பாடலில் வரும் சோக இசை டி.கே.ராமமூர்த்தியின் வயலின் இசையாகும். அந்தளவிற்கு வயலின் இசையை மீட்பதில் பெரும் ஆளுமை கொண்டவராக விளங்கியுள்ளார். இன்று பாடல்களில் எத்தனையோ வகைகள் வந்தாலும் மெல்லிசை மன்னர்கள் கொடுத்த பாடல்கள் இன்றும் இனிமையான மெட்டுகளின் அணியாகவே வலம் வருகின்றன. ராமமூர்த்தியின் மறைவு மெல்லிசை யுகம் பற்றிய மீள்பார்வைக்கும் மீள்சிந்தனைக்குமான பரப்பை விரிவாக்கியுள்ளது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் சுச்சரித்த கம்லத்

மார்க்சிய இலக்கியத் திறனாய்வை சிங்கள மொழியில் அறிமுகப்படுத்திய முன்னோடிகளில் முக்கியமானவர்



பொது சன நூலகம் யாழ்ப்பாணம்.



பேராசிரியர்
எம்.ஏ.நுஃமான்

மார்ச் 30ஆம் திகதி ஒரு சிங்கள நண்பர் எனக்கு ஒரு குறுந்தகவல் அனுப்பியிருந்தார். பேராசிரியர் கம்லத் காலமான செய்தி அது. சற்றுப் பின்னர் ஃபஹீமா ஜஹானும் அதே தகவலை எனக்கு அனுப்பியிருந்தார். எனக்கு ஒரு அதிர்ச்சியான தகவல் அது. பல மாதங்கள் நுரையீரல் புற்றுநோயினால் அவர் அவஸ்த்தைப்பட்டிருக்கிறார் எனப் பின்னர் தெரியவந்தது. இறக்கும்போது அவருக்கு வயது எண்பது.

பேராசிரியர்கள் கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோரின் சமகாலத்தவர் அவர். 1976இல் கைலாசபதிதான் முதல்முதல் அவரை எனக்கு அறிமுகப்படுத்தினார். 1976, 77ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாண வளாகத்தில் நாங்கள் ஒன்றாகப் பணியாற்றினோம். யாழ்ப்பாணத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் ஒன்றாகக் கல்வி கற்ற காலம் அது. சுச்சரித்த கம்லத், சுனில் ஆரியரத்ன, தர்மசேன பத்திராஜ, தயபால திராணகம முதலிய சிங்கள முற்போக்கு ஆய்வறிவாளர்களுடன் ஒன்றிணைந்து பணியாற்றவும் நட்பாகப் பழகவும் அன்று எங்களுக்கு வாய்ப்பிருந்தது. 1977இல் சிங்கள மாணவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறும் வரை, பேராசிரியர் கம்லத் கலைப் பீடாதிபதியாகவும், சிங்கள, ஆங்கில, தத்துவத் துறைகளின் தலைவராகவும், சுமார் மூன்று ஆண்டுகள் அங்கு பணியாற்றினார். அதன் பிறகும் எப்போதாவது கொழும்பில் அல்லது கண்டியில் அவரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

பேராசிரியர் கம்லத் சிங்களம், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் நன்கு புலமை உடையவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சிங்களம், இந்திய செம்மொழிகள் ஆகிய பாடங்களைப் பயின்று 1960இல் முதல் வகுப்பில் சித்திபெற்றவர். பின்னர் அங்கேயே உதவி விரிவுரையாளராகச் சேர்ந்தார். லண்டன் பல்கலைக்கழகத்தில் மெய்யியல் துறையில் ஆய்வு மாணவனாகச் சேர்ந்து உலகப் புகழ் பெற்ற மெய்யியலாளரான கார் பொப்பரின் அனுசரணையில் இந்திய - மேற்கத்தைய அழகியல் தொடர்பாக ஆய்வு செய்து 1969இல் டாக்டர் பட்டம் பெற்றார். இலங்கையின் பல பல்கலைக்கழகங்களில் - பேராதனை, கொழும்பு, யாழ்ப்பாணம், றுகுணு- பல்வேறு நிலைகளில் பணியாற்றி ஓய்வுபெற்றவர் அவர்.

இலங்கையின் முக்கியமான இடதுசாரிப் புலமையாளர்களுள் அவரும் ஒருவர். நடைமுறை அரசியல் தொடர்பான தீவிர விமர்சகராகவும் அவர் செயற்பட்டார். இடையில் சில ஆண்டுகள் அவர் பல்கலைக்கழகப் பதவியில் இருந்து பணிநீக்கம் செய்யப்பட்டிருந்தார். அவருடைய அரசியல் சார்பு அதற்கு ஒரு காரணம் என்று நினைக்கிறேன். அப்போது அவர் வாழ்வாதாரத்துக்காக டியூசன் வகுப்புகள் நடத்திக் கொண்டிருந்தார். அந்நாட்களில் ஒருமுறை அவரைக் கண்டியில் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தபோது "இப்போது என்ன செய்கிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் மிகுந்த சுய எள்ளலுடன் சொன்ன பதில்" "I am selling education" (நான் கல்வி வியாபாரம் செய்கிறேன்). கசப்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எள்ளலும் தொனித்த அப்பதில் என் நினைவில் இன்னும் உள்ளது.

சிங்கள இலக்கியத் திறனாய்வில் அவரது பங்களிப்பு கணிசமானது. மார்க்சிய இலக்கியத் திறனாய்வை சிங்கள மொழியில் அறிமுகப்படுத்திய முன்னோடிகளுள் அவர் முக்கியமானவர். சிங்கள மொழி, இலக்கியக் கொள்கை, இலக்கியத் திறனாய்வு, பண்பாடு, மொழிபெயர்ப்பு முதலிய துறைகளில் சுமார் நூறு நூல்களை அவர் வெளியிட்டிருப்பதாகத் தெரிகிறது. சமஸ்கிருத இலக்கியத்திலும் இலக்கியக் கொள்கையிலும் அவருக்கு ஆழ்ந்த புலமை இருந்தது. சமஸ்கிருத அழகியல் தொடர்பான தனது நூல் ஒன்றை அவர் எனக்கு அன்பளிப்புச் செய்திருக்கிறார். அவர் தயாரித்த சிங்கள - ஆங்கிலப் பேரகராதி அவரது முக்கியமான பங்களிப்பாகக் கருதப்படுகிறது. சிங்கள - தமிழ் - ஆங்கில அகராதி ஒன்றையும் அவர் தயாரித்து முடித்திருக்கிறார் என்று அறிகிறேன். அது தொடர்பாக ஒருமுறை என்னுடனும் தொலைபேசியில் தொடர்புகொண்டு கதைத்தார். ஆனால் நாங்கள் சந்திக்க வாய்ப்புக் கிடைக்கவில்லை. பேராசிரியர் சிவத்தம்பியின் உதவி அவ்வகையில் அவருக்குக் கிடைத்ததாகத் தெரிகிறது. பேராசிரியர் கம்லத்தின் எழுத்துகள் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகமானது மிகவும் குறைவு. அவரது கட்டுரைகள் சிலவற்றை ஃபஹீமா ஜஹான் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார்.

ஒரு தீவிரமான, பற்றுறுதியுடைய இடதுசாரி என்றவகையில் பேராசிரியர் கம்லத் சிங்கள இனவாதத்தை எப்போதும் விமர்சித்துவந்திருக்கிறார். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவாகவும், யுத்தத்துக்கு எதிராகவும் தொடர்ச்சியாகச் செயற்பட்டுவந்திருக்கிறார். அதன் காரணமாக சிங்கள இனவாதிகளின் எதிர்ப்பையும் அவர் சம்பாதித்திருக்கிறார்.

அவரது மறைவினால் ஈழத்து முற்போக்காளர்கள் ஒரு உற்ற தோழனை இழந்திருக்கிறார்கள். ■

*(36ஆம் பக்கத்தொடர்ச்சி)*

பகுதிகளிலும் ஏக்கர் கணக்கில் நிலங் களைச் சுவீகரிப்பதற்கு அரசாங்க அதிகாரம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அபிவிருத்தி நோக்கங்களுக்காக என்று கூறிக்கொண்டு செய்யப்படுகிற இந்த நிலச்சுவீகரிப்புகள் சொந்தக்காரர்களின் தனிப்பட்ட உரிமைகளை அல்லது சட்டத்தை மதிக்காம லேயே செய்யப்பட்டிருக்கின்றன. அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமானநிலையம் போன்ற மெகா அபிவிருத்தித் திட்டங்களுக்கும் உத்தேச அதிவேக நெடுஞ்சாலைகள் திட்டங்களுக்குமென பெருமளவில் நிலம் சுவீகரிக்கப்பட்டதால் ஆயிரக்கணக்கான உரிமையாளர்கள் பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்கள். இத்தகைய பிரச்சினைகள் சிறு பான்மையினத்தவர்களினாலும் பெரும்பான்மையினத்தவர்களினாலும் சமமான அளவிற்கு எதிர்நோக்கப்படுகிறது. தனியாருக்குச் சொந்தமான நிலத்தை எடுத்துக்கொள்வதற்கு தற்போது நடைமுறையில் இருக்கக்கூடிய சட்டங்களை நாடுவதைவிடுத்து, அரசாங்கம் விசேட சட்டங்களின் ஊடாகவும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கி றது. ஒரு கோவிலை நிர்மாணிக்கப்போவது போன்ற அல்லது புனிததலமாக பிரகடனம் செய்வது போன்ற விசேட நோக்கம் எதையும் கூறாமலேயே அரசாங்கம் இவ்வாறாக நிலங்களை சுவீகரிக்கும் முயற்சிகளில் ஈடுபடுகிறது. இந்தமாதிரியான பிரச்சினைகள் எல்லாம் பூரணமான ஆய்வுக்குட்படுத்த வேண்டியவையாகும்.

நில உடைமையுரிமை குறித்தும் நிலம் தொடர்பில் நீதியானதும் நேர்மையானதுமான அரச கொள்கையின் அவசியம் குறித்தும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை தோற்றுவிக்க வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். நிலம் தொடர்பான மக்களின் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் பதிலளிக்கக் கூடிய சூழ்நிலையை இத்தகைய விழிப்புணர்வு தோற்றுவிக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.நீதித் துறை இத்தகைய பிரச்சினைகளுக்கு தீர்வுகளைத்தரக் கூடியதாக அதன் ஆழ்ந்த கவனத்தைச் செலுத்த வேண்டியதும் அவசியம். ■

***(கிஷாலி பின்ரோ ஜயவர்தன பத்திரிகையாளர், சட்டத்தரணி, மனித உரிமைகள் ஆர்வலர்)***

GET சமகாலம் DELIVERED TO YOUR HOME

3 months 600/-

6 months 1200/- 1 Year 2,400/-

Please complete the form given below, along with your Cheque/Money Order written in favour of 'Express Newspapers (Ceylon) (Pvt) Limited' and send it to our Head Office at No185,Grandpass Road, Colombo 14,Sri Lanka. Tel:+94-11-7322700 / 7738046 Fax:+94-11-7767700

*For more details, please contact :*
Overseas & Local Subscriptions
**S.Surainie** - E-mail : subscription@kalaikesari.lk
Tel:+94 11 7322783

Subscription rates (inclusive postage) and delivery within Colombo.

ORDER FORM :

சமகாலம்

Manager Subscriptions
Samakalam
No. 185, Grandpass Road, Colombo - 14, Sri Lanka.
Tel : +94-11-7322783 / +94-11-7322741
Fax : +94-11-4614371

FOLD HERE

SUBSCRIBER INFORMATION :
Title :.................... Last Name :....................
First Name :....................
Organization :....................
Address :....................
....................
Phone :.................... Mobile :....................
Fax :.................... E-mail :....................
Payment : Amount Rs....................
☐ Cash ☐ Cheque
Payable to : Express Newspapers (Cey.) (Pvt) Ltd.
Bank :.................... Cheque No :....................
Signature :....................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# றொபேட் எட்வேர்ட்ஸ் (1925 - 2013)

# பரிசோதனைக்குழாய் குழந்தையின் தந்தை மறைவு

"மலடி மலடி என்று வையகத்தார் ஏசாமல் தாயென்ற பெருமைதனை தந்தவன்'' என திரைப்படத்தில் தாய் ஒருத்தி தனது மகனைப் புகழ்ந்து பாடியது உங்களுக்கும் தெரிந்திருக்கும்.




அது உணர்வு நிலையில் சரியானதாகும். ஆனால் விஞ்ஞான ரீதியாகப் பார்க்கும்போது தானே தனது தாய்க்குக் குழந்தையாக உருவாவதற்கு ஒரு குழந்தையானது எந்த வித உதவியையோ ஒத்துழைப்பையோ வழங்க முடியாது. தாய்- தந்தையரின் கூடலின் பயனாக முட்டையும் விந்தணுவும் இணைவதால் உற்பத்தியாவதுதான் குழந்தையாகும். ஆனால் அது-தாய் தந்தையரின் முயற்சியால் மட்டும் உற்பத்தியானது என்று சொல்லலாமா?

### குழந்தையின்மை ஏன்?

உலகளாவிய ரீதியில் 100க்குப் 10 சதவிகிதமான தம்பதிகள் குழந்தைகளின்றி மனஅவதிக்கு ஆளாகியுள்ளனர். எவ்வளவுதான் முயற்சித்தாலும் குழந்தைகளைப் பெற்றெடுக்க முடியவில்லை. ''மலடன்- மலடி'' எனச் சுற்றி இருப்



வைத்தியக் கலாநிதி எம்.கே. முருகானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவர்கள் அவர்களை முதுகுக்குப் பின்னாலாவது இழிவுபடுத்துகிறார் கள்.

அப்படியானால் குழந்தைப் பேறென்பது கடவுளின் கொடையா? குழந்தையின்மை அவரது தண்ட னையா?

விஞ்ஞானம் முன்னேறி மலட்டுத் தன்மைக்கான சிகிச்சைகள் அற்புத மாக வளர்ச்சி அடைந்துவிட்ட போ தும் ''கடவுள் கண் திறக்கவில்லை'' என விதியிலும் கடவுளிலும் பழியைப்போட்டு தம் அறிவுக் கண் திறக்காத பேதமையில் இன்னமும் பலர் துயருறுகிறார்கள்.

35 வருடங்களுக்கு முன்னர், சரி யாகச் சொன்னால் July 25.1978 அன்று, 15 வருடங்களாகக் குழந்தை யின்மையால் அவதிப்பட்ட John மற்றும் Lesly Br-o-wn தம்பதியின ருக்கு Louise Brown பிறந்தான். அவன் பிறந்தது ஆய்வுகூட கருக்கட் டல் (IVF) முறையாலாகும். நாம் பொதுவாக டெஸ்ட் ரியுப் பேபி என்று சொல்வோம். அது ஒரு ஆச்ச ரியமான விஞ்ஞானச் சாதனை. இன்று குளோனிங் முறையில் குழந்தை பிறந்தால் எத்துணை ஆச்ச ரியமோ அதை ஒத்த ஆச்சரியம்.

ஆனால் அந்நேரத்தில் அந்த முயற்சிக்கு எந்தளவு எதிர்ப்புகள் இருந்தது தெரியுமா? ''இது மனித இனத்திற்கு பாரதூரமான பின்விளை வுகளை ஏற்படுத்தக்கூடிய செயற் பாடு. ஏனெனில், இது இனப்பெருக் கத்தை தாம்பத்திய உறவிலிருந்து பிரித்துவிடும் செயற்பாடாக இருக்கி றது'' என வத்திகான் தவறு கண்டது.

அவ்வாறு குழந்தை இல்லாத தம்ப திகளுக்கு பெண்ணினது முட்டை யையும் ஆணின் விந்தணுவையும் உடலுக்கு வெளியே ஆய்வுகூடத் தில் இணைத்து கருக்கட்டல் (Fertili-sation) செய்து பின் அதனை பெண் ணின் கருப்பையில் வைத்து குழந்தை பெறுவதற்கு முதன் முதலில் வழிய மைத்தவர்கள் Physologist ஆன Robert Edwards மற்றும் மகப் பேற்று மருத்துவரான Patrick Step-toe ஆவர்.

வத்திகானின் கண்டனம், பழைமை பேணிகளின் எதிர்ப்புக் கூச்சல் மட்டு மன்றி சகமருத்துவர்கள் மற்றும் விஞ் ஞானிகளின் அங்கீகாரம் கூட இவர்க ளுக்கு அந்நேரத்தில் கிடைக்க வில்லை. மிக மடைத்தனமான கார ணம் காட்டி மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் இவர்களது ஆய்வு முயற்சிக ளுக்கு 1970இல் நிதியுதவி அளிக்க மறுத்தது. ''உலகம் ஏற்கனவே சனத் தொகைப் பெருக்கத்தால் அல்லாடுகி றது'' என்று காரணம் சொன்னார்கள்.

''புதிய மருந்துகளைக் கண்டு பிடித்து மனிதர்களின் மரணத்தைத் தடுப்பதும் சனத்தொகைப் பெருக்கத் திற்கு வித்திடுகிறது'' என்று சாதரணர் களாகிய நாமே எதிர்க்கேள்வி கேட் கக்கூடிய நிலையில் எமது பட்டறிவு இன்று இருக்கிறது.

ஆனால், அன்று விஞ்ஞான உல கம் கூட அத்தகைய ஆய்வுகளை ஏற் கத் தயாராக இருக்கவில்லை. கார ணங்களையும் அடிப்படை உண்மை களையும் தேடும் முன்னோடியான விஞ்ஞான ஆய்வு முயற்சிகளை, தவறான முன்முடிவுகளாலும் பார பட்சத்தினாலும் பழமையிலிருந்து முற்றும் விடுபடாத தன்மையாலும் தடுக்க முயன்றார்கள்.

ஆனால் அவர் சோர்ந்துவிட வில்லை. அமெரிக்காவிலிருந்து கிடைத்த சில நிதி உதவிகளுடன் தொடர்ந்தார்.

### நம்பிக்கைகளையும் ஐதீகங்களையும் தகர்த்தல்

''விஞ்ஞானம் என்பது செல்வம், வாய்ப்பு வசதி, பாதுகாப்புகளை மட் டுமே தேடி ஓடுகிறது. மனித மன உணர்வுகளைப் புரியாத தட்டை யான கல்வி'' என இலக்கிய நண்பர் ஒருவர் நக்கலாகச் சொல்வார். ஆனால் இவர்களது அறிவியல் பாய்ச்சலானது லட்சோபலட்சம் மனி தர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி யதை நாம் இன்று உணர்கிறோம்.

பாரம்பரியம், மதங்கள், ஐதீகங்கள் நிறைந்த பழமைபேணிகளின் இரு ளும் வன்மையும் நிறைந்த கோட்டை யிலிருந்து மனிதக் கருமுளையை (வெளியேற்றி) ஆய்வுகூடத்திற்கு

கொண்டுவந்ததால் அது சாத்தியமா யிற்று.

பலரின் எதிர்ப்பிற்கும் இன்னும் பலரின் தயக்கத்திற்கும் காரணம் மனித உடலின் புனிதம் பற்றியும் கட வுளின் ஆற்றல் பற்றியதுமான நம் பிக்கை அவர்களிடம் ஆழ வேரூன்றி யிருந்தமைதான். சில தெளிவற்ற விஞ்ஞானத் தத்துவங்களும் உள்ளா ர்ந்த பய உணர்வுகளும் கலந்திருந் ததை மறுக்க முடியாது.

குழந்தை கிடைப்பதோ குழந்தை யின்மை என்பதோ கடவுளின் சங்கற் பம் என்றிருந்தார்கள். குழந்தைகள் அங்கவீனமாகப் பிறப்பது அவன் சித்தம் என நம்பப்பட்டது. விஞ்ஞா னம் செயற்கை முறையில் குழந்தை பெற வைப்பதும் அங்கவீனக் குழந் தைகள் பிறப்பதைத் தடுப்பதும் ''தக் கன பிழைத்து வாழ்தல்'' என்ற டாவி னின் தத்துவத்தை மறுதலித்து மனித இனத்தின் அழிவிற்கு வழிவகுக்கும் என எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அத்துடன் அது உடலுறவின் ஆனந்தத்தையும் தாம்பத்திய வாழ் வின் நெருக்கத்தையும் கெடுத்துவி டும் என எதிர்மறையாகக் கருத்து களை வெளியிட்டனர்.

### குழந்தையற்றோரின் உழைச்சல்

ஆனால் டொக்டர் ரொபேட் எட் வேர்ட்ஸ் குழந்தையில்லாத தம்பதிக ளின் மன உளைச்சலைப் பரிவோடு நோக்கினார். ''குழந்தையில்லாமல் இருப்பதும் அதற்காக முயற்சிகள் செய்தும் பலன் கிட்டாமல் ஏமாறு வதும் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் பாதிப்புகளை ஏற்படுத் தவே செய்யும். ஆற்றாமை, கோபம், குற்றவுணர்வு போன்றவை எங்கி ருந்து வந்தது எனத் தெரியாமலே உள்ளத்தில் ஆழப் புகுந்து கொள் ளும். உறவுகளில் விரிசலையும் நட்பு களில் பிரிவையும் கொண்டுவரும். வாழ்வு ஸ்தம்பித்து விட்டதாக உணர் வார்கள். என்றுமே சாத்தியப்படாத எதற்காகவோ அர்த்தமின்றிக் காத்தி ருப்பதான நிராசை ஆட்கொள்ள லாம். தனிமையும், தனித்துவிடப்பட் டதான உணர்வும் ஏற்படும். எல்லாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோல்விகளுக்கும் தானே காரணம் என்ற மனவிரக்தியும் ஆட்கொள்ளலாம்.''

இவை நான் சொல்பவை அல்ல. குழந்தையின்றி இருந்து இவரின் சிகிச்சையின் பலனாக இரு குழந்தைகளுக்குத் தாயாக முடிந்த Kate Brian னின் உணர்வுகள். அவரை முதல் முதலில் சந்திக்கச் சென்றபோது இருந்த அவளின் உணர்வுகள் அவை. 1968இல் அவரின் முன்னோடி முயற்சியின் முதல் வெற்றி கண் சிமிட்டியது. ஆய்வு கூட கோப்பையில் ஒரு மனித விந்தணுவையும் முட்டையையும் இணைத்தார். நுணுக்குக்கண்ணாடியில் பார்த்தபோது யுரேகா என்று சொல்லிக் கொண்டு ஆனந்தத்தில் ஓட வேண்டிய ஆச்சரியம் அவருக்கு காத்திருந்தது. ஆய்வு கூடக் கோப்பையில் முட்டையும் விந்துவும் இணைந்து கரு வளருவதற்கான ஆரம்ப நிகழ்வு நடந்திருந்தது. அங்கு எட்டுக் கலங்களேயான பிளாஸ்டோசைட் (blastocyst) தோன்றியிருந்தது. ஆம் அது ஒரு கருமுளையத்தின் ஆரம்ப நிலையாகும்.

ஆம் பெண்ணின் உடலுக்கு வெளியே கருத்தரித்தலை அவரால் நிகழ்த்த முடிந்திருக்கிறது. Robert Edwards மற்றும் மகப்பேற்று மருத்துவரான Patrick Steptoe ஆகிய இருவரும் இணைந்து செயலாற்றத் தொடங்கினர்.

அவர்களது ஆரம்ப முயற்சிகள் அயர்ச்சியளிப்பதாக இருந்தன. Steptoe வின் மருத்துவமனை Oldham இல் இருந்தது. இவர் இருந்தது கேம்பிரிட்ஜ் ஆகும். Edwards வாரத்தில் பல தடவைகள் தன் இடத்திலிருந்து சுமார் 200 மைல் பிரயாணம் செய்து குழந்தையற்ற பெண்களுக்கு உதவ வேண்டியிருந்தது. சுமார் ஐந்து வருடங்கள் முழு முயற்சி எடுத்தும் 1977 வரை அவர்கள் தோல்விகளையே சந்திக்க நேர்ந்தது. 1977 நவம்பர் மாதத்தில் அத்தகைய ஒரு பிளாஸ்டோசைட் (blastocyst) யை திருமதி Lesly Brown னின் கருப்பையில் வெற்றிகரமாக வைத்தார். 1978 ஜூலை மாதம் Louise Brown பிறந்தாள். அதற்குப் பின் இரு தோல்விகள் வந்தன. நாலாவது முயற்சியில் Alastair Montgomery பிறந்தான். அதன் பின் 1988இல் Steptoe இறக்கும்வரை 1000 குழந்தைகள் அவர்களது மருத்துவமனையில் பிறந்திருந்தார்கள்.

நீண்ட தாமதத்தின் பின்னர்தான் அந்த மகத்தான சாதனையை நோபல் பரிசுக்குழு கண்டு கொண்டது. 2010 இல் அவருக்கு நோபல் பரிசு கொடுக்கப்பட்டபோது ஏற்கனவே 4.3 மில்லியன் குழந்தைகள் IVF முறையில் பிறந்திருந்தனர். ஆனால் அன்று கூட மதப்பிரிவினரிடமிருந்து நக்கல் தொனியில் ஒரு கண்டனம் எழுந்தது. ''எட்வேர்ட்ஸ் இல்லாதிருந்தால் பல பீரிஸர்கள் கருமுளைகளால் நிறைந்திருக்காது. அவை கருப்பையில் வைக்கப்படுவதற்காக காத்திருக்கின்றன. அல்லது ஆராய்ச்சிகளுக்குப் பயன்படும். அல்லது இறந்துபோகவும் கூடும்'' என்றார். இதைச் சொன்னவர் வேறு யாருமில்லை. Ignacio Carrasco de Paula என்ற வத்திகானைச் சார்ந்தவர்தான். இவர் Pontifical Academy for Life at the Vatican னின் தலைவராவார். ஆம் இன்றும் மதத்தின் பேரால் உமிழப்படும் நச்சுக் குரல்கள் ஓயவில்லை.

இத்தனை எதிர்ப்புகளையும் தாண்டி இன்றுவரை சுமார் 5 மில்லியன் குழந்தைகள் IVF முறையில் பிறந்திருப்பதற்குக் காரணம் யார்? மக்கள் சக்தி, குழந்தையின்றி தேம்பியோரின் துணிச்சலான முன்னோக்கிய அடிகள்தான்.

ஆரம்பத்தில் மதங்கள் மட்டுமன்றி விஞ்ஞான உலகமும் சந்தேகத்தோடு நோக்கியபோது குழந்தையற்றோர் தங்களுக்கு குழந்தை வேண்டுமென அவர்களை முற்றுகையிட்டனர். அவர்களது ஆதரவின்றி இந்தச் சாதனை நடந்திராது. மருத்துவர்கள் பின் தொடர்ந்தனர். இவர்களிடம் பயிற்சிகள் பெற்றனர். உலகளாவிய ரீதியில் ஆயிரக்கணக்கான IVF நிலையங்கள் இயங்குகின்றன.

பிரித்தானிய அரசு அவரது சேவையைக் கௌரவிக்குமுகமாக 2011 இல் நைட் பட்டம் கொடுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறு இலட்சக்கணக்கான மலட்டுத் தம்பதியினர் பெற்றோராவதற்கு வழி அமைத்துக்கொடுத்த ரொபேட் எட்வேர்ட்ஸ் தனது 87 ஆவது வயதில் காலமானார். உலக சஞ்சிகைகள் அவரது மறைவு ஒட்டி கட்டுரைகள் வெளியிட்டன.

பல நூல்களையும் இவை சம்பந்தமாக எழுதியுள்ளார்.

1. A Matter of Life (1980, with Patrick Steptoe)
2. Conception in the Human Female (1980, with CR Austin)
3. Mechanisms of Sex Differentiation in Animals and Man (1980, with JM Purdy)
4. Human Conception in Vitro (1982, with JM Purdy and Patrick Steptoe)
5. Implantation of the Human Embryo (1985, with M Seppälä)
6. In Vitro Fertilisation and Embryo Transfer (1985); and Life Before Birth (1989).

அவரைப் பின்பற்றி எமது நாட்டில் முதல் டெஸ்ட் டியுப் பேபியை உருவாக்கியவர் கிழக்கிலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட தமிழ் மருத்துவரான வேல்முருகு அருளானந்தராஜா ஆவார். கிழக்கு மாகாணத்தைச் சார்ந்த தம்பதிகளுக்கே இலங்கையின் முதல் IVF குழந்தை பிறந்தது. மகப்பேற்று நிபுணரான டாக்டர் அருளானந்தராஜா 1999 நவம்பர் 10ஆம் திகதி பம்பலப்பிட்டியில் உள்ள அவரது நியூலங்கா கொஸ்பிட்டலில் அந்தச் சாதனையை நிகழ்த்தினார்.

அந்தச் சாதனையைச் செய்த டாக்டர் V.அருளானந்தராஜா அவர்கள் சென்ற 2012ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி காலமானார். ஆனால் அவரது மறைவை எமது ஊடகங்கள் பெருமளவில் கண்டு கொள்ளாமை ஏமாற்றம் அளிப்பதாக இருக்கிறது. ■

# பனுவல் பார்வை



## சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவர்

குமரேசன்

தற்போது பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பிக்கப்படும் ஆய்வேடுகள் நூலுருவாக்கம் பெறும் புதிய மரபொன்று தமிழ்ச் சூழலில் உருவாகி வருகின்றது. இந்த வகையில் பேராசிரியர் எஸ்.சிவலிங்க ராஜாவால் மேற்கொள்ளப்பட்ட "சுன்னாகம் அ.குமாரசுவாமி புலவர்: வாழ்வும் பணியும்" என்னும் ஆய்வேடு 1980களில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. இந்த ஆய்வேடு தற்போது திருத்தியும் புதுக்கியும் சேர்த்தும் தவிர்த்தும் நூலுருப்பெற்றது.

தமிழியல் ஆய்வுத்துறைகளிலே குமாரசாமிப்புலவரது பங்களிப்பை தெளிவாகக் கண்டுகொள்வதற்கு இந் நூல் சிறப்பான கட்டமைப்பைத் தருகின்றது. காலமும் சூழலும், வாழ்க்கை வரலாறு, இலக்கண முயற்சிகள், இலக்கிய முயற்சிகள், பிறபணிகள், கற்பித்தல் பணியும் மாணாக்கர் பரம்பரையும், குமாரசுவாமி புலவர் ஒரு மதிப்பீடு என ஏழு அத்தியாயங்களில் நூல் ஆக்கப்பட்டுள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முன் ஈழத்து தமிழ் இலக்கிய பாரம்பரிய நூல் எவ்வாறு வெளிப்பட்டு வந்துள்ளது, அதன் தனித்தன்மைகள் என்ன முதலான விடயங்கள் தெளிவாக அறிமுகம் செய்யப்படுகின்றன. இதைவிட பத்தொன்பதாம் நூற்றாண்டின் புலமைச் சூழல், கல்விச்சூழல் வெளியீட்டு வசதிகள் போன்ற விடயங்களும் தெளிவாக எடுத்துரைக்கப் படுகின்றன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் எழுச்சி பெற்ற அம்சங்கள் மற்றும் அவற்றின் தாக்கங்கள் புதியதொரு கல்விப்பாரம்பரியத்தையும் புதிய தொரு புலமைச் சூழலையும் உருவாக்கின. இவ்வுருவாக்கம் குமாரசுவாமி புலவர்போன்ற தமிழறிஞர்கள் பலரின் தோற்றப்பாட்டுக்கும் காரணியாக அமைந்திருந்தது. புலவர் பத் தொன்பதாம் நூற்றாண்டின் கடைக் கூறிலும் இருபதாம் நூற்றாண்டின் முதற்கூறிலும் வாழ்ந்தவர். புலவரின் ஆளுமையையும் பணியையும் தெளிவாக விளங்கிக்கொள்ள இந்நூல் எம்மை ஆற்றுப்படுத்துகின்றது. அதுமட்டுமல்ல புலவரின் பன்முக ஆளுமைத் திறன்களையும் அடையாளம் காட்டுவதில் நூலாசிரியர் வெற்றிபெற்றுள்ளார் என்றே கூறலாம்.




ஈழத்து தமிழிலக்கண வரலாற்றிலே குமாரசுவாமி புலவருக்கு முக்கியமான இடமுண்டு. இந்தப் பாரம்பரியம் வைரம் பாய்ந்தது. பரம்பரை பரம்பரையாக நிலவிவந்த மரபு வழிக் கல்வியினூடு இவ்விலக்கணப் பாரம்பரியம் செலுத்தோங்கியது. மரபுவழியாக தமிழைக் கற்பித்த ஈழத்து அறிஞர்கள் இலக்கணக் கல்விக்கே முதன்மை கொடுத்தனர். இதனால் இலக்கணம் கற்றல், கற்பித்தல் சார்ந்த புதிய அணுகுமுறைகள் ஈழத்தில் தோற்றம் பெற்றன.

ஆரம்பத்தில் தமிழ் புலமையென்பது மரபிலக்கணப் புலமையின் பேறான தகுதிப்பாடாகவே கருதப்பட்டது. தமிழ் நாட்டவர்களுக்கு முன்னோடிகளாக இலக்கண நூல்களைப் பதிப்பித்தவர்களும் ஈழ நாட்டவர்களே எனலாம். இவ்வகையிலே ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை முதலியோர் வியர்ந்து குறிப்பிடப்படவேண்டியவர்கள். தொல்காப்பியம், இலக்கண விளக்கம், வீரசோழியம், இறையனார் அகப்பொருள் முதலிய இலக்கண நூல்களைப் பரிசோதித்துப் புதுப்பிக்கக்கூடிய ஆற்றலை ஈழத்துத் தமிழறிஞர் பெற்றிருந்தனர். அறாத் தொடர்ச்சியுடன் ஓடிக்கொண்டிருந்த தமிழ்ப் புலமைப் பாரம்பரியம் இவ்வாற்றலைக் கொடுத்தது. இந்தப் புலமை மரபுச் செழுமையின் கையளிப்பு குமாரசுவாமி புலவர் மூலமும் உயிர்ப்பாக இயங்கி வந்தது.

குமாரசுவாமி புலவர் இலக்கணத்தில் மரபுவழியையே பேணிவந்தார். இலக்கண வரம்பு சிதையக்கூடாதென்பதும் வரன்முறையான இலக்கணக் கல்வி அவசியமென்பதும் புலவரின் உள்ளக்கிடக்கையாக இருந்தது. இதற்கு எடுத்துக்காட்டாக புலவர் செந்தமிழ் இதழிலே பல இலக்கிய, இலக்கணக் கட்டுரைகளை எழுதியுள்ளார். இக்கட்டுரைகள் புலவரின் நுட்பமான சிந்தனையாற்றலைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. கற்றவர் என்று கருதப்படுபவர் இலக்கணம், தருக்கம், நிகண்டு முதலியவற்றில் தெளிவாகக் கற்றிருக்க வேண்டுமென்பது புலவரின் கருத்தாகும்.

(63ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கை அரசுக்கு எதிராக தமிழ் நாட்டில் இடம்பெறுகின்ற போராட்டங்களுக்கு தென்னிந்திய திரையுலகத்தினர் வெளிக்காட்டுகின்ற ஒருமைப்பாட்டை ஆட்சேபித்து கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இலங்கை தேசிய கலைஞர்கள் சங்கத்தைச் சேர்ந்த நடிகர், நடிகைகள் ஏப்ரல் 11, 2013 அனுஷ்டித்த 'அதிஷ்டான பூஜை'யின் போது எடுக்கப்பட்ட படங்கள். (ராய்ட்டர்ஸ்)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம்

# கவிதை எழுதிச் செல்லும் கூர்ப்பின் கை

இன்று கவிதைபற்றி பலவாறாகப் பேசப்படுகிறது. மரபுக் கவிதை எழுதிய மூத்த கவிஞர்கள் மரபுக்கவிதைக்குள்ளேயே இன்னும் தம்மை அடைத்துக்கொண்டவர்களாய் இருக்க, இளந்தலைமுறையினர் மரபுக் கவிதையை விட்டு புதுக்கவிதைக்குள் புகுந்துள்ளனர். வேடிக்கை என்னவென்றால், பழைய செய்யுள் மரபை தூக்கியெறிந்து புதுக் கவிதைக்குள் புரட்சி செய்வதாக நினைத்துக் கொள்ளும் இவர்கள், தாம் எழுதும் 'படிக்கட்டு' முறையில் எழுதப்படும் புதுக்கவிதையும் தூக்கி எறியப்படவேண்டிய ஸ்தாபனமாகிவிட்ட, மரபாகி போய்விட்டதென்பதை அறியாது போனதே.

இன்றுள்ள கவிதை எவ்வாறு புதிய தளங்களைத் தொட்டு தரிசிக்கத் தொடங்கியுள்ளதென்பதை நான் ஏற்கனவே எழுதியுள்ளேன். அண்மையில் நான் திசேரா எழுதிய 'ஏவி விடப்பட்ட கொலையாளி' என்ற ஆக்கத்தைப் படித்தேன். இது 2004 டிசம்பர் 26 இல் நம் நாட்டை கபளீகரம் செய்த சுனாமி பற்றிய கதை. இது ஒவ்வொரு தனித் தலைப்புகளைக் கொண்ட சிறு கதைகளாகவும் கூட்டு மொத்தப் பார்வையில் ஒரு நாவலாகவும், இன்னும் சில இடங்களில் கவிதையாகவும் தோற்றுவதைக் காணலாம். இன்னும் ஆசிரியர் சிரத்தை எடுத்திருந்தால் கவிதையாகத் தோற்றும் இடங்களை மேலும் சிறப்புறச் செய்திருக்கலாம். உதாரணமாக 'கடலைச் சபித்தல்' என்ற தலைப்பிலுள்ள பகுதியில் வரும் சில வரிகளைப் பாருங்கள்:

'தூவப்பட்டிருந்த மலர்கள் மேலும் கீழும் ஆடிக்கொண்டு அந்தரித்தன. அவை கடலுக்கானதாக ஒருபோதும் இராது. உப்பு நீரில் மூச்சைக் கரைத்து உருவிழந்துபோனவர்களுக்குத்தான்'.



மு.பொ

இதோ அதன் கீழ் வரும் மற்றொரு வரி;

*'உன் நீர் நாக்குகளை நீட்டி இழுத்தெடுத்து ஊறப்போட்டு சதைப்பிண்டத்தை சப்புக்கொட்டியவன் நீ'*

இதோ அதைத் தொடர்ந்துவரும் இன்னொரு பகுதி;

*'பெண்களை சுகித்துப் புசித்த குழந்தைகள் உடல்புக,*

*குடும்பம் கலைக்க இத்தனை வேட்கை கொண்டனையே!*

*பாசத்தைக் கொஞ்சமேனும் நுகர முடியுமா? அல்லது நுகர்ந்துதான் பார்த்திருக்கிறாயா? கனவுகளைத் தின்னும் கைங்கரியம் தெரிந்து, உப்பிட்டுச் சுவையூட்டி நக்கி வாழ்வை சூனியப்படுத்திப் போன உன்னில் கருவாடு மட்டும் மிதக்கும்'.*

இவ்வாறு ஏவிவிடப்பட்ட கொலையாளி என்ற ஆக்கத்தின் ஒவ்வொரு அத்தியாயத்திலும் கவிதை தலைகாட்டி குமிழ்விட்டுச் செல்வதைக் காணலாம். இதை ஏன் இங்கே குறிப்பிடுகின்றேன் என்றால் இன்று கவிதை எழுதுவோர் நினைப்பதுபோல் கவிதை என்பது ஒற்றைப்பரிமாண வடிவம் கொண்டதல்ல. அது எப்பொழுதும் புதுப்புதுப் பரிமாணங்களை ஒளிர விட்டு புதுப்புது வடிவங்களைக் கோரி நிற்பது என்பதை நினைவூட்டவே.

இதை மேலும் விளக்குவதுபோல் சுனாமி பற்றி கவிஞர் றஷ்மி எழுதிய 'ஆயிரம் கிராமங்களைத் தின்ற ஆடு' என்ற நெடுங்கவிதை பற்றி சொல்வது மிகப்பொருத்தமானது என்றே நினைக்கிறேன்.

மேலே குறிப்பிட்ட திசேராவின் 'ஏவிவிடப்பட்ட கொலையாளி'க்கும் றஷ்மியின் 'ஆயிரம் கிராமங்களைத் தின்ற ஆடு' என்ற ஆக்கத்திற்குமிடையே ஒருவகையான முரண்பாட்டை அடியொற்றிய ஒருமைப்பாடு இருப்பதே ரசனைக்குரியதாகும். திசேராவின் 'ஏவி விடப்பட்ட கொலையாளி' உரைநடையில் எழுதப்பட்ட சிறுகதைகளாக ஒரு நாவலாக தோற்றம் தரும் அதே நேரத்தில் கவிதையாகவும் இடைக்கிடை மினுக்கம் காட்டும். அநேக பந்திகளைக் காட்டலாம். (நான் முன்னர் 'காலம்' சஞ்சிகையில் ஜெயமோகனின் 'காடு' நாவலையும் ராமகிருஷ்ணனின் 'நெடுங்குருதி' நாவலையும் ஒப்பிட்டு விமர்சித்தபோது அவர்களின் நாவல்களில் ஆங்காங்கே தலைகாட்டிய கவிதைப்பாங்கான பந்திகளை எடுத்துக்காட்டியது சிலருக்கு ஞாபகமிருக்கலாம்) ஆனால், றஷ்மியின் 'ஆயிரம் கிராமங்களை தின்ற ஆடு' சுனாமி பற்றிய நெடுங்கவிதையாகும். இதன் விசேடம் என்னவென்றால், இக்கவிதை நூல் கவிதைபோல் ஆரம்பித்து அதன் கவித்துவத்தை இழக்காமலே உரைநடைப்பாங்கில் நகர்த்தப்படுவதே. இதோ அதற்கு உதாரணமாக பின் வரும் வரிகளைக் காட்டலாம். இது கடலைப் பேசவிடும் அலையின் பாடல். 'துறவி' ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன் போல் கூறிச் செல்வது நமக்குள் பன்முக உணர்வுகளை கிளறிச் செல்கிறது.

“எனக்கு குழந்தைகள் வேண்டாம்
பெண்கள் வேண்டாம்
ஆண்களும் வேண்டாம்
என்னில் அள்ளி வந்த செல்வங்கள் வேண்டாம்
நான் புதிய எல்லைகளுக்குச் செல்கிறேன்
எனது வாசலில்
வீசி எறிந்திருக்கிறேன் உங்களை
பொறுக்கிக் கொள்ளுங்கள்”

மிக மிகச் சாதாரண பேச்சுவழக்கில் பயன்படுத்தப்படும் சொற்களைக்கொண்டு விபரிக்கப்படும் விடயம் சூழலின் பின்னணியால் கவிதைக்கு கவிதையாகவும் உரைநடைக்கு உரைநடையாகவும் சிறப்புறுகிறது. இவ்வாறு கவிதை என்பது வித்தியாசமான வடிவங்களில் வரத் தொடங்கியுள்ளதை இன்று புதுக்கவிதை எழுதுவதாகக் கூறும் 'கவிஞர்கள்' அறிந்துகொண்டதாகத் தெரியவில்லை.

இதனால்தான் நான் மஹாகவியின் அகலிகை என்ற செய்யுள் ஊடகத்தில் தந்த நெடுங்கவிதையையும் அதே அகலிகையின் கதையை 'சாப விமோசனம்' என்ற பெயரில் புதுமைப்பித்தன் சிறுகதை வடிவில் தந்ததையும் ஒப்பிட்டுக் கூற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டேன். புதுமைப்பித்தனின் ஆக்கம் கீறிவிடும் துயரம் தோய்ந்த உணர்வலைகள் மனதை எங்கெல்லாமோ இழுத்துச்செல்கிறது. இத்தகைய உணர்வெழுச்சியை மஹாகவியின் ஆக்கத்தில் காண முடியாதென்பது எனது அனுபவம். இது இவ்விரு ஆக்கங்களையும் படித்தவர்களினது அபிப்பிராயமும் கூட.

அப்படியானால் இங்கே எது கவிதை? மஹாகவி செய்யுளில் எழுதிய அகலிகை கவிதையா? புதுமைப்பித்தன் சாபவிமோசனம் என்ற பெயரில் எழுதிய சிறுகதை கவிதையா? அப்படிப் பார்க்கப்போனால் கவிதை என்ற ஒன்றே இன்மைப்பொருளாக மிதக்கத் தொடங்கிவிடும். இது ஒரு முக்கிய பிரச்சினை. அதாவது இன்று கவிதை என்ற ஒன்று எல்லா கலை இலக்கிய ஆக்கங்களின் ஊட்டப்பொருளாக இயங்குவதோடு, பல்வகை வடிவங்களில் தனியாக கவிதையாகவும் இயங்குவது கண்கூடு. இதுபற்றி இன்றைய ஆய்வாளர்கள் சிந்திக்க வேண்டும். இவர்கள் சிந்தனையை மேலும் அகலப்படுத்துவதற்கு அஸ்வ கோஸின் 'வனத்தின் அழைப்பு'

ஜபாரின் 'தரப்பட்ட அவகாசம்' எவ்வாறாயினும் ஆழமாகச் சிந்திக்க வேண்டிய தேவை இன்று நமக்கு ஏற்பட்டுள்ளது. ■

*(60ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

இதனை நடைமுறைப்படுத்துவதிலும் தனது கல்வி முயற்சிகளிலும் வலியுறுத்தி வந்தார்.

குமாரசுவாமிப் புலவர் தமிழிலக்கணம், இலக்கிய உரைகள் கண்டனம், உரைநடை செய்யுள், பதிப்பு, அகராதி, புராணப்படனம், கற்பித்தல் முதலிய பல்வேறு துறைகளிலும் தமது பங்களிப்பினை வழங்கியுள் ளார். இந்தப் பின்புலங்களைத் தெளிவாக இந்நூல் எடுத்துக் காட்டுகின்றது. நாவலர் மரபின் ஒரு முனைப்பாக புலவர் விளங்கினார் என்பதை பேராசிரியர் சிவலிங்கராஜா ஆய்வு ரீதியாக வெளிப்படுத்துகின்றார். புலவரின் ஆத்மாவை ஆட்கொண்டவராக ஆறுமுகநாவலர் திகழ்ந்துள்ளார் என்பதனை இந்நூலை வாசிக்கும் முடிவில் வாசகர் உணர்ந்துகொள்ள முடியும்.

வரலாற்று ரீதியாக ஈழநாட்டுத் தமிழறிஞர்களில் தமிழ்நாட்டு தமிழ் அறிஞர்களில் சிலர் அங்கீகரிக்காத மனப்பாங்கு நீண்ட காலமாகவே நிலவி வந்துள்ளது. இப்பண்பு நாவலரினூடு புலப்படுத்த தொடங்கிவிட்டபோதி லும் சி.வை.தாமோதரம்பிள்ளைக்கு எதிராக நரசிங்கபுர வீராசாமி முதலியார் எழுதிய கண்டனத்தோடு தெரியவந்தது. அக்கண்டனத்திலே ''யாழ்ப்பாணம் ஒரு சிறுநூலையேனும், ஒரு சிற்றுரையேனும் செய்குநரில்லாத தேசம்'' என்று இடம்பெற்றுள்ளது. இந்தத் தொடர் ஈழத்துத் தமிழறிஞரிடையே தம் நாட்டுப் பற்றுணர்வினை அதிகரிக்கச் செய்தது. ஆறுமுகநாவலர் தொடக்கம் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை வரை வைரமாகப் பாய்ந்து வந்த தமிழக எதிர்ப்பிற்கும் மேற்காட்டிய கண்டனமே மூலாதாரமாக அமைந்ததெனலாம். தமிழ்நாட்டு தமிழ் அறிஞர்களுக்கும் ஈழநாட்டு தமிழறிஞர்களுக்குமிடையே ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக ஈழநாடு பற்றி, யாழ்ப்பாணம் பற்றி பல நூல்களும் கட்டுரைகளும் வெளிவந்தன.

ஈழம்பற்றியும் ஈழத்துத் தமிழறிஞர்கள் பற்றியும் கருத்துவேறுபாடுகள் நிலவிய சூழ்நிலை யிலேயும் குமாரசுவாமிப்புலவர் தமிழ்நாட்டு அறிஞர்களால் மதிக்கப்பட்டுள்ளார். இவர் ஈழத்தேசிய உணர்வுப் பின்னணி யிலே உருவான அறிஞராகவும் ஈழத்தேசியத்தைப் பேணும் பண்புடையவராக வும் காணப்படுகின்ற அதேவேளை, ஈழம் கடந்த புலமையும் புகழும் உடையவராகவும் திகழ்ந்துள் ளார் என்பதனை பேராசிரியர் சிவலிங்கராஜா தனது ஆய்வு வழியாக நிரூபித்துள்ளார். இந்த நூல் குமாரசுவாமிப் புலவரின் வாழ்வும் பணியும் மட்டுமன்றி நமது ஈழத்துத் தமிழ்ப்புலமை பாரம்பரியத்தின் செழுமைகளையும் தொடர்ச்சிகளையும் அடையாளப்படு த்தும் ஒரு ஆவணமாகவும் வெளிப்பட்டுள்ளது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைசிப் பக்கம்

# புலம்பெயர் வாழ்வில் தாய்மொழி பேணுதல்

மொழி நமது கலாசாரத்தின் அங்கமாகும். மொழிப் பிரச்சினைதான் இனப் பிரச்சினையின் கருப்பொருளானது என்பது இலங்கை சந்தித்திருக்கும் நிதர்சனம்.

இன்னொரு மொழியைப் படிக்க மறுத்தது எங்களுக்கு முந்திய தலைமுறை. அதற்கான காரணம் இருந்தது. ஆனால், எமது சந்ததியினரது வாழ்க்கை இன்று உலக மொழிகளில் இயங்க வேண்டியுள்ளது காலத்தின் கட்டாயம். நமது மொழி சூழ்நிலைக் கைதியானது தவிர்க்க முடியாத துயரமே.

ஆனால்,வெளிநாடுகளில் மொழியை தமிழ்ப் பள்ளிக் கூடங்கள் மட்டும் பேணி விடும் என்று அலட்சியமாக இருந்தது நமது தவறு.

எனக்குத் தெரிந்த சில குடும்பங்களில் தமிழ் மொழி கற்பிக்கும் பள்ளிக்கூடங்களில் வாங்கிய பரிசுக் கோப்பைகளை வைக்க இடம் இல்லாத பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு குறித்த காலத்தின் பின் தமிழ் மொழி கற்பிக்கும் பள்ளிக்கூடங்களுக்குப் போவதைத் தவிர்த்தவர்கள். அதன் பிறகு மொழியின் அடிப்படைகளைக் கூட மறந்து போனவர்கள். பேச்சுத்தமிழ் சிங்கள நண்பர்கள் தமிழ் பேசுவது போல இருக்கும்.வீட்டில் இருக்கும் பாட்டன் பாட்டியினருடன் இந்த மொழி மறதியினால் பேசாமலே இருப்பவர்கள்.

இதைத் தமிழ் மொழி கற்பிக்கும் பள்ளிக்கூடங்களின் பிழை என்று நிச்சயமாகக் கூறமாட்டேன். மொழிப் பேணலின் அடிப்படைகளை பெற்றோர் மறந்து போன காரணமே இந்தச் சரிவின் பெரும் காரணமாக எனக்குப்படுகிறது. அவுஸ்திரேலிய அரசு தாய் மொழி பராமரிப்புக்கு (Mother Tongue Maintenance) முக்கியத்துவம் வழங்குகிறது. தமிழ் மொழி கற்பிக்கும் பள்ளிக்கூடத்தினால் மட்டுமே தமிழை தொடர்ந்து பராமரிக்க உதவ முடியாது. தாய் மொழி என்பது தாயின் வாய் மொழியால் முதலில் கற்ற மொழி என்பதை நாம் நினைவில் கொள்வோம். தாய் மொழி வீட்டிலேயே பராமரிக்கப்படவேண்டும்.

தாய் மொழி கட்டாயத்தினால் கற்பிக்கப்படவேண்டிய ஒன்றல்ல. கடினமான பரீட்சைகளாலும், பேச்சுப் போட்டிகளினாலும், திறமைகளினாலும், பரிசுக் கோப்பைகளினாலும் நிரூபிக்கப்படவேண்டிய ஒன்றுமல்ல. புலன்களினால் உள்வாங்கி புலன்களினால் வெளிப்படுத்துவதனால் இயல்பாகவே வரவேண்டிய ஒன்றாகும். அடிப்படையான மொழியறிவு, எளிய



கலாநிதி சந்திரிகா சுப்ரமண்யன்
வழக்கறிஞர் சிட்னி

பேச்சு, சிறிய அளவு வாசிப்பு, தொடர்பாடல் இவை பராமரிக்கப்பட்டாலே போதும். தாய் மொழி பராமரிப்பு தானாகவே நடக்கும்.


1978 முதல் நான் எழுத்துப் பணியில் இருக்கிறேன். எனது நூல்கள் அரசு விருதுகள் பெற்றுள்ளன. அண்மையில் நான் எழுதிய பங்குனி உத்திரம் பற்றிய இரண்டு பக்க கட்டுரை ஒன்று சிட்னி மாத இதழில் வெளியானது. அதை படித்த ஒரு இளம் பெண், இந்தக் கட்டுரை நன்றாக இருக்கிறது, எழுத்து எளிமையாகவும், விடயம் ஆர்வமூட்டுவதாகவும் இருக்கிறது. நீங்கள் இது போல நிறைய எழுதினால் என் போன்றவர்கள் படிக்க விரும்புவோம் என்றார்.

என் எழுத்து தொடர்பான நிறைவு முதல் முறையாக என்னை குளிர்வித்தது. காரணம் அந்தப் பெண் அவுஸ்திரேலியாவிற்கு ஐந்து வயதில் புலம் பெயர்ந்து வாழும், தமிழ் பயிற்றும் பள்ளிக்கூடத்தில் ஒரு நாளும் படிக்காத 21 வயது பெண். வேறு யாரும் அல்ல என் மகள் தான்.

தமிழ் வார இதழ்களில் நகைச்சுவை துணுக்குகளை படிக்கவும், கொழும்பில் உள்ள என் முதிய உறவினர்களுடன் தொலைபேசியில் பேசவும், பாடல்களுக்கு பொருள் பிரித்து சொன்னதும், அவளுக்கு கைப்பிடித்து என் உறவினர்களுக்கு தமிழ் கடிதம் எழுத கற்றுத் தந்ததும் நான். இதற்காக நான் மெனக்கெட்டது ஒரு வாரத்தில் சில மணித்துளிகளே. என் தாய் மொழிக்கு, அடுத்த தலைமுறைக்கு கைபிடித்து கொடுத்து நான் என் கடமையைச் செய்துவிட்ட திருப்தி என்னுள். தாய் மொழியைப்பேணுவோம். ■

(lawyer.chandrika@gmail.com)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and published by Express Newspapers (Ceylon)(Pvt)Ltd,at No.185,Grandpass road,Colombo -14, Sri Lanka.